REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2022 ஜுன் 17 வெள்ளிக்கிழமை

90 ANNIVERSARY 1932 - 2022

வரு. 90 இல. 141 | Friday 17, June, 2022 | 20பக்கங்கள் | 40/-

MOBILE
TALK TEXT DATA
BOOSTER 505
ஒரே பக்கேஜில் TALK TEXT DATA ஆகியவற்றை BOOST செய்யுங்கள்
Voice 1777 நிமிடங்கள்
ஏனைய வலையமைப்பிற்கு 1000 நிமிடங்கள் + M2M 777 நிமிடங்கள்
Text 1777 sms
ஏனைய வலையமைப்பிற்கு 1000 SMS + M2M 777 SMS
Data 2GB anytime data
மேலதிக டேட்டாவையும் செயற்படுத்திடலாம்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (வரிகள் உள்ளடக்கப்பட்ட கட்டணங்கள்)
TRC/M/PRO/22/03
SLTMOBITEL நிகரற்ற இணைப்பு

## பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்ளும் வேலைத்திட்டம் விரைவில்

### பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளதாக பிரதமர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு யோசனைகள் உள்ளடங்கிய விரிவான திட்டமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான விசேட பேச்சுவார்த்தையின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி பேச்சுவார்த்தை கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளதுடன் அது 06

## கொழும்பு - யாழ்ப்பாணம் விசேட புகையிரத சேவை

### இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பம்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை கருத்திற்கொண்டு யாழ்ப்பாணம் கொழும்பு விசேட புகையிரத சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண புகையிரத நிலைய பிரதம அதிபர் தி.பிரதீபன் 06

## எரிபொருள் நிறுவனங்களுக்கு 735மில். டொலர் நிலுவையில்

### இந்தியாவிடமிருந்து 500 மில். பெறுவது குறித்து பேச்சு ஆரம்பம்



எரிபொருள் நிறுவனங்களுக்கு 735 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தவேண்டியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, மீண்டும் நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் திகதி 06

## தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு

# பாவனையாளர் கட்டணம் ரூ. 7,500 மில். நிலுவையில்

### ஜனாதிபதி முன்பாக சபையின் தலைவர் அதிர்ச்சித் தகவல்

**2022 ஏப்பிரல் வரை வீடுகள், வர்த்தக, அரச நிறுவனங்கள், பாடசாலைகள் உட்பட செலுத்த வேண்டிய கட்டண நிலுவை குறித்து எடுத்துரைப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியிலுள்ள நீர் பாவனையாளர்கள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 7500 மில்லியன் ரூபா கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் உள்ளிட்டவைகளே மேற்படி கட்டணத்தை செலுத்துவதிலிருந்து தவறியுள்ளதாக ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றுள்ள விசேட பேச்சுவார்த்தையின் போது மேற்படி சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்வழங்கல் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றுள்ளது. இதன்போது நிர்மாணப் பணிகள் நிறைவடையும் நிலையிலுள்ள சிறிய மற்றும் பாரிய குடிநீர்த் திட்டங்களை விரைவில் நிறைவு செய்து மக்களின் பயன்பாட்டுக்கு கையளிக்குமாறு ஜனாதிபதி குறித்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதற்கிணங்க உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதியின் கீழ் தற்போது 2337 பாரிய, சிறு மற்றும் நடுத்தர அளவிலான குடிநீர்த் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் இதன்போது தெளிவுபடுத்தியுள்ளனர். 06

## எரிபொருள் பெறுவதற்காக மக்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம்



நாட்டின் பல பகுதிகளிலும் தொடரும் நிலை

எரிபொருளை கிரமமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாட்டின் பல பகுதிகளில் நேற்றும் (16) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதனிடையே தமக்கான எரிபொருளை உரிய முறையில் பெற்றுத்தருமாறு கோரி யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியை சேர்ந்த விவசாயிகள் நேற்று கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனிடையே தெமட்டகொடை பகுதியில் எரிபொருள் கோரி முன்னெடுக்கப்பட்டிருந்த போராட்டம் காரணமாக குறித்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. அத்துடன் கொழும்பு பேஸ்லைன் வீதியில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எரிபொருளை உரிய முறையில் 06

### 700 மில். கடன்வசதியின் கீழ் கிடைக்கும்

## இறுதி டீசல் கப்பல் நாட்டை வந்தடைந்தது

### 40,000 மெற். தொன் டீசல் கிடைக்கவுள்ளது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கிடைக்கவுள்ள இறுதி எரிபொருள் கப்பல் 40,000 மெற்றிக் தொன் டீசலுடன் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது. 06

### எரிபொருள் கொள்வனவுக்கு தொடர்ந்தும் நடவடிக்கை

## பிரதமர் தலைமையில் முக்கிய பேச்சுவார்த்தை

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டிற்கு கிடைத்துள்ள 40,000 மெற்றிக் தொன் டீசலுடன் தற்போது எம்மிடம் கையிருப்பிலுள்ள எரிபொருளைக் கொண்டு எரிபொருள் விநியோகத்தை முகாமைத்துவம் செய்ய முடியும் என எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அத்துடன் தொடர்ந்தும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான 06

### நாடு எரிபொருள் நெருக்கடியிலிருந்து மீள

## உதய கம்மன்பிலவின் பத்து யோசனைகள்



எரிபொருள் நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக குறுகிய காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பத்து யோசனைகளை பிவித்துரு ஹெல உருமயவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில முன்வைத்துள்ளார்.

1. 2000 CCக்கும் அதிகமான எஞ்சின் திறன் கொண்ட அனைத்து கார்கள் மற்றும் SUVகளை தற்காலிகமாக திரும்பப் பெறுதல்
2. வாரத்திற்கு மூன்று நாட்கள் திங்கட்கிழமை, 06

### சுமார் 3,500 பேக்கரிகள் மூடிய நிலையில்

## பேக்கரி உற்பத்திகளின் விலை மீண்டும் அதிகரிப்பு

### தவிர்க்க முடியாது என சங்கம் சுட்டிக்காட்டு



நாட்டிலுள்ள சுமார் 3,500 பேக்கரிகள் தற்போது மூடப்பட்டுள்ளன. பேக்கரி உற்பத்திகளின் விற்பனை சடுதியாக குறைவடைந்துள்ளதால் எதிர்காலத்தில் அவற்றின் விலையில் ஏற்படும் உயர்வினை தடுக்க முடியாது என இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன 06

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு இந்ததீர்மானத்தைமேற்கொண்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. 06

### தேர்தல் முறை சீர்திருத்த தெரிவுக்குழு

## தலைவரது அறிக்கைக்கு பல கட்சிகளும் எதிர்ப்பு

### பாராளுமன்றிலும் எதிர்ப்போம் – மனோ



பாராளுமன்ற தேர்தல் முறையை விகிதாசார முறையில் இருந்து கலப்பு முறைக்கு மாற்றும் சிபாரிசை முன்வைக்கும் தேர்தல் முறை சீர்திருத்த தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் ஒருதலைபட்ச இறுதி அறிக்கைக்கு தெரிவுக்குழுவின் பெரும்பாலான 06

### வத்தளை கங்கையில் 05 வயது மகனை வீசியெறிந்த தாய்

## பிள்ளையை வாழவைக்க போதிய வருமானம் இல்லாமையாலேயே தற்கொலை முயற்சி

### கைதான பெண் பொலிஸாரிடம் வாக்குமூலம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வத்தளை கதிரான பாலத்திலிருந்து தனது ஐந்து வயது பிள்ளையை களனிகங்கையில் வீசியெறிந்து தாமும் தற்கொலை செய்துகொள்ள முயன்ற பெண்மணியை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து அவரது உடலில் ஏற்பட்டுள்ள கடுமையான நோய் 06

## 'கிழக்கு முதலீட்டு வாய்ப்பு' நியூஸிலாந்து தூதுவரிடம்

### கிழக்கு ஆளுநர் அநுராதாவினால் கையளிப்பு



முதன்முறையாக கிழக்கு மாகாணத்தில் தயாரிக்கப்பட்ட புதிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பான விசேட அறிக்கையை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் நேற்று (16) காலை இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கேல் எட்வர்ட் அப்பிள்டனிடம் சமர்ப்பித்தார்.

இதன் மூலம் மாகாணத்தில் முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு உதவுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் நியூஸிலாந்து உயர் ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று (16) காலை திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் இருவருக்கும் இடையிலான இந்த விசேட சந்திப்பு இடம் 06



## எரிபொருளுக்கு வரிசையில் நின்ற மேலுமொருவர் மரணம்

பாணந்துறை பகுதியில் சோக சம்பவம் 03

## தரம் ஒன்று மாணவர் அனுமதி 2023; இன்றைய தினகரனில் விண்ணப்பம், வழிகாட்டல்

பக்கம் 13 14 15

## மேல் மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு வாரம்

### தீவிரமாக அமுல்படுத்த தீர்மானம்



மேல் மாகாணத்தில் நேற்று (16) தொடக்கம் டெங்கு ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆகக்கூடுதலான டெங்கு நோயாளர்கள் 06

## அரச ஊழியருக்கு வெள்ளி விடுமுறை

### சுற்றறிக்கை வெளியானது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க ஊழியர்களுக்கு பிரதி வெள்ளிக்கிழமையும் விடுமுறை வழங்குவதற்கான அரசாங்கத்தின் சுற்று நிருபம் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. 06

## நுரைச்சோலையின் ஒரு பகுதி மூடப்படுகிறது

### மின் வெட்டு மேலும் தொடரலாம்



நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதி நாளை நள்ளிரவு 12 மணி முதல் மூடப்படும் என இலங்கை 06

### ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற

## கட்டுவாப்பிட்டிய ஆலய சூழலில் கைக்குண்டு; பொலிஸார் நேற்று மீட்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் 06

இஸ்லாமியத் தமிழ் உலகு தந்த இணையில்லா

# குர்ஆன், ஹதீஸ் கலை வல்லுநர் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா

**20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈழத்தின் தென் கரையாம் திக்குவலை என்ற ஊரில் 1899இல் உதித்து வெலிகமை எனும் ஊரிலே வாழ்ந்து தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மகத்தான மார்க்கப் பணியாற்றி தமிழ் நாட்டில் திருமுல்லைவாசலில் 1966 துல்கஃதா பிறை 17இல் மறைந்த இஸ்லாமிய மார்க்க மேதை குதுபுகள் திலகம் இமாம் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா அல் ஹாஷிமிய் (ரஹ்) அவர்களை அறியாதவர்கள் சமகாலத்தில் எவரும் இருந்திருக்க முடியாது.**

அந்த அளவு இவர்களின் தன்னலமற்ற தூய்மையான சமுதாயப் பணி இவர்களுக்கென்று தனி ஒரு அடையாளத்தை இஸ்லாமிய உலகில் நிலைபெறச்செய்தது. இலங்கை முஸ்லிம் அறிஞர்கள் வரலாற்றில் மறைக்காமல் பொன் எழுத்துக்களால் அழுத்தமாகப் பதியப்பட வேண்டிய தலைசிறந்த முஸ்லிம் ஆளுமைகளுள் ஒருவர். இன்று அவர்களின் 58ஆவது நினைவு தினமாகும்.

ஒரு இஸ்லாமிய மார்க்க அறிஞர் பெற்றிருக்கவேண்டிய அனைத்து தகைமைகளையும் பரிபூரணமாகப் பெற்று உலமாக்களின் நட்சத்திரமாக திகழ்ந்த இவர்கள் நபிகள் நாயகத்தின் 33ஆவது தலைமுறையில் தோன்றியது குறிப்பிடத்தக்கது. குறுகிய காலம் தென்னிலங்கையில் ஆரம்ப கல்வியைப் பெற்று தமது 10ஆவது வயதில் தென்னிந்தியாவிற்கு பயணம் செய்து அங்கு தலைசிறந்த கலைக்கூடங்களில் கசடறக் கற்றுத்தேர்ந்த அவர்கள் வட இந்தியா சென்று அங்கு லாகூர் இஸ்லாமியக் கலைக்கூடத்திலும் தாருல் உலூம் தேவ்பந்த் கலைக்கூடத்திலும் கற்று லாகூர் முதல்தர மௌலவி பஜில் மற்றும் தேவ்பந்த் பஜிலே அஉலா ஆகிய பாடங்களையும் பெற்று அங்கேயே குறுகிய காலம் ஷஃபிஈ, ஹனஃபி, மாலிகி, ஹன்பலி ஆகிய நான்கு மத்ஹபுகளுக்குமுறிய பேராசிரியராகக் கடமையாற்றினார்கள்.

தங்களின் 16ஆம் வயதிலேயே அறபியில் திறம்படக் கவிபாடும் ஆற்றல் பெற்ற மௌலானா அவர்கள் மாதிஹுர் ரஸூல், ஷாஇர் எனும் புகழ்ப் பெயர்களால் கௌரவிக்கப்பட்டார்கள். இளம் வயதிலேயே ''ஃபத்வா'' எனும் மார்க்கத் தீர்ப்பு வழங்கும் வல்லமை பெற்றிருந்தார்கள். இவர்கள் அறபு, தமிழ், ஆங்கிலம், உர்து. ஃபார்ஸி, ஹிந்தி, மலையாளம், சிங்களம் முதலிய வேறு பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்ததோடு அறபியிலும், தமிழிலும், உர்துவிலும் சிறந்த கவிஞராக விளங்கினார்கள்.

காதிரிய்யாத் தரீக்கத்தின் கிலாபத்தையும், இதனுடன் இணைந்ததாக ஷாதுலிய்யா, ஜிஃப்ரிய்யா, நக்ஷபந்திய்யா ஆகிய தரீக்காக்களின் பைஅத்தையும் (தீட்சை), கிலாபத்தையும் (உத்தரதிகாரம்) தமது தந்தையார் கௌதுஸ் ஸமான் ஜமாலிய்யா முஹம்மது மௌலானல் காதிரிய்யுல் பஃதாதி (ரஹ்) அவர்களின் மூலமாக பெற்று உள்ளும் புறமும் சிறந்த ஆலிமே ரப்பானியாகவும் மெய்ஞ்ஞான அறிவிலே பூரணம் அடைந்து ''குதுபுல் ஃபரீத்" எனும் உயர் நிலையெய்தினார்கள். காதிரிய்யாவின் மூலத்திலிருந்து ஹக்கிய்யதுல் காதிரிய்யா எனும் கிளையை நிறுவி அதன் ஆத்மீக வழிகாட்டியாகவும் ஷெய்காகவும் திகழ்ந்தார்கள்.

நபிமொழித் தொகுப்பான ''புஹாரி ஷரீபு'' க்கு ''அல் இக்துத் தராரீ ஃபீ ஷரஹி ஸஹீஹுல் புஹாரி, எனும் பெயரில் அறபு மொழியிலேயே நான்கு பாகங்களாக விரிவுரை. இதுவே இஸ்லாமியத் தமிழ் அறிஞர் ஒருவரால் அறபியில் இயற்றப்பட்ட ஒரே ஒரு விளக்கவுரையாகும். 1959 ஆம் ஆண்டு ஹஜ்ஜில் முடிந்து நடைபெற்ற உலமாக்கள் மகா சபைக்கு தலைமை தாங்கும் பொறுப்பை வழங்கி ஷெய்குல் அறப் எனும் பட்டத்தையும் அறபுலகம் இவர்களுக்குச் சூட்டி அழகு பார்த்தது. ஈழத்தவர் ஒருவர் அறபுலகில் உலமாக்கள் மாநாட்டுக்கு தலைமை வகித்தது இதுவே முதலும் கடைசியுமாக இருந்தது. ஞான மாமேதை அப்துல் கரீம் ஜீலிய் (ரஹ்) அவர்களின் ''இன்ஸானுல் காமில்'' எனும் ஞான நூலுக்கு ''இஹ்ஸானுல் வாஸீல் ஃபீ ஷரஹி இன்ஸானில் காமில்''எனும் அறபு விளக்கவுரையைத் தந்தார்கள்.





அறபு உலகில் இன்ஸானுல் காமில் நூலுக்கு 600 ஆண்டுகள் கழிந்தும் இன்று வரை எவராலும் விளக்கவுரை எழுதப்படவில்லை எனும் போது மௌலானா அவர்களின் ஆத்மீக உச்சத்தை இது பறைசாட்டுவதாக உள்ளது. மெய்ஞ்ஞான அனுபவத்தை ''யவானிஉ அது மாருன் நிஉமாஉ'' எனும் பெயரில் அறபியில் எழுதி ''கலிமா விருட்சக்கனிந்த கனி''என அதற்கோர் தமிழ் மொழிபெயர்ப்பும் வழங்கினார்கள். இஸ்லாமியத் தமிழ் உலகில் ஆத்மீக அனுபவம் கூறும் ஒரே ஒரு கவிதை நடையில் அமைந்த நூல் இதுவேயாகும். ''காமூஸ் அறபி – வ அர்வி'' எனும் அறபு அறபுத்தமிழ் அகராதியும். அதிலே பல்லாயிரம் புதுச் சொற்கள் சேர்த்த அறபு – தமிழ் அகராதியும் வெளியிட்டார்கள். இதுவே இஸ்லாமியத் தமிழ் உலகில் வெளியான முழுமை பெற்ற முதல் அறபு தமிழ் அகராதியாகும். ''ரிஸாலா கௌதிய்யா'' வுக்கு ''இரட்சண்ய பிரபந்தம்'' எனும் மொழிபெயர்ப்பும், இமாம் பூஸரி (ரஹ்) அவர்களின் 'கஸீததுல் முளரிய்யா'வுக்கு 'ஃபரீததுன் நள்ரிய்யா ஃபீ தஃமீஸி கஸீததிம் முளரிய்யா' எனும் பெயரில் ஐந்தடியாக்கி (தஃமீஸ்) செய்தார்கள், 'நஃப்ஹது மத்ஹில் ஜமீல் அபில் ஹஸன் அலிய்யில் ஜலீல்' எனும் பெயரில், இமாம் ஷாதுலி (ரஹ்) அவர்களின் பெயரில் ஒரு புகழ்மாலை இயற்றினார்கள். எகிப்தின் மாபெரும் கலைக்கூடமான அல் அஸ்ஹர் கலாசாலை ஆசிரியப் பணிக்கு இவர்களை அழைத்தது என்றாலும் தாம் பிறந்த மண்ணுக்கு சேவைபுரியும் நோக்கில் அவ்வழைப்பை மறுத்து விட்டார்கள். ''ராதிபதுல் ஹக்கிய்யதில் கதிரிய்யா''எனும் பெயரில் ராதிபும் கோர்வை செய்து, மற்றும் பல நூறு பாமாலைகளையும் யாத்துள்ளார்கள்.

## இன்று அன்னாரது 58ஆவது நினைவு தினம்

அகில இலங்கை உலமா போர்ட் தலைவராகவும், அலுத்கமை உலமா சபைத் தலைவராகவும் கடமைபுரிந்து அக்காலத்தில் தலைதூக்கும் அனைத்துவிதமான மார்க்கத்தீர்ப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு தெளிவானதும் காத்திரமானதுமான தீர்வினை வழங்கி நின்றார்கள். 1951 காலப்பகுதியில் சிலோன் கவர்மென்ட் கல்வி இலாகாவின் அறபுப் பரீட்சை சபைத் தலைவராகவும் கடமைபுரிந்தார்கள். வெளிநாடுகளில் அறபுக் கற்கைகளை முடித்து ஆலிமாக வெளியாகும் மாணவர்கள் இலங்கை அரசின் அரசினர் பாடசாலைகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும், பல்கலைக் கழகத்திற்கும் அறபு கற்பித்துக் கொடுக்க தகுதி வாய்ந்தவர்களாக உள்ளனரா என்று பரிசீலனை செய்து தகுதிச் சான்றிதழ் வழங்கும் பிரதான பொறுப்பில் யாஸீன் நாயகம் அவர்கள் அரசினால் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அறபுப் பிரிவின் முதலாவது பீடாதிபதியாக கடமை புரிந்த கலாநிதி அஹ்தர் இமாம் (S.A. இமாம் கலாநிதி சுக்ரியின் ஆசிரியர்) அவர்களுடன் இணைந்து இலங்கை முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டிற்கு சிறந்த முன்னெடுப்புக்களைச் செய்தார்கள். S.A. இமாம் அவர்கள் யாஸீன் மௌலானா அவர்களைப்பற்றி குறிப்பிடும் போது''மௌலானா அவர்களின் அறபுப் பேச்சு வழக்கு (accent) நான் அல்குர்ஆன் அருளப்பட்ட பூமியிலா இருக்கிறேன் எனும் அளவுக்கு உணர்வுபூர்வமாக இருந்தது'. அறிஞர் A.M.A. அஸீஸ்,T.B. ஜாயா, டாக்டர் M.C.M. கலீல்,Sir ராஸிக் பரீத், முன்னாள் கல்வி அமைச்சர் Dr. பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோருடன் இணைந்து இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்வி, கலாச்சார, அறபு மொழி வளர்ச்சிக்கும் அரசியல், பொருளாதாரம், சமூக நல மேம்பாட்டுக்கும் பெரும் பங்காற்றினார்கள்.

அறிஞர் A.M.A. அஸீஸ் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்திற்கு ஆலோசகராகவும் காத்திரமான பங்காற்றினார்கள். மதுரஸா பாடத்திட்ட புனர்நிர்மாண சபையின் பிரதான ஆலோசகராகவும் அங்கத்தவராகவும் கடமை புரிந்தார்கள்.

இந்தியா யூனியன் முஸ்லிம் லீக்கின் ஸ்தாபகத் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் அவர்கள், முன்னாள் முஸ்லிம் லீக்கின் தலைவரான முனீருள் மில்லத் A.K. அப்துஸ் ஸமத் சாஹிப் போன்ற பெரும் தலைவர்களும் யாஸீன் மௌலானா நாயகத்துடன் தொடர்பைப் பேணி முஸ்லிம் சமுதாயத்தை அரசியல் ரீதியாக சிறந்த முறையில் வழிநடத்திச் செல்ல உறுதுணையாக ஆலோசனைகளையும் பெற்றுவந்தார்கள். இன்னும் அகில வெலிகாமம் முஸ்லிம் லீக் தலைவராகவும் யாஸீன் மௌலானா நாயகம் பணியாற்றினார்கள்.

இலங்கை முஸ்லிம் அறிஞர்கள் வரலாற்றில் மௌலானா அவர்கள் தமது அறிவையும் ஞானத்தையும் எல்லா வகையிலும் பயன்படுத்தி சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட மகத்தான தலைவராவார்கள்.

**ஹிஸாம் ஹிஜாஸ்...**


வலிகாமத்தைச் சேர்ந்த ஜமாலியா சையத் யாஸீன மௌலானா அல்ஹாஷிமி அவர்கள் ஹஜ் யாத்திரையின் நிமித்தம் தேற்றிரவு தலைமன்னர் செயில் வண்டிமூலம் பம்பாய்க்குப் புறப்படுகையில் ஏராளமான அன்பர்கள் கூடி வழியனுப்பிவைத்தனர். அப்பொழுது எடுக்கப்பட்ட படம் இது.

---

# பட்டினி நெருக்கடியால் உலகில் இடம்பெயர்வுகள் அதிகரிக்கும்

## ஐ.நா அகதிகள் நிறுவனம் எச்சரிக்கை

உக்ரைனில் ரஷ்யாவின் போர் உலகில் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை முதல் முறை 100 மில்லியனை தாண்டுவதற்கு காரணமாகி இருக்கும் நிலையில் பட்டினி நெருக்கடி மேலும் பலரை இடம்பெயரச் செய்யும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்வதை தடுப்பதற்கு உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து தீவிரம் அடைந்திருக்கும் உலக உணவு பாதுகாப்பின்மை நெருக்கடிக்கு தீர்வு காண்பது முக்கியமாக உள்ளது என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் பிலிப்போ கிரான்டி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

“அதிகரிக்கும் எண்ணிக்கை எவ்வளவு என்று என்னிடம் கேட்டால் அது எனக்குத் தெரியாது. ஆனால் அது பெரும் எண்ணிக்கையாக இருக்கும்” என்று அவர் குறிப்பிட்டார்.



## சர்வதேச செய்திகள்

உலகின் ரொட்டிக் கூடை என்று அழைக்கப்படும் உக்ரைன மீது ரஷ்யா மேற்கொண்டிருக்கும் முழு வீச்சிலான படையெடுப்பு, சர்வதேச அளவில் தானியங்கள் மற்றும் உரத் தட்டுப்பாட்டுக்குக் காரணமாகியுள்ளது. இதனால் உணவுப் பொருட்களின் விலை சர்வதேச அளவில் அதிகரித்து மில்லியன் கணக்கான மக்கள் பட்டினி நெருக்கடிக்கு முகம்கொடுக்கும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

“இதனை உடன் தீர்க்காவிட்டால், தாக்கம் பேரழிவை ஏற்படுத்துவதாக இருக்கும்” என்று கிரன்டி எச்சரித்தார். எனினும் இது ஏற்கனவே அழிவை ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இடம்பெயர்ந்தோர் தொடர்பான ஐ.நா அகதிகள் நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை வெளியீட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்படி 2021 முடிவில் சாதனை எண்ணிக்கையாக 89.3 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்திருப்பதோடு அது ஒரு தசாப்தத்தில் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்த பின் 14 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் உலகில் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை முதல்முறை 100 மில்லியனைத் தாண்டியுள்ளது.

---

# நாளைய நாளுக்காக நாட்டினை தயார்படுத்தும் – RDB வங்கி

எதிர்காலத்தில் ஏற்படும் என்று கருதப்படும் உணவுத் தட்டுப்பாட்டை தவிர்ப்பதற்காக உபாய வழிகளாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு செலாவணி தட்டுப்பாட்டின் மூலம் ஏற்பட்டுள்ள பொருளாதார சீரின்மையை தவிர்ப்பதற்காக செயற்பாடுள்ள பங்களிப்பாக பல நிகழ்ச்சிகளை பிரதேச அபிவிருத்தி வங்கி செயற்படுத்தியுள்ளது.

### மகளிர் தொழில் முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்.

மீள் நிதி, வட்டி சலுகைகள் மற்றும் ஏனைய சலுகைக் கடன் திட்டங்கள் மூலம் மகளிர் தொழில்முயற்சிகளை முன்னேற்றுவதன் மூலம் தமது குடும்பத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் போலவே உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தி பொருளாதார மேம்பாட்டிற்காக பங்களிப்பை வழங்குதல் இதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அதனடிப்படையில் விவசாயம், விலங்குவேளாண்மை, பால் உற்பத்தி, சிறிய கைத்தொழில்கள் மற்றும் பெறுமதிசேர் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மகளிர் தொழில் முயற்சியாளர்களுக்கு 8.8% வருடாந்த வட்டிக்கு 10 வருட மீள் செலுத்தும் காலத்திற்கு உற்பட்டு நிதி வசதிகளை வழங்குவதற்கும் RDB வங்கி தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

கொள்கை அடிப்படையில் மகளிர் தொழில் முயற்சியாளர்களுக்கு தைரியமூட்டுவதற்காக RDB வங்கியினால் வருடாந்தம் “திரி அபிமானி” நிகழ்ச்சியை செயற்படுத்துகிறது. அங்கு மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் வெற்றிகரமான மகளிர் தொழில் முயற்சியாளர்களை தேர்ந்தெடுத்து விருதுகளை வழங்கி அவர்களைப் பெருமைப்படுத்துகிறது.

மகளிர் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் RDB திரி அபிமானி 2022 சிறந்த மகளிர் தொழில் முயற்சியாளரை தேர்ந்தெடுக்கும் போட்டியின் வெற்றியாளர்கள்.

- மீள் நிதி கடன் திட்டம் மற்றும் வட்டிச் சலுகை கடன் திட்டத்தின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிக்கு மூலதனத்தை தயார்படுத்தல்.

உள்ளூர் தொழில் முயற்சிக்காக RDB வங்கியினால் செயற்படுத்தப்படும் மேலும் விசேட நிதி வசதிகளாவன “சௌபாக்கியா” கடன் திட்டமாகும். இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து வழங்கும் இந்த நிதி வசதிகள் 9% இற்கு குறைந்த வட்டியின் கீழ் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் மற்றும் விவசாய, விலங்கு வேளாண்மை, கடற்தொழில் பிரிவுகளுக்காக செயற்படும்.

மீளளிக்கப்படும் காலம் 06 வருடங்கள் ஆவதுடன் 06 மாத சலுகைக் காலமும் இதற்காக உரித்தாகும். பல்வருட பயிரினங்களுக்கான சலுகைக் காலம் 12 மாதமாகும். ரூ. 25 மில்லியன் வரை வழங்கும் இந்த நிதி வசதிகள் தற்போதும் பெருமளவான தொழில் முயற்சியாளர்களுக்கு பலமாக உள்ளது.

- மேற்படி வினைதிறனுடன் தமது கைத்தொழிலை செயற்படுத்துவதற்காக தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வதற்கு தொழில் முயற்சியாளர்கள் குறித்த நிறுவனத்துடன் இணைதல் மற்றும் சகல கிராம சேவைப் பிரிவில் இருந்தும் ஒரு தொழில்முயற்சியாளரை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல்.

2022 - 24 கால எல்லையில் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவில் 15000 தொழில் முயற்சியாளர்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டம் பொருளாதார ரீதியாக பலமுடைய தொழில்முயற்சியாளர்களை நாடளாவிய ரீதியில் உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகும் அதனடிப்படையில் இக்கால எல்லையில் சகல கிராம அதிகாரி பிரிவிலிருந்தும் ஒருவரை உள்ளடக்குமாறு புதிய தொழில் முயற்சியாளர்கள் 15000 ஐ இனங்கண்டு அவர்களுக்கு தேவையான நிதி வழங்கல் ஆலோசனை சேவை, வழிகாட்டல் மற்றும் சந்தை அறிவை வழங்குதல் இதன் மூலம் இடம்பெறும் விசேடமாக இறக்குமதி பதிலீடு கைத்தொழில் மற்றும் வெளிநாட்டு செலாவணியை பெறக்கூடிய கைத்தொழில்களுக்கு இதன் கீழ் முன்னுரிமை வழங்கப்படும்.

அதனடிப்படையில் கைத்தொழில் அபிவிருத்தி சபை, சிறிய வர்த்தக அபிவிருத்தி பிரிவு, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை, போன்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் ஒழுங்குபடுத்தப்படும் இந் நிகழ்ச்சியில் சுற்றாடல் சார்ந்த மற்றும் மாதாந்த வருமானம் ரூ. 500,000 இற்கு மேற்பட்ட, தொழில் வாய்ப்புக்களை அதிகமாக உருவாக்கும், ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களை தேர்ந்தெடுத்து அதற்காக சலுகை நிதி வசதிகள் வழங்கப்படும்.

- பிரதேச அபிவிருத்தி வங்கியிலிருந்து நிதி வசதிகளை பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்கள் பொருளாதார ரீதியாக பயனுள்ள செடியை நடுதல் அல்லது விவசாய பயிர்ச் செய்கைக்கு ஊக்கப்படுத்தளை மதிப்பீடு செய்தல். இதன் மூலம் குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார புனர் வாழ்வுக்காக தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்த எதிர்ப்பார்ப்பதாகும்.

வெற்றிகரமாக தொழில் முயற்சியாளராவதற்கு எனில் பிரதான பிரிவுகள் 02 இல் அவர்கள் தயார்படுத்தப்படல் வேண்டும். அதாவது சுயமாக நிதி நிலையை நடத்திச் செல்லல் மற்றும் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களை உயர் தரம் கொண்டதாக சமர்ப்பித்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் போது இந்தப் பிரிவுகளை மேம்படுத்தும் முறையில் அறிவை வழங்குதல் வங்கியின் நோக்கமாகும்.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூன் 17 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 04.32 |
| லுஹர் | - | 12.12 |
| அஸர் | - | 03.39 |
| மஃரிப் | - | 06.27 |
| இஷா | - | 07.44 |

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் ஆனி 03

| | | | |
|---|---|---|---|
| ராகுகாலம் | பகல் | 1.30 - 3.00வரை | |
| சுபநேரம் | காலை | 10.30 - 12.00வரை | |

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

இராசி பலன்கள்

| | | |
|---|---|---|
| மேஷம் | - | செலவு |
| ரிஷபம் | - | பாராட்டு |
| மிதுனம் | - | தனம் |
| கடகம் | - | போட்டி |
| சிம்மம் | - | கோபம் |
| கன்னி | - | முயற்சி |
| துலாம் | - | நன்மை |
| விருச்சிகம் | - | நிறைவு |
| தனுசு | - | வெற்றி |
| மகரம் | - | பொறுமை |
| கும்பம் | - | மறதி |
| மீனம் | - | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

அரிசி, பருப்பு உள்ளிட்ட சில அத்தியாவசிய

# பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகலாம்

## இறக்குமதியாளர் சங்கம் எச்சரிக்கை

சந்தைகளில் எதிர்வரும் நாட்களில் அரிசி, பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் செத்தல் மிளகாய், கடலை மற்றும் நெத்தலி ஆகியவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என அச்சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த மே மாதம் 6 ஆம் திகதி முதல் அத்தியாவசிய பொருள் இறக்குமதியின் போது இதுவரை பயன்படுத்தப்பட்ட திறந்த கணக்கு அடிப்படையிலான முறையை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அந்த முறைமை நிறுத்தப்பட்டதன் மூலம் அத்தியாவசிய பொருள் இறக்குமதியின் போது டொலர் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# பெருமளவு எரிபொருளை கடத்திய மூவர் கைது

## திருகோணமலையில் நேற்றுக் காலை சம்பவம்

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மொரவெவ பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிலையத்தில் இருந்து கொழும்பிற்கு லொறியொன்றில் டீசல் மற்றும் பெற்றோலை கொண்டு செல்லும்போது ரொட்டவெவ பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து லொறியுடன் மூன்று சந்தேக நபர்களை நேற்று (16) அதிகாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் காலி இரத்தினபுர கொழும்பு பகுதியைச் சேர்ந்த நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை இன்றையதினம் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஊழியர் சுகத் பெரேரா நேற்று காலமானார்



லேக் ஹவுஸ் நிறுவனத்தின் விற்பனைப் பிரிவில் பணிபுரிந்த சுகத் பெரேரா நேற்று காலமானார்.

திடீர் மாரடைப்பு காரணமாக காலமாகியுள்ள அவர் இதற்கு முன்னர் விநியோக பிரிவில் பணிபுரிந்துள்ளார். அன்னாரின் மறைவிற்கு நிறுவனத்தின் ஊழியர்கள் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர். (ஸ)

தினமின - சிலுமின பத்திரிகையின்

# முன்னாள் ஆசிரியர் கருணாரத்ன அமரதுங்க காலமானார்

தினமின மற்றும் சிலுமின பத்திரிகையின் பிரதம ஆசிரியராக பணிபுரிந்த பிரபல ஊடகவியலாளர் கருணாரத்ன அமரதுங்க காலமானார். களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம். (15) காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 76 ஆகும்.

நீண்டகாலமாக சுகவீனமுற்றிருந்த அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். பின்னர் அவர் களுபோவில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். தினமின பத்திரிகையில் ஊடகவியலாளராக 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி இணைந்து கொண்ட அவர் பின்னர் பத்திரிகையின் சிரேஷ்ட இணை ஆசிரியராக பணிபுரிந்தார். பின்னர் அவர் தினமின பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.



2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அதே வருடம் டிசம்பர் 4ஆம் திகதி வரை சிலுமின பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றினார். 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி லேக் ஹவுஸ் நிறுவனத்தில் பணியை நிறைவு செய்த அவர் அரச செய்தி திணைக்களம் உள்ளிட்ட பல நிறுவனங்களின் ஆலோசகராகவும் பணி புரிந்தார்.

அவரது பூதவுடல் இலக்கம் 353/1 வீர மாவத்த, தெபானம, பண்ணிப்பிட்டிய என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளதோடு இறுதி கிரியைகள் குறித்த விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

# எரிபொருளுக்கு வரிசையில் நின்ற மேலுமொருவர் மரணம்

## பாணந்துறை பகுதியில் சோக சம்பவம்

பாணந்துறை, வேகட பிரதேசத்தில் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த ஒருவர் திடீரென சுகவீனமடைந்து உயிரிழந்துள்ளார்.

ஹிரண பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். குறித்த நபர்,தனது முச்சக்கர வண்டிக்கு எரிபொருள் நிரப்ப வரிசையில் காத்திருந்தபோது திடீரென சுகவீனமடைந்து பாணந்துறை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, பூகொட பிரதேசத்தில் தள்ளு வண்டியில் (wheelbarrow) எரிவாயு சிலிண்டரை தள்ளிக் கொண்டு சென்ற ஒருவர் திடீரென சுகவீனமடைந்து உயிரிழந்துள்ளார்.உயிரிழந்தவர் 64 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எமது நாட்டை நாமே கட்டியெழுப்புவோம்
எம்மால் முடியும்

நீங்கள் தைரியமிக்க முயற்சியாண்மையாளரா?
அவ்வாறானதொரு முயற்சியாண்மையாளராகும் எதிர்பார்ப்பு உள்ளவரா?
அவ்வாறாயின் நீங்களே எங்கள் கனவு...

விவசாயம் | விலங்கு வேளாண்மை | பால் உற்பத்தி
சிறு கைத்தொழில் | பெறுமதிசேர் செயற்திட்டம்

என்பவற்றுக்கு நிதியுதவிகளை வழங்க நாங்கள் தயார்

விசேடமாக அந்நியச் செலாவணியினை பெற்றுக்கொள்ளக்கூடிய அல்லது வெளிநாட்டு நாணய மாற்று தொழில்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

வியாபாரத்தின் தன்மைக்கேற்ப மீள அறவிடப்படாத 10% அல்லது 15% நிதியினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கும்

விவசாயம், கால்நடை, ஏற்றுமதி பயிர்கள், ஏற்றுமதி அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, ஆகிய துறைகளுக்குரிய அரச நிறுவனங்களின் தொழில்நுட்ப பங்களிப்புகளும் உங்கள் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

ஆண்டின் சிறந்த தொழில் முயலுனர்களை தெரிவு செய்யும் "திரி அபிமானி" போட்டிக்கு விண்ணப்பிக்க இந்நிதி வசதியைப் பெற்றுக்கொள்ளும் உங்களுக்கும் உரித்துண்டு.

8.8%
(வ.வ)
10 வருடங்களில் மீள செலுத்துவதற்கு

எம்மோடு இணைந்திடுங்கள்...
அழைக்கவும்.
பவித்ரா 071-0290190

RDB வங்கி
Empowering Sri Lankans
HOTLINE
0112 425 262
www.rdb.lk

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව   பிரதேச அபிவிருத்தி வங்கி   Regional Development Bank

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 03ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 16

## குறள் தரும் சிந்தனை



இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்

*கற்றதைப் பிறர் உணர்ந்து கொள்ளும் வகையில் விளக்கிச் சொல்ல முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்தாலும் மணம் கமழாத மலரைப் போன்றவர்.*

# மக்களுக்கு அச்சம் ஊட்டுவதால் விளையும் நன்மை எதுவுமில்லை!

நாட்டில் நெருக்கடி நிலைமை இன்னுமே தணியவில்லை. பாவனைப் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன. தொற்றாநோயாளர்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற மருந்துப் பொருட்களின் விலைகளும் இருமடங்குக்கு மேலாக அதிகரித்து விட்டன. எரிவாயு உட்பட எரிபொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையும், அவற்றின் விலை அதிகரிப்பும் மக்களை வாட்டி வதைக்கின்றன.

இதன் சிரமங்களை வறிய மக்கள் மாத்திரமன்றி செல்வந்த வர்க்கத்தினரும் அனுபவித்து வருகின்றனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் பெரும் துன்பம் அனுபவித்து வருவது ஒருபுறமிருக்க, இந்த விடயத்தை வைத்துக் கொண்டு ஊடகங்கள் இன்று வியாபாரம் நடத்தத் தொடங்கியுள்ளன. கொவிட் தொற்றுக் காலப் பகுதியில் ஊடகங்கள் எவ்வாறு நடந்து கொண்டனவோ, அவ்வாறேதான் இன்றைய பொருளாதார நெருக்ககடி வேளையிலும் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்கின்றன.

நாட்டில் செயற்பட்டு வருகின்ற அனைத்து ஊடகங்களையும் நாம் ஒட்டுமொத்தமாக குறை கூறிவிட முடியாது. நீண்ட கால பாரம்பரியம் கொண்ட தேசியப் பத்திரிகைகளும், பொறுப்பு வாய்ந்த இலத்திரனியல் ஊடகங்களும் நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமையை உணர்ந்து கொண்டவாறு செய்திகளை ஊடக தர்மத்துடன் வெளியிட்டு வருகின்றன. ஆனால் சில ஊடகங்கள் அவ்வாறு பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை.

மக்கள் இன்று துன்பங்களை அனுபவித்து வருவது தெரிந்த விடயம் ஆகும். அந்த விடயத்தை எவராலுமே மறைக்க முடியாது. எரிபொருளுக்கும் ஏனைய அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கும் மக்கள் படுகின்ற அவதி புரியாத விடயமல்ல. ஆனால் அவ்வாறான அவலக் காட்சிகளையே தொடர்ந்தும் மக்களுக்குக் காண்பித்துக் கொண்டிருப்பதில் பாதகமான விளைவே ஏற்படுமென்பதை அந்த ஊடகங்கள் புரிந்து கொள்வதாக இல்லை. அல்லது அதனைப் புரிந்து கொள்வதற்கான ஊடக ஞானம் அந்த ஊடகங்களிடம் இல்லையோ தெரியவில்லை.

இன்றைய நெருக்கடியின் சில நிலைமைகள் ஒருசில தொலைக்காட்சி ஊடகங்களால் பெரிதுபடுத்திக் காண்பிக்கப்படுகின்றன. சில வேளைகளில் ஒரே காட்சிகள் பல தடவை காண்பிக்கப்படுகின்றன. இன்றைய நிலைமையின் தன்மையை மக்களுக்குப் பாரதூரமாகக் காண்பிக்கும் வகையில் அந்த ஊடகங்கள் செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

மக்கள் அதனைப் பார்த்து அச்சம் கொள்கின்றனர். எதிர்காலம் பற்றிய அச்சம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. வேதனை, உளச்சோர்வு, அவநம்பிக்கை, பதகளிப்பு போன்ற உளப்பாதிப்புகளுக்கு அவர்கள் ஆளாக வேண்டி ஏற்படுகின்றது. மக்களை அச்சத்துக்கும், பரபரப்புக்கும் உள்ளாக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் சில ஊடகங்கள் செயற்பட்டு வருவதை நன்றாகவே அவதானிக்க முடிகின்றது.

மற்றொரு புறத்தில் நோக்குமிடத்து அரசுக்கு எதிரான ஆயுதமாக இன்றைய நெருக்கடியை எதிரணி அரசியல் தரப்புகள் பயன்படுத்தி வருகின்றன. அவ்வாறான அரசியல் தரப்புகள் சில ஊடகங்களை தங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. எதிரணி அரசியல் தரப்புகளுக்கும், சில ஊடகங்களுக்குமிடையில் நெருக்கமும் புரிந்துணர்வும் தொடருகின்றன. நாடு இனிமேல் முற்றாகவே மீள முடியாதென்ற பிரமையை மக்களுக்குக் காண்பிப்பதிலேயே சில ஊடகங்கள் முழுமூச்சாக தற்போது இயங்கி வருவதை நன்றாகவே காண முடிகின்றது.

இன்றைய நிலைமையில் நாட்டு மக்கள் அனைவரும் ஒரு யதார்த்தத்தை தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம். எமது நாடு இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது என்பது உலகுக்கே தெரிந்த விடயம் ஆகும். இந்த நெருக்கடிக்குக் காரணமானவர்கள் யாரென்பதை ஆராய்ந்து கொண்டிருப்பதில் அல்லது அவர்களை தொடர்ந்தும் கண்டித்துக் கொண்டிருப்பதில் காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தால் ஆகப் போவது எதுவுமில்லை. அதனால் விளைவது பாதகமே ஆகும்.

அரசியல்வாதிகள் அவ்வாறுதான் செயற்படுவார்கள். எமது நாட்டைப் பொறுத்தவரை அரசியல்வாதிகளில் பலருக்கு நாட்டின் நலன் குறித்தோ, மக்களின் துன்பங்கள் குறித்தோ சிறிதேனும் அக்கறை கிடையாது. தங்களது அரசியல் இருப்பைப் பலப்படுத்திக் கொள்வதிலும், எதிர்காலத்தில் அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றிக் கொள்வதிலுமே அவர்கள் என்றும் அக்கறையாக இருப்பதுண்டு. நாட்டின் இன்றைய நிலைமையை வைத்து மக்களுக்கு அச்சமூட்டுவதும், அரசின் மீது குற்றம் சுமத்துவதுமே அரசியல்வாதிகள் பலரின் இன்றைய நிகழ்ச்சித் திட்டமாக இருக்கின்றது.

ஆனாலும் பொறுப்பு வாய்ந்த எந்தவொரு ஊடகமும் அவ்வாறு செயற்பட முடியாது. ஊடகங்கள் என்றும் மக்கள் நலனுக்காகவே செயற்பட வேண்டியது அவசியம். மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதும், இன்றைய நிலைமையைத் தணிப்பதற்கான ஆதரவை வழங்குவதுமே ஊடகங்களின் பணியாக இருக்க வேண்டும். புரளி கிளப்புவது மாத்திரமே ஊடகங்களின் பணியென எண்ணிவிடலாகாது. சமூக ஊடகங்களைப் போன்று அபத்தமாக செயற்படுவதற்கு வெகுஜன ஊடகங்கள் முற்படலாகாது!

editor.tkn@lakehouse.lk

# எழுத்துலகில் நட்சத்திரமாக பிரகாசித்தவர் தினமின, சிலுமின முன்னாள் ஆசிரியர் காலஞ்சென்ற கருணாரத்ன அமரதுங்க



## ஊடகத்துறையில் பலருக்கு வழிகாட்டியாகத் திழ்ந்தவர்

இன்றைய காலகட்டத்தில் ஊடகவிய லாளராகவோ அல்லது ஊடக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவோ செயல்படுவது இலகுவாகும். அதற்காக யூடியூப் அல்லது முகநூல் பக்கமோ இருந்தால் போதுமானது. அவ்வாறு ஊடகவியலாளர்கள் என பெயர் பெற்றவர்கள் பலர். ஆனால் ஊடகவியலாளர் என்பவர் சிறந்த பேச்சாளராக மாத்திரமல்ல அழகாக எழுதுபவராக மாத்திரமல்ல அவர் தன்னுடைய விடய பரப்பு தொடர்பாக நல்ல அறிவை கொண்டிருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அவர் ஒரு வெற்றிகரமான ஊடகவியலாளராக முடியாது.

ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்கும் குறிப்பிட்ட துறை உண்டு. சிலர் கலையை விரும்புவார்கள். வேறு சிலர் அரசியல் அல்லது பொருளாதார செய்திகளை சேகரிப்பார்கள். உண்மையான ஒரு ஊடகவியலாளர் ஒரு விடயத்திற்கு மாத்திரம் முக்கியத்துவம் அளிக்காமல் அனைத்துத் துறைகள் குறித்தும்ஆராய வேண்டும். ஊடகத்துறையில் அவ்வாறானோர் அதிகமில்லை. இருந்தாலும் நாளுக்கு நாள் அவர்கள் எம்மை விட்டு பிரிந்து செல்கிறார்கள்.

அண்மையில் காலமான கருணாரத்ன அமரதுங்க அவ்வாறான பல துறைகளிலும் சிறந்த அறிவினை கொண்ட அனுபவம் மிகுந்த பூரணமான மனிதர். பத்திரிகை கலை தொடர்பாக திறமையான கற்றலை உடைய ஒருவராவார். லேக்ஹவுஸ் நிறுவனத்தில் தினமின மற்றும் சிலுமின பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக பணிபுரிந்தவர் அமரதுங்க ஆவார். அப்பத்திரிகைகளின் வளர்ச்சிக்காக சிந்தித்து அர்ப்பணிப்புடன் தனது பங்களிப்பை வழங்கினார்

பத்திரிகையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கான அர்ப்பணிப்பு, முயற்சி அவரின் ஊடக வாழ்க்கையின் சிறப்பம்சமாகும். வாசகர்கள் விரும்பும் விதத்தில், மக்கள் மனதை புத்துணர்வுபடுத்தும் வகையில் பத்திரிகை கலைத் துறையில் ஈடுபட்ட அமரதுங்க, பத்திரிகை கலைஞருக்கு உரிய அனைத்துத் துறை தொடர்பான விரிவான அறிவினையும், விவேகத்தையும் கொண்டிருந்தவர். அவரின் எழுத்துக் கலை பற்றி நான் அறிந்து கொண்டது 2015 ஆம் ஆண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார விமர்சன பக்கத்தில் ஆகும்.

அவர் மிக கவர்ச்சிகரமாக பொருளாதார விடயங்களை ஆராய்ந்து எழுதி வந்தார். அவரின் அந்தக் கட்டுரைகள் வாசகர்களின் மனதைக் கவர்ந்தன. ஆனால் அவருடைய விடயங்கள் பொருளாதாரத்தை பற்றி மாத்திரம் எழுதப்படவில்லை. இந்நாட்டு அரசியல் பற்றி மாத்திரமல்ல வெளிநாட்டு அரசியல் பற்றிய அறிவும் அவரிடம் காணப்பட்டது. அது இயற்கையாகக் கிடைத்ததல்ல. அவருடைய அறிவை சிங்கள, ஆங்கில புத்தகங்கள் கூர்மைப்படுத்தின.

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான அவருக்கு கலை பற்றிய பெரும் விருப்பு காணப்பட்டது. அவர் சரத்சந்திரவுடன் நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு கலை,பொருளாதாரம், அரசியல் பிரிவு அனைத்துத் துறைகள் பற்றியும் கருணாரத்ன அமரதுங்கவுக்கு பெருமளவு புரிந்துணர்வு காணப்பட்டது. லேக் ஹவுஸ் நிறுவனத்துக்கு வருவதற்கு முன்னர் அவர் மாற்று பத்திரிகைகள் பலவற்றுக்கும் தனது பங்களிப்பை வழங்கியிருந்தார். முற்போக்கு அரசியலில் கூடிய விருப்பம் இருந்தாலும் அனைவருடனும் மகாத்மா குணத்துடன் பழகும் தன்மை அவருக்கு இருந்தது.

அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே நெருக்கமாக இருந்தார். அவர் இறக்கும் போது அவருக்கு வயது 76 ஆகும். தனது இறுதி மூச்சு வரை அவர் பேனாவை கைவிடவில்லை. இறுதி காலத்தில் 'யுக்திய' என்னும் இணைய தளத்தில் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பாக கட்டுரைகளை எழுதி வந்தார். 1995 ஆம் ஆண்டு ஊடகவியலாளராக தினமின பத்திரிகையில் இணைந்து கொண்ட அமரதுங்க, 2007 ஆம் ஆண்டு வரை லேக் ஹவுஸ் நிறுவனத்தில் பணிபுரிந்தார். அரச செய்தி திணைக்களம் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கும் தனது பங்களிப்பை பெற்றுக் கொடுத்ததோடு தன்னுடைய அறிவை மற்றும் திறமையை எவ்வித தயக்கமுமின்றி அவற்றுக்கு வழங்கினார்.

சிலகாலம் நோயுற்றிருந்த அமரதுங்க அண்மையில் காலமானார். அவரது மறைவு ஊடகங்களுக்கு பெரும் இழப்பாகும். அவர் ஊடகவியலாளராக இருந்தாலும் அவர் விவசாயம் தொடர்பாக அக்கறையும் விருப்பமும் கொண்டிருந்தார். லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கும் பத்திரிகை துறைக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு என்றும் நிலைத்திருக்கும்.

**உதித்த குணவர்தன...**
தமிழில்: வீ.ஆர். வயலட்

# டயலொக் ஆசிஆட்டா தொடர்ந்து 4 ஆவது ஆண்டாகவும் மிகவும் பெறுமதியான வர்த்தக நாமமாக தரப்படுத்தல்

தொடர்ந்து 6வது ஆண்டாகவும் Brand Finance இனால் 'மிகவும் விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்' என மேலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி அதன் 19 ஆவது பதிப்பில், உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக நாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance இன் வருடாந்த ஆய்வில் தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் 'இலங்கையின் மிகவும் பெறுமதியான வர்த்தக நாமம்' என்ற பட்டத்தை பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளது. டயலொக் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் AAA இன் வர்த்தக மதிப்பீட்டைத் தக்கவைத்துக் கொண்டுள்ளதுடன், அத்துடன் தொடர்ந்து 15 வது ஆண்டாக 'மிகவும் பெறுமதியான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்' என்ற பட்டத்தையும் இலங்கையின் வாழ்வாதாரங்கள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் வளப்படுத்துதல் ஆகிய வர்த்தக நாம நெறிமுறைகளை மீண்டும் உறுதிப்படுத்தியது.

அணுகக்கூடிய, உள்ளடக்கிய, மற்றும் வாடிக்கையாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களுக்கு ஒரே மாதிரியாக பயனளிக்கும் நிலையான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்குவதன் மூலம், இலங்கையை டிஜிட்டல் தேசமாக உயர்த்துவதில் டயலொக் தொடர்ந்து முன்னின்று செயற்படுகின்றது. இந்த பாராட்டுக்கள், 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் வர்த்தக நாமத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் உணர்வுகளை பிரதிபலிக்கின்றது.




இடமிருந்து வலமாக Brand Finance Lanka நிறுவனத்தின் தலைவர் ருசி குணவர்தன, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் குழும பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணாயக்கார

இந்தச் சாதனைகள், தொற்றுபரவலின் போது, நாட்டின் சுகாதாரப் பாதுகாப்புத் துறையின் முன்னேற்றம், சுகாதாரப் பணியாளர்க ளுக்கான தகவல் தொடர்பு வசதிகளை வழ ங்கு தல் மற்றும் தேசிய 1390 கொவிட் 19 ஒருங்கிணைந்த வீட்டு அடிப்படையிலான பராமரிப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட சமூகங்களின் பல அம்சங்களை ஆதரிப்பதில் டயலொக்கின் தொடர்ச்சியான முயற்சிகளையும் அங்கீகரிக்கிறது. மேலும், நிறுவனம் நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு மிகப்பெரிய இலவச டிஜிட்டல் கல்வி தளமான நெனச தொலைக்காட்சியை விரிவுபடுத்தியது, அவசியமான 100,000 பாடசாலை மாணவர்களுக்கு டேட்டா புலமைப்பரிசில்களை வழங்கியது மற்றும் நாட்டிலுள்ள அனைத்து சிறுவர் மேம்பாட்டு மையங்களுக்கும் இலவச இணைப்பு வசதிகளை விரிவுபடுத்தியது.

மேலும், பொருளாதார நெருக்கடியினால் இலங்கை முழுவதிலும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பின்மைக்கு எதிராகப் போராடும் நோக்கில், 2022 ஏப்ரல் மாதத்தில் பல நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆல் 'மனிதநேய ஒன்றிணைவு' எனும் மனிதாபிமான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. MAS Holdings, Hemas Holdings PLC, CBL Group, Citi bank, Sunshine Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் போன்ற பல ஒத்த எண்ணம் கொண்ட பங்காளர்களுடன் இணைந்து, PwC ஸ்ரீலங்காவுடன் இணைந்து 200,000 குடும்பங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ கருத்து தெரிவிக்கையில், "இலங்கையின் மிகவும் பெறுமதியான வர்த்தக நாமமாக 4 ஆவது ஆண்டாகவும், தொடர்ந்து 15 ஆவது ஆண்டாக 'மிகவும் பெறுமதியான தொலைத் தொடர்பு வர்த்தக நாமமாகவும்'இ தொடர்ந்து 6 ஆவது ஆண்டாக 'அதிக விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தக நாமமாகவும்' தரவரிசைப்படுத்தப்படுவதையிட்டு நாங்கள் பெருமையடைகிறோம். இந்த அங்கீகாரம், எங்கள் விசுவாசமான வாடிக்கையாளர்களின் உணர்வுகளை எதிரொலிக்கிறது" என்றார்.

Brand Finance Lanka நிறுவனத்தின் தலைவர் ருசி குணவர்தன கருத்து தெரிவிக்கையில் "தொலைத்தொடர்புத் துறையில் நாம் அளவிடும் பல குறிகாட்டிகளில் வர்த்தக நாம வலிமையைக் கட்டியெழுப்புவதற்கான அதன் திறன், டயலொக் வர்த்தக நாமத்தின் மதிப்பை அதிகரிக்கச் செய்கிறது" என்றார்.

# சமூகத்தில் நீங்காத நினைவுகளை விட்டுச் சென்றுள்ள நிர்வாகசேவை உத்தியோகத்தர் ஏ.எல்.இப்றாலெவ்வை

ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட உத்தியோகத்தரான அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஏ.எல். இப்றாலெப்பை அவர்கள் 2022.06.10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனது 90 ஆவது வயதில் காலமானார். அரச பதவியின் போது மாத்திரமின்றி, தான் உயிர் வாழ்ந்த இறுதிக் காலம் வரை இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளின்றி மக்களுக்கு தன்னால் முடிந்தளவு உதவி, ஒத்தாசைகளை மனங்கோணாது வழங்கியவராக அவர் விளங்கினார்.

மர்ஹூம் இப்றாலெப்பை போன்றதொரு உத்தமரை சமூகம் எக்காலமும் பெற முடியாது என்பதை அவரைத் தெரிந்து கொண்டவர்கள் புரிந்து கொள்வர். அன்னார் இவ்வுலகை விட்டு மறைந்தாலும், அவரது ஆளுமை மற்றும் பணிகள் காலத்தால் அழியாது, பசுமரத்தாணி போன்று நெஞ்சில் நிழலாடும்.

அட்டாளைச்சேனையில் மர்ஹூம்கள் அஹமட்லெப்பை மரைக்கார், செய்னம்புநாச்சி தம்பதியருக்கு கனிஷ்ட புதல்வராக 1932.07.15 ஆம் திகதி பிறந்த அன்னார், துஹ்பதுல் ஹுஸ்னா அவர்களின் கணவரும், நான்கு ஆண் பிள்ளைகளின் தந்தையுமாவார். தனது ஆரம்பகல்வியை அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கற்றார். 1943ஆம் ஆண்டு நடைபெற்ற டென்ஹாம் (Denham) 5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் 'A'பிரிவில் சித்தியடைந்தார். பின்னர், இடைநிலைக் கல்விக்காக மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திற்கு ஆங்கில மொழிமூலம் கல்வி கற்க தேர்தெடுக்கப்பட்டார்.

1944ம் ஆண்டு அன்னார் கல்வியில் காட்டிய அதீத ஆர்வம், திறமை மற்றும் தொடரான மூன்று தவணைப் பரீட்சைகளில் 1 ஆம் இடத்தைப் பெற்று சாதனை நிலைநாட்டியமையினால் ஆண்டிறுதி வகுப்பேற்றத்தில் Double Promotion கொடுக்கப்பட்டு அடுத்த படிநிலைக்குத் தரமுயர்த்தப்பட்டார். தனது க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் கல்வியை முழுமையாக ஆங்கில மொழியில் கற்றுத் தேர்ச்சியடைந்தார். சுவாமி விபுலானந்த அடிகளார், சுவாமிநடராஜநந்த ஜீ ஆகியோருடன் நெருங்கிய நல்லுறவு கொண்டிருந்தார்.

ஆங்கிலமொழி ஆசிரியராக 1952ஆம் ஆண்டு முதல்நியமனம் பெற்ற மர்ஹூம் இப்றாலெப்பை 1956ஆம் ஆண்டு பேராதனை விவசாயக் கல்லூரியில் இருவருட விவசாய டிப்ளோமா கற்கைநெறியை நிறைவு செய்து, கல்லோயா பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தில் குடியேற்ற அதிகாரியாக நியமனம் பெற்றார். 1958ஆம் ஆண்டு கமநல சேவைகள் திணைக்களத்தில் பெரும்பாக உத்தியோகத்தராக நியமனம் பெற்றார். 1980ஆம் ஆண்டு நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் ஆங்கிலமொழி மூலம் அம்பாறை மாவட்டத்தில் முதன்முதலாக சித்தியடைந்தார்.





அதனைத் தொடர்ந்து, அம்பாறை, மட்டகளப்பு, புத்தளம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளராகப் பணிபுரிந்தார். பின்னர் 1986ஆம் ஆண்டு நிந்தவூர் உதவி அரசாங்க அதிபராகவும், 1991இல் நிந்தவூர் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி 1993இல் 41 வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். ஓய்வு பெற்றபின்னர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக ஆலோசராகவும், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.ஏ.மன்சூர் அவர்களின் இணைப்புச் செயலாளராகவும் பதவி வகித்தார். அத்துடன், 2009 முதல் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ் உதுமாலெப்பையின் பிரத்தியேக நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றினார்.

அன்னார் ஆற்றிய சமூக சேவைகளுக்காகவும், பணிகளுக்காகவும் சமூகசேவை அமைச்சினால் அட்டாளைச்சேனை பிரதேசத்தின் சிறந்த நற்பிரஜையாகத் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அகில இலங்கை சமாதான நீதவான்கள் அமைப்பினால் 2002ஆம் ஆண்டு நீர்கொழும்பு நகரசபை மண்டபத்தில்

பாராட்டப்பட்டார். 2004 சுனாமி அனர்த்தத்தின் போது மேற்கொண்ட பணிகளுக்காக ஜனாதிபதியினால்

கௌரவிக்கப்பட்ட அவர், 2007ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார விழாவில் சமூக சேவைக்கான விருதினை பெற்றுக் கொண்டார். மேலும் 2010ஆம் ஆண்டு இரத்தினபுரி நகர மண்டபத்தில் தேச கீர்த்தி, தேசமான்ய பட்டங்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

2012 ஆம் அண்டு மலையக கலை, கலாசார சங்கத்தினால் கண்டி மாநகரில் நடத்தப்பட்ட தேசிய விருது விழாவில் இரத்தினதீபம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1992 ஆம் ஆண்டு அகில இலங்கை சமாதான நீதவானாகவும், 2010 முதல் சத்தியப்பிரமாணம் பெற்ற மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்.

அட்டாளைச்சேனை பத்ர் பள்ளிவாசல் தலைவராகவும், அட்டாளைச்சேனை 14ஆம் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் போஷகராகவும், அட்டாளைச்சேனை வைத்தியசாலை அபிவிருத்தி சபைத் தலைவராகவும், கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி ஆளுணர்சபை உபதலைவராகவும் பணியாற்றினார்.அன்னாரின் சமூகப் பணிகள் என்றுமே நினைவு கூரப்படும் என்பது உறுதி.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புகள்: ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் இந்திய விஜயத்தில் ஆராய்வு

**வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வடமாகாணத்திற்கான புதிய கூட்டாண்மைகளை அவசரமாக உருவாக்குவதற்காக இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தார். வடக்கின் கைத்தொழில்கள் மற்றும் உற்பத்திகளை ஈர்ப்பதற்கான எதிர்கால முயற்சியிலும், வடமாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதிலும் ஆளுநர் முயற்சி மேற்கொண்டு வருகிறார்.**

கல்வி, எரிசக்தி, சுற்றுலா, உற்பத்தி, ஜவுளி, அக்வா வளர்ப்பு, மீன்வளம், விவசாயம், விதைகள், தளவாடங்கள், பேக்கேஜிங் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் உள்நோக்கிய முதலீடுகள் மற்றும் தொழில்நுட்பம் குறித்து விவாதிக்க அவர் சென்னை, ஹைதராபாத், பெங்களூர் மற்றும் அகமதாபாத் ஆகிய நகரங்களுக்குச் சென்றிருந்தார்.

கடந்த 2 ஆண்டுகளில் இந்தியா 100 யூனிகார்ன்களை உற்பத்தி செய்துள்ளது. இந்த சாதனையின் மூலம், இன்று உலக அளவில் ஒவ்வொரு 10 யூனிகார்ன்களில் 1 யூனிகார்ன்களைப் பெற்றெடுக்கும் பெருமையை இந்தியா பெற்றுள்ளது. 'யூனிகார்ன்' என்ற சொல், $1 பில்லியனுக்கும் அதிகமான மதிப்பை அடையும் அரிதான ஸ்டார்ட்அப்களைக் குறிக்கிறது.

கடந்த ஆண்டு, இந்தியா 44 யூனிகார்ன்களைப் பெற்றது, இதன் மொத்த மதிப்பு $93 பில்லியன் ஆகும். இதற்கிடையில், 2022 இன் முதல் நான்கு மாதங்களில், இந்தியா 14 யூனிகார்ன்களைப் பெற்றுள்ளது. இதன் மொத்த மதிப்பு $18.9 பில்லியன் ஆகும். 40 கோடிக்கும் அதிகமான இந்தியர்களுக்கு பல்வேறு தொழில் சார்ந்த வேலைகளில் பயிற்சி அளிப்பதற்காக இந்திய அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு ஸ்கில் இந்தியா திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தொலைநோக்குப் பார்வை பல்வேறு திட்டங்கள் மற்றும் பயிற்சி வகுப்புகளின் உதவியுடன் அதிகாரம் பெற்ற பணியாளர்களை உருவாக்கியுள்ளது. இந்த கூட்டு முயற்சியானது திறமையான திறமையான பணியாளர்களால் ஆதரிக்கப்படும் ஆராய்ச்சி, தொழில்நுட்பம், கண்டுபிடிப்புகள், உற்பத்தி ஆகியவற்றில் இந்தியாவை வல்லரசாக ஆக்கியுள்ளது.

ஹைதராபாத் தில் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை பற்றி ஆளுநர் ஆராய்ந்தார். ஆந்திரப் பிரதேசத்தில் ஸ்ரீ. கருமுரி வெங்கட நாகேஸ்வர ராவ் வடக்கு ஆளுநரை விருந்தளித்து வரவேற்றார். அவரது மாநிலத்தில் உணவு விநியோக முறை மற்றும் அமைப்பு, செயல்திறனை மேம்படுத்துவது, விரயத்தை குறைப்பது மற்றும் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக் கூடிய பிரிவினரை திறம்பட சென்றடைவது குறித்து ஆளுநர் ஆராய்ந்தார். மாநிலத்தில் உள்ள பல்வேறு உற்பத்தியாளர்களிடமிருந்து தானியங்கள் மற்றும் விநியோகங்களை இலங்கைக்கு வழங்குவதில் அமைச்சர் மகிழ்ச்சியடைந்தார்.



இலங்கையில் உற்பத்தி மற்றும் உற்பத்தி அலகுகளை அமைப்பதற்கான அவர்களின் தேவைகளைப் பற்றி விவாதிக்க மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள முன்னணி உற்பத்தியாளர்களுடன் சந்திப்பு நடைபெற்றது. 20 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இலங்கையில் தமது அலகுகளை ஆரம்பிப்பதற்கான தேவைகள் மற்றும் நுண்ணறிவுகளைப் பகிர்ந்துகொள்வதற்காக இந்த மாநாட்டில் பங்குபற்றியிருந்தன.

பெங்களூரில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்ப அமைச்சர் உயிரி தொழில்நுட்பம், உயர்கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ( டொக்டர் சி.என். அஸ்வத் நாராயண் ஆளுநருக்கு விருந்தளித்து இந்திய தகவல் தொ ழில்நுட்ப நிபுணத்துவத்தை இலங்கைக்கு கொண்டு வருவது, வடக்கில் தற்போதுள்ள கல்வி முறைகளை வலுப்படுத்துவது மற்றும் சீரமைப்பது குறித்து விவாதித்தார்.

அகமதாபாத்தில் தேசிய தடயவியல் அறிவியல் பல்கலைக்கழகம், காந்திநகர். nFSU என்பது அதிநவீன தொழில்நுட்பம், படிப்புகள் மற்றும் கற்பித்தல் குறித்த சந்திப்பு நடைபெற்றது. அதானி குழுமம் மற்றும் குஜராத் சேம்பர் காமர்ஸ் மற்றும் CEO கிளப்புடனான சந்திப்பம் நடைபெற்றது. பச்சை ஹைட்ரஜன் மற்றும் அம்மோனியா உற்பத்தி உள்ளிட்ட நிலையான பசுமை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை அமைப்பதில் அதானி குழுமம் விருப்பம் தெரிவித்தது.

சென்னையில் மாநில தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் அவர்களுடனும் சந்திப்பு நடைபெற்றது. இந்தியாவில் பயிற்சிகள் உட்பட இலங்கை இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஆளுநர் தனது பயணத்தின் போது உலகளாவிய நன்கொடையாளர்களிடமிருந்து ஏழைக் குடும்பங்களை ஆதரிப்பதற்காக உணவு, தானியங்கள், மருந்துகளை நன்கொடையாக வழங்குவது குறித்தும் விவாதித்தார்.

நவாலியூர் **செ.ரமேஷ்...**

# சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் நாளை 131ஆவது வருட சாதுலிய்யா மனாகிப் தமாம் மஜ்லிஸ்



**வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகர் அல் குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850ஆவது ஜனனதினத்தை முன்னிட்டும், ஆத்மீகஞானி அல்குத்பு அல் முஹம்மதிப்னு முஹம்மத் அல்பாஸி அஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் ஜனனதினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் தமாம் நிகழ்வும் சீனன்கோட்டை ஜாமியத்துல் பாஸியத்துஷ் சாதுலிய்யா கலாபீட 4ஆம், 5ஆம் தலைப்பாகை சூட்டும் நிகழ்வும் நாளை (18.06.2022) சனிக்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம். ஐ.எம். ரபீக் (பஹ்ஜி), எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) ஆகியோர் தலைமையில் நடைபெறுகின்றன.**

எங்கள் நாயகம் அல்குத்பு அல் முஹம்மதிப்னு முஹம்மத் அல்பாஸி அஷ் ஷாதுலி (ரலி) அவர்கள் முஅய்யித்தீன் அரபி, அபுல் ஹஸன் ஷாதுலி போன்ற ஞான திலகங்களின் ஜனன பூமியான வட ஆபிரிக்காவிலுள்ள 'பாஸ்' என்ற பட்டணத்தில் ஹிஜ்ரி 1218 இல் ஜனனமானார்கள். அவர் ஏழு வயதில் திருகுர்ஆனை மனப்பாடம் செய்து கொண்டு ஆரம்பக்கல்விகளையும் கற்றபின் கலாசாலையில் அரபி இலக்கியக் கலைகள், திருகுர்ஆன் விரிவுரை, நாயக வாக்கியங்கள் முதலிய கல்விகளை கற்று தேர்ச்சி பெற்றார்.

சரீஅத் சட்டங்களை நன்குணர்வதற்கு முன் ஞான வழியில் செல்ல ஆசை கொண்டார். அதிலிருந்து ரிஸாலத் குல்குஷைரியா, உறிகம் இப்னு அதா உல்லாஹ் புதா உறாத்துல் மக்கியா போன்ற ஆத்ம ஞான நூல்களைப் படிப்பதில் கவனம் செலுத்த வந்தார். அவர் பாலிய வயதிலிருந்து சரீஅத் சட்ட நிபந்தனைகளுக்கு வழுவில்லாமல் ஒழுகின்றவராகவும், பக்தி, நற்குனம் பூண்டவராகவும், ஏழை எளியோரை அன்புடன் ஆதரிப்பவராகவும் இருந்தார்.

அவர்கள் ஆத்மஞான நூல்களைப் படிப்பதிலும், ஞான போதனைகளை கேட்பதிலும் ஈடுபட்டிருந்ததுடன் ஞான வழியில் உண்மையான வழிகாட்டக் கூடிய ஞானகுரு ஒருவரை தேடித்திரிந்து, முடிவாக திருமதீனா நகரில் மகான் ஹம்சதுல்லாஹ் பிருல் மதனி (ரலி) அவர்களை தமது ஆத்மகுருவாக ஆக்கிக் கொண்டு, 18 வருடங்கள் வரை இறைதியானத்திலும் பெருமானார் அவர்களின் பரிசுத்த ரௌலாவை தரிசிப்பதிலும் கவனம் செலுத்தினார்.

ஒருசமயம் அல்ஜீரியாவின் ஒரு பாகத்தில் அரசு புரிந்துவரும் அரசர் அப்துல் காதிர் முஜாஹித் (ரலி) அவர்கள் தமது சிம்மானசத்தை துறந்துவிட்டு ஆத்மஞான இன்பம், தட்டி ஞானக்குரு ஒருவரை தேடித்திரிந்து கடைசியாக மக்காவில் ஹஜ் வணக்கத்துக்குப் பின் பாஸி நாயகத்தின் சீடராகி, ஒருசில தினத்திற்குள் அவர்களுக்கு நபிகள் திலகம் அவர்களின் திருமேனி தோற்றம் கிடைத்தது. இவ்வாறு அரசர் தமது 'மவாகிப்' என்ற கிரந்தத்தில் கூறியிருப்பதோடு தமது குருநாதரின் கண்ணியத்தையும் கவியாக கூறியும் இருக்கிறார்.

ஹிஜ்ரி 1284இல் 'ஜாமியுல் அஸ்ஹர்' என்ற இஸ்லாமிய சர்வகலாசாலை நிறுவப்பட்டிருக்கும் எகிப்து தேசத்துக்குச் சென்றபோது சதாத்மார்கள், தம நிபுணர்கள், உலமாக்கள் குழுமியிருந்த மாபெரும் கூட்டத்தில் மெய்ஞான சொற்பொழிவாற்றினார். அவரின் சொற்பொழிவைக் கேட்டு ரசித்த பன்னூற்றுக்கணக்கான பக்தர்கள் அவர்களது கரங்களை முத்தமிட்டு சீடரானார்கள்.

பாஸி நாயகம் அவர்களின் போதனைகளிலும் மக்கள் பயனடையக்கூடிய அம்சங்கள் பல உள்ளன.

இவ்வுலகில் 70 ஆண்டுகள் வரை புனித வாழ்வு நடத்தி ஹிஜ்ரி 1288ஆம் வருடம் துல்கஹ்தா மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை திரு மக்கமா நகரிலுள்ள தமது இல்லத்தில் சுபஹ் தொழுகை நேரத்தில் மகான் பாஸி நாயகம் அவர்கள் இம் மண்ணுலகை நீத்தார். உலகில் சாதுலியா தரீக்காவை பின்பற்றும் நாடுகளில் இம்மாதம் இந்த ஆத்மஞானி அவர்களின் ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. அந்தவகையில் இலங்கையிலும் சாதுலிய்யா தரீக்காவை பின்பற்றும் ஊர்களில் மனாகிப் மஜ்லிஸ்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

சீன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தமாம் மஜ்லிஸில் காலி ஷாலிய்யா அலிய்யா சட்டக்கல்லூரி பணிப்பாளர் கலீபத்துஷ் ஷாதுலி அலிய்யா மௌலவி எம். இஸட். ஸுஹ்ர் (பாரி), சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி அஷ்ஷெய்யித் அலவி மௌலானா (முர்சி) ஆகியோர் உரையாற்றுவர். சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச். எம். முக்தார் வழிகாட்டலில் பாஷியத்துல் சாதுலிய்யா கலாபீட நிர்வாக சபைத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சி.எம். ஹம்ஸா உட்பட உறுப்பினர்கள், சீனன்கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினர்கள் மற்றும் முகத்தமீன்கள், இஹ்வான்கள் பங்குபற்றுவர்.

பேருவளை **பீ.எம்.முக்தார்...**

# மாற்றுத்திறனாளிகள் எமது சமூகத்தில் சமமாக மதிக்கப்பட வேண்டியவர்கள்



## அம்பாறையில் தடகள விளையாட்டுப் போட்டிகள்

**மாற்றுத்திறனாளிகளை சமூகத்தில் எம்மில் ஒருவராக மதித்து உதவியும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.**

அவர்களை ஒதுக்கி வைத்து செயற்படுவது மனிதாபிமானமற்றதாகும். முழுமையான மனிதர்களிடம் இல்லாத பல திறன்கள் மாற்றுத்திறனாளிகளிடம் மறைந்து காணப்படும். அவற்றை வெளிக்கொணர்வது சமூகத்திலுள்ள அனைவரினதும் பாரிய மனிதாபிமான பொறுப்பாகும்.

உடலால் அவர்கள் ஊனமுற்றாலும் உள்ளத்தால் அவர்கள் திடகாத்திரமானவர்கள். சமூகத்திலிருந்து அவர்களை ஒதுக்கி வைக்கக் கூடாது. பிறப்பில் ஊனமுற்றவர்கள், இடையில் ஏற்பட்ட விபத்துக்களின் போது உபாதைகளுக்கு உள்ளாகி உடல் உறுப்புகளை இழந்தோர், நோய் நொடிகளினால் பாதிக்கப்பட்டோர் என பல வழிகளிலும் இவர்கள் எமது சமூகத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றர்.

அவர்களை பராமரிப்பு செய்கின்ற பெற்றோர் தினசரி அனுபவிக்கும் சிரமங்கள் சொல்லில் அடங்காதவை. அவர்கள் உண்மையிலேயே தியாகிகள். வலது குறைந்தவர்களுக்காக தமது வாழ்நாளில் பலவிதமான சந்தோசங்களை இழந்துள்ளனர். மாற்று ஆற்றல் படைத்தோரின் மத்தியில் காணப்படும் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் மாவட்ட செயலகங்களினூடாக சமூகசேவை திணைக்களம் தடகள விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றது. அந்த வகையில் அம்பாறை மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான அமெச்சூர் தடகள சம்பியன்ஷிப் போட்டி அம்பாறை மேலதிக மாவட்ட செயலாளர் ஜெகதீசன் தலைமையில் அம்பாறை இந்திரசர புர கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விளையாட்டுப் போட்டியில் மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். முழுமையான பார்வைப்புலன் இழப்பு, செவித்திறன் குறைபாடு/பேச்சு குறைபாடு, அறிவுசார் குறைபாடு (மனதின் மெதுவான வளர்ச்சி), மேல் கைகளின் இயல்பான செயல்பாடு, முழங்காலுக்கு மேல் ஒரு கால் இழப்பு, முழங்காலுக்கு கீழே ஒரு கால் இழப்பு மற்றும் உயரம் செ.மீ. 145 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஜம்பிங், வட்டு எறிதல், ஈட்டி எறிதல், ஈட்டி எறிதல், 100 மீட்டர் ஓட்டம், 200 மீட்டர் ஓட்டம் என பல போட்டிகள் இடம்பெற்றன.

வெற்றி பெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*



# பங்காளதேஷ் டாக்கா நகரில் நடைபெற்ற 'நாடுகளுக்கிடையிலான அனுபவப் பகிர்வு'

**பங்களாதேஷ் டாக்கா நகரில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த நாடுகளுக்கிடையிலான அனுபவப் பகிர்வு நிகழ்வில் கலந்து கொள்வதற்காகச் சென்ற பத்து பேர் கொண்ட குழுவினர் தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டுநாடு திரும்பினர். இலங்கை தேசிய சமாதானப் பேரவை மற்றும் ஹெல்விராஸ் சிறிலங்கா அமைப்புக்கள் இப்பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன.**




அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார் வவுனியா, குருநாகல், கண்டி போன்ற மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 06 பேருடன் இலங்கை தேசிய சமாதானப் பேரவை மற்றும் ஹெல்விராஷ் சிறிலங்கா அமைப்புகளின் பிரதிநிதிகளுமாக மொத்தம் பத்து பேர் இந்தக் குழுவில் பங்களாதேஷ் சென்றிருந்தனர். இலங்கையிலிருந்து சென்ற குழுவிற்கு இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் சாவ்பி நயாஜ் தலைமை தாங்கினார்.



கடந்த 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தில் இலங்கையில் நடந்த தாக்குதல் மற்றும் பங்களாதேஷில் நடந்த தீவிரவாத தாக்குதல்களைத் தொடர்ந்து தீவிரவாதத்தை கையாள்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டது. பாதுகாப்பு அணுகுமுறையை விட சமூகமட்ட அணுகுமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பது மனித உரிமை அமைப்புக்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்டது.

அந்த வகையில் அறிவூட்டல் செயலமர்வுகள் நடைபெற்றன. மே28 தொடக்கம் ஜூன் 2 வரை பங்களாதேஷில் ஹெல்விராஸ் சுவிஷ் அமைப்பினால் செயலமர்வு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பங்குபற்றியோர் கடந்த இரு வருடங்களாக வளவாளர்களாக பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெற்று முடிந்த 'நாடுகளுக்கிடையிலான அனுபவப் பகிர்வு' நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அம்பாறை மாவட்டத்தில் இருந்து அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட சர்வமதக் குழுவின் தலைவர் ஐ.எல்.ஹாசிம் இலங்கையில் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளை விரிவாக விளக்கியதாகக் குறிப்பிட்டார்.




ஹாஷிம் இந்நிகழ்வு தொடர்பாக தனது கருத்தைத் தெரிவிக்கையில் "பங்காளதேஷ் 1971இல் தான் சுதந்திரமடைந்தது. வெள்ளம், சூறா வளி போன்ற இயற்கை அனர்த்தங்களால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வந்த ஒரு நாடாக இருந்தும் இன்று இலங்கைக்கு கடன் கொடுக்கும் நாடாக வளர்ச்சி அடைந்திருக்கிறதென்றால் காரணம் ஒன்றே ஒன்றுதான். அந்த நாடு இனங்களுக்கிடையேயான உறவை ஆரோக்கியமாக பேணியதாகும்.

நாட்டுப்பற்று அவர்களது இதயத்தில் ஊறியதொன்றாகும். பங்களாதேஷ் மக்கள் தமது நாட்டுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். சகோதர சமூகத்தை இதயபூர்வமாக் நேசிக்கும் உயரிய பண்பு அவரகளிடம் எப்போதும் இருந்து வருகின்றது. மற்ற சமூகத்தை சமஅந்தஸ்துடன் மதிக்கின்றனர். பாரபட்சமின்றி சகலருடைய மனித உரிமையையும் மதிக்க வேண்டும் என்ற உணர்வு சகல மட்டத்திலும் மேலோங்கி இருப்பதை காணக் கூடியதாக இருந்தது.

இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதல் போல் பங்காளதேஷில் 2016 இல் டாக்கா நகர ஹோட்டலில் தீவிரவாத தாக்குதல் ஒன்று நடைபெற்றது. சமூகங்களிடையே எதிர்காலத்தில் இனரீதியாகவோ மதரீதியாகவோ எவ்விதமான பிளவுகளும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் அனைத்து தரப்பும் மிகவும் கவனமாக இருந்தனர்" எனக் குறிப்பிட்டார்.

"எங்களது இந்தப் பயணம் மிகவும் பயனுள்ளதா இருந்தது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

**எம்.ஏ பகுர்தீன்...**
*(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)*



ஆலையடிவேம்பு பல நோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (15) காலை முதல் டீசலை பெற்றுக்கொள்வதற்காக உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட கனரக வாகன உரிமையாளர்கள் நீண்ட வரிசைகளில் வெயில் மழைக்கு மத்தியிலும் காத்திருந்திருப்பதை காணலாம்.

படம் வாச்சிக்குடா விஷேட நிருபர்

# பெரும்தொகை உணவுப் பொருட்களை சேகரிப்பதை தடுப்பதற்கு புதிய சட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெருந்தொகை உணவுப் பொருட்களை சேகரித்து வைப்பதைத் தடுக்கும் வகையில் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் பாரிய நெல் களஞ்சிய உரிமையாளர்கள் ஆகியோரை கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கம் புதிய சட்டங்களை வகுக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடிகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வு காணும் வகையில் நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடன்களை வழங்கும்போது அரசாங்கத்தின் நிதி கொள்கைகளுக்கிணங்க கடன்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது அரச வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அத்துடன் கடன் வழங்கும் கொள்கையை கண்காணிக்குமாறும் மத்திய வங்கி மற்றும் திறைசேரியின் அதிகாரிகளுக்கும் பிரதமர் இதன்போது பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

## பிரதமர் தலைமையில்...

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நிறுவனங்களிடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை உபகுழு அனுமதி வழங்கியுள்ளதுடன் தற்போது அது தொடர்பான கேள்விப்பத்திரம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் இறக்குமதி தொடர்பில் கேள்விப்பத்திர நடவடிக்கைகளை மக்கள் வங்கி மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நேற்று இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தையில், அது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவித்த அமைச்சர் அந்த சந்திப்பில் அமைச்சருடன் மக்கள் வங்கியின் தலைவரும் பங்கேற்றதாகவும் அதன் பயனாக தேவையான நிதியை பெற்றுக்கொடுப்பதற்கு மக்கள் வங்கி உரிய கேள்விப்பத்திரத்தை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் தற்போது எரிபொருள் விநியோகிக்கப்படும் முறைமை தொடர்பில் மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அமைச்சர் எரிபொருள் கொள்வனவிற்காக இதுவரை 110 புதிய யோசனைகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அந்த அனைத்து யோசனைகளையும் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிலிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## உதய கம்மன்பிலவின்...

புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை அலுலகங்களுக்கு சென்று பணியாற்ற வேண்டும். செவ்வாய்க்கிழமையும் வியாழக்கிழமையும் வீடுகளில் இருந்தவாறு ஒன்லைன் ஊடாக கடமையில் ஈடுபடல் 3. மக்கள் அரச அலுவலகங்களுக்கு சென்று ஆவணங்கள், விண்ணப்பங்களை கையளிக்கும் நடைமுறைக்கு பதிலாக வீடுகளில் இருந்தவாறு WhatsApp, மின்னஞ்சல் போன்றவை ஊடாக அவற்றை அரச அலுவலகங்களுக்கு அனுப்பல்.

4.அனைத்து அரச ஊழியர்களுக்கும் இயன்றளவு அவர்களது வீடுகளுக்கு அருகேயுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்ற சந்தர்ப்பம் அளித்தல் .

5.மூன்று நாட்கள் பாடசாலை கல்வி, இரண்டு நாட்கள் ஒன்லைன் ஊடாக கல்வியை தொடரல் 6.அரச மற்றும் தனியார் துறை கூட்டங்களை நிறுத்தி Zoom ஊடாக கூட்டங்களை நடத்தி நேரத்தையும் எரிபொருளையும் சேமித்தல் 7.குறுந்தூர பயணங்களுக்காக ஆசனங்களற்ற பஸ்களை அறிமுகப்படுத்தி அதிகளவிலான பயணிகளை ஏற்றிச்செல்லல். 8.மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் கார்களுக்கு பதிலாக துவிச்சக்கரவண்டி பாவனையை ஊக்குவித்தல்.

## பாடசாலைகளுக்கு...

இன்று வெள்ளிக்கிழமை அனைத்து அரச ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.(ஸ)

# புதிய தேர்தல் முறை தொடர்பில் ஆராயும் தெரிவுக் குழுவின் அறிக்கை அடுத்தவாரம் பாராளுன்றத்தில் சமர்ப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய தேர்தல் முறை அறிமுகம் தொடர்பில் விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் அறிக்கையை அடுத்தவாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி குழுவின் அறிக்கை தயாரிப்பு நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளதாகவும் அதனை அடுத்த வாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தேர்தல், வாக்களிப்பு மற்றும் அதனோடிணைந்த சட்ட நியதிகளை மறுசீரமைப்பு செய்தல் தொடர்பில் தேவையான திருத்தங்களை முன்வைப்பதற்காக மேற்படி விசேட பாராளுமன்றத் தெரிவுக் குழு சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தனவினால் சிலமாதங்களுக்கு முன் நியமிக்கப்பட்டது.

## பேக்கரி உற்பத்திகளின்...

தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது பாண் மற்றும் பணிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களை மக்கள் பெற்றுக் கொள்வது குறைந்துவிட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேக்கரி உற்பத்தி தொழிலுடன, நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை பார்த்து வந்த சுமார் இரண்டு இலட்சம் பேர் வேலையை இழந்துள்ளனர்.

எரிவாயு, டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக பேக்கரி தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், 50 சதவீத பேக்கரிகள் செயல்படாமல் உள்ளன.

பேக்கரி உரிமையாளர்கள் வங்கிகளில் பெற்ற கடனைக் கூட திருப்பிச் செலுத்த முடியாமல் சிரமப்படுகின்றனர். பேக்கரி உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருமாறு பிரதமருக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பேக்கரி பொருட்களின் விற்பனையும் சரிவடைந்துள்ளதால், எதிர்காலத்தில் பணிஸ் ஒன்றின் விலை ரூ.100 ஆக உயரும் என்பது தவிர்க்க முடியாதது.

பெட்ரோல் நெருக்கடியால் 90 சதவீத சூன் பான் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், பேக்கரி பொருட்களை விநியோகம் செய்யும் லொறிகள் 5 முதல் 6 நாட்கள் வரை பெட்ரோல் நிலையங்களில் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார். இதனால், தினசரி பேக்கரி பொருட்களின் விநியோகம் தடைபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருள் நிறுவனங்களுக்கு...

தொடர்பில் தற்போது சரியாக குறிப்பிட முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இலங்கைக்கு பெற்றோல் மற்றும் டீசலை வழங்குவதற்காக புதிய இரண்டு சர்வதேச நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். மேலும், விமானங்களுக்கான ஜெட் எரிபொருள் விநியோகிக்க மற்றுமொரு தனியார் நிறுவனமும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## எரிபொருள் பெறுவதற்காக...

பெற்றுத்தருமாறு கோரி காலி வீதி தெஹிவளை பகுதியில் வீதியை மறித்தது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் கொழும்பு – பஞ்சிகாவத்தை பகுதியில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் குருணாகல், வவுனியா, மன்னார், பதுளை, ஹற்றன் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் எரிபொருள் கோரி மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இதனிடையே எரிபொருள் இன்மையால் ஹற்றனிலிருந்து காலி மற்றும் கொழும்பு நோக்கி செல்லும் பேருந்து சேவைகள் முறையாக முன்னெடுக்கப்படாமையினால் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய நிலைமை காரணமாக இலங்கை போக்குவரத்து சபை டிப்போவினால் தனியார் பேருந்துகளுக்கான டீசல் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தலைவரது அறிக்கைக்கு...

அங்கத்தவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். தெரிவுக்குழுவில் ஏற்படாத உடன்பாடுகளையும், உண்மைக்கு புறம்பான தகவல்களையும் உள்ளடக்கி இந்த இறுதி அறிக்கையை தெரிவுக்குழு தலைவர் சமர்ப்பித்துள்ளார். இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமாயின் அங்கும் அதை நாம் எதிர்ப்போம்.

இந்த போலி அறிக்கையை ஏற்க முடியாது என தெரிவுக்குழுவில், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் அறிவித்தனர். கலப்பு முறையை ஆதரிக்க முடியாது என ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் (ஈபிடீபி) தமக்கு தெரிவித்துள்ளதாக குழு உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவுக்குழுவில் தெரிவித்தார். அகில இலங்கை மக்கள் காங்கிரசும் கலப்பு முறைக்கு இணங்காது என நான் நம்புகிறேன். இந்நிலையில் மிக பெரும்பாலான கட்சிகளின் நிலைபபாடுகளுக்கு விரோதமாக இந்த இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார். தேர்தல் முறை சீர்திருத்தங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்க அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று தனது இறுதி அறிக்கையை குழுவில் சமர்ப்பித்தார். இதையடுத்து பெரும்பாலான தெரிவுக்குழு உறுப்பினர்கள் இந்த இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அறிவித்தனர்.

இதுபற்றி மனோ கணேசன் எம்.பி மேலும் கூறியதாவது,

இந்த குழுவில் இடம்பெறாத அதேவேளை இடம் பெற்றும் நேற்றைய கூட்டத்தில் கலந்துக் கொள்ளாத கட்சி பிரதிநிதிகளின் ஆதரவையும் திரட்டி சுருக்கமான மாற்று நிலைப்பாட்டை எழுத்து மூலமாக தெரிவுக்குழுவுக்கும், பாராளுமன்றத்துக்கும் அறிவிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாற்று நிலைப்பாட்டு அறிக்கையை சுமந்திரன் எம்.பி தயாரிப்பார்.

அதை அடிப்படையாக கொண்டு ஏனைய கட்சிகளின் ஆதரவையும் பெற்று, தெரிவுக்குழுவுக்கும், பாராளுமன்றத்துக்கும் தேர்தல் முறைமை தொடர்பான எமது நிலைப்பாடுகளை நாம் தெரிவிப்போம்.

## பிள்ளையை வாழவைக்க...

காரணமாக தமது பிள்ளையை வாழவைப்பதற்கான வருமானம் இல்லாத காரணத்தினாலேயே தாம் அந்த முடிவுக்கு வந்ததாக தெரிவித்தாரென அது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நேற்று தெரிவித்தார். மேற்படி சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

42 வயது தாயொருவர் தனது ஐந்து வயது பிள்ளையை நேற்று முன்தினம் களனி கங்கையில் வீசியெறிந்ததுடன் தாமும் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்துகொள்ள முயன்றுள்ளார். அச்சமயம் பிரதேச வாசிகள் மேற்கொண்ட பகீரத முயற்சியின் பயனாக அந்தப் பெண் காப்பாற்றப்பட்டார். மேற்படி சம்பவம் தொடர்பில் அந்த பெண்ணை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமது உடலில் ஏற்பட்டுள்ள கடுமையான உபாதை காரணமாகவே பிள்ளையை வளர்ப்பதற்கான வருமானம் இல்லாத நிலையில் பிள்ளையும் தாமும் தற்கொலை செய்துகொள்வதற்கு தீர்மானித்ததாக அவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார். எவ்வாறெனினும் களனி கங்கையில் வீசியெறியப்பட்டுள்ள பிள்ளையை மீட்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர், பொலிஸ் விசேட குழு இணைந்து மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

## பொருளாதார நெருக்கடியை...

தொடர்பில் பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்படி விரிவான திட்டத்தை பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன,

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அதனை வெற்றிகொள்வதற்கான அரசாங்கத்தின் குறுகிய கால மற்றும் மத்திய கால இலக்கு தொடர்பில் விடயங்களை முன்வைத்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக் கொள்வது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி பேச்சுவார்த்தையில் பாராளுமன்ற உறுப்பினர்களான முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, ஹர்ச டி சில்வா, இரான் விக்ரமரத்ன, ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், அநுர பிரியதர்சன யாப்பா, சரித்த ஹேரத் உள்ளிட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## கொழும்பு யாழ்ப்பாணம்...

தெரிவித்துள்ளார். நேற்று யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,....

இன்று முதல் கல்கிசையில் இருந்து காங்கேசன்துறைக்கு இரவு நகர்சேர் கடுகதி புகையிரதமொன்று சேவையில் ஈடுபட உள்ளது. இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கல்கிசையில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு அங்கிருந்து வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய புகையிரத நிலையங்களில் நிறுத்தப்பட்டு பொல்காவலை, குருநாகல், அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணத்தை 5.25க்கு வந்தடைந்து அங்கிருந்து 5.30 க்கு புறப்பட்டு காங்கேசந்துறையை சென்றடையும்

ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் காங்கேசன்துறையில் இருந்து இரவு 10 மணிக்கு புறப்பட்டு சுன்னாகம், கோண்டாவில் ஊடாக 10.25க்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து 10.30மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், குருநாகல், கொழும்பு, கம்பஹா, மருதானை சென்றடைந்து அங்கிருந்து பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளையை சென்றடையவுள்ளது.

நகர்சேர் கடுகதிக்குரிய ஒரு வழி கட்டணமாக 2,800 ரூபா அறவிடப்படவுள்ளது. இதற்கான முன்பதிவுகள் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலும் ஏனைய முன்பதிவுகளை மேற்கொள்ளக்கூடிய புகையிரத நிலையங்களிலும் மேற்கொள்ளலாம். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இது அமையும் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## இறுதி டீசல் கப்பல்...

நேற்றைய தினமும் பல்வேறு பகுதிகளிலும் எரிபொருளுக்காக பெருமளவு மக்கள் வரிசையில் காத்திருந்ததையடுத்து கொழும்பிலும் கொழும்பை அண்டிய சில பகுதிகளிலும் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் சில வீதிகள் போக்குவரத்துக்காக தடைசெய்யப்பட்டுமிருந்தன.

நேற்று நாட்டுக்கு கிடைத்துள்ள டீசலை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் இன்று நடைபெறுமென்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு வரிசையில் நின்றவர்களில் பெருமளவானோர் டீசலைக் கொள்வனவு செய்வதற்காகவே வரிசையில் காத்திருந்தனர். பெருமளவிலான மக்கள் பல நாட்களாக தொடர்ந்து இவ்வாறு எரிபொருள் நிலையங்களுக்கருகில் வரிசையில் காத்திருப்பதை காண முடிந்தது. சில பிரதேசங்களில் நேற்று பிற்பகல் டீசல் வழங்கப்பட்டாலும் நேற்று மதியம் வரை பெற்றோலைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றைய தினம் எரிபொருள் விநியோகிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விவரங்களை வெளியிட்டிருந்தது. அதற்கிணங்க எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கு முன்பதாகவே பணத்தை வழங்கவேண்டுமென பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தலை வழங்கியிருந்தது.

## 'கிழக்கு முதலீட்டு...

பெற்றது. இரு நாடுகளுக்குமிடையிலான பல விடயங்கள் தொடர்பில் ஆளுநரும் உயர்ஸ்தானிகரும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

அதற்கமைய, ஆளுநரின் ஆலோசனைக்கமைய, கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்தப்பட்டு வரும் 'நிலைபேறான பால் பண்ணை திட்டம்' நியூஸிலாந்து உயர் ஸ்தானிகரினால் பாராடப்பட்டது. அது தொடர்பில் அவசியமான உதவிகளை வழங்குவதாக, உயர் ஸ்தானிகர் இதன்போது ஆளுநரிடம் உறுதியளித்தார்.

இலங்கையில் நியூஸிலாந்து உயர் ஸ்தானிகராலயம் ஸ்தாபிக்கப்பட்டு சுமார் ஒரு வருடம் கடந்துள்ளதோடு, அதன் மூலம் இலங்கைக்கு வந்துள்ள முதலாவது நியூஸிலாந்து உயர் ஸ்தானிகராக மைக்கேல் அப்பிள்டன் விளங்குகிறார். இரு நாடுகளுக்குமிடையிலான பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆளுநரும் உயர் ஸ்தானிகரும் விரிவாக கலந்துரையாடியிருந்தனர். இதன்போது, தற்போதைய அரசாங்கத்தினால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட சேதன விவசாயத் திட்டம் ஏன் தோல்வியடைந்தது என நியூஸிலாந்து உயர் ஸ்தானிகர் வினவினார். குறித்த திட்டம் அரசியல் மயப்படுத்தப்பட்டதன் காரணமாக அத்திட்டம் சீர்குலைந்ததாக ஆளுநர் அவருக்கு விளக்கமளித்தார்.

## மேல் மாகாணத்தில்...

மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்டடங்களை நிர்மாணித்தல், தொழிற்சாலைகள், கழிவுப்பொருட்களை அகற்றுதல், நீரை சேமித்து வைக்கும் பீப்பாய்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், வாளி, பூச்சாடிகள் மற்றும் அகற்றப்படும் பொருட்கள் முதலானவை டெங்கு நுளம்புகள் பரவும் இடங்கள் என ஆய்வு மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நாட்டின் 16 மாவட்டங்களில் உள்ள 83 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஆகக்கூடுதலாக டெங்கு நோய் பரவி வருவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தின் 18 சுகாதார உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் ஆகக்கூடுதலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். கம்பஹா, கொழும்பு, களுத்துறை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, கண்டி,மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோய் பரவிவருவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

## அரச ஊழியருக்கு...

மாயாதுன்னே கையொப்பமிட்டுள்ள மேற்படி சுற்றுநிருபம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க வெள்ளிக்கிழமையை விடுமுறை தினமாக அறிவித்தாலும் வார நாட்களில் ஏதாவதொரு தினத்தில் அரசாங்க விடுமுறை தினம் அமையுமானால் வெள்ளிக்கிழமைக்கு வழங்கப்பட்டுள்ள குறித்த விடுமுறைத் தினம் சாதாரண தினமாக கொள்ளப்பட்டு அரச அலுவலகங்கள் கடமைக்காக திறக்கப்பட வேண்டும் என்றும் அந்த சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ)

## நுரைச்சோலையின்...

மின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி 75 நாட்களுக்கு நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதியை மூட வேண்டியுள்ளதாக குறித்த சங்கத்தின் இணைச் செயலாளர் எரங்க குடஹேவா தெரிவித்தார்.

இவ்வாறு தற்காலிகமாக மூடப்படுவதால் மின்வெட்டை தொடர்ந்தும் அமுல்படுத்தும் நிலையேற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கட்டுவாப்பிட்டிய ஆலய...

ஆலயத்திற்கு அருகிலுள்ள வீதியிலிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகத்திற்கிடமான பொதியொன்றை கண்டெடுத்துள்ள பொலிஸார் அதிலிருந்து கைக்குண்டை மீட்டுள்ளனர்.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலையடுத்தே இராணுவத்தினரால் மேற்படி பொதி மீட்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸாரும் பொலிஸ் விசேட செயலணி அதிகாரிகளும் குறித்த இடத்திற்கு அழைக்கப்பட்டு காதுகாப்புடன் மேற்படி கைக்குண்டை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பாவனையாளர் கட்டணம்...

2019ஆம் ஆண்டு முதல் இன்று வரை 467,808 புதிய நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதோடு 2025ஆம் ஆண்டுக்கிடையில் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 5,946,352 இலக்காக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படும் நிலையில் மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக தேசிய சமுதாய குடிநீர் வழங்கல் திணைக்களத்தின் மூலம் கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியின்போது முன்மொழியப்பட்ட 84 திட்டங்கள் உட்பட 704 புதிய கிராமம் சார் சமுதாய குடிநீர்த் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் நீர்வளச் சபை சட்டத்தை திருத்துவது மற்றும் தேசிய பொது நீர் வழங்கல் திணைக்களச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. வர்த்தக நோக்கில் செயற்படும் பெரிய அளவிலான குழாய் கிணறுகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கவும் குழாய் கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் மற்றும் விவசாய கிணறுகளை முழுமையாக கணக்கெடுக்கவும் பாரியளவிலான நிலங்களை துண்டாக்கும்போது நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கு அவசியமான திட்டங்களை தயாரிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

2022 ஏப்ரல் மாதம் வரை வீடுகள், வர்த்தக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் உட்பட பாவனையாளர்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டிய தொகை சுமார் 7,500 மில்லியன் ரூபாவாகுமென இதன்போது அதிகாரிகள் தெரிவித்தனர்.(ஸ)







தெஹிவளை வெங்கடேஸ்வர மகாவிஷ்ணு ஆலயத்தில் நம்மாழ்வார் ஜெயந்தி அண்மையில் நடைபெற்றது. இதனை முன்னிட்டு சிறப்பு திருவாய்மொழி முற்றோதல் பாராயணம் ஆராதனை நிகழ்வு காலை, நண்பகல், மாலை என மூன்று வேளையும் நடைபெற்றது. நிகழ்வில் ஆயர் பாடி பக்தி இசை குழுவினர் திருவாய் மொழிஆராதனை நடத்துவதையும் காணலாம்.



இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை அண்மையில் அலரிமாளிகையில் சந்தித்தார்.

# மே 9 இல் நடந்த 857 வன்முறை சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 2,784 பேர் கைது

கொள்ளுப்பிட்டி, காலிமுகத்திடல் மற்றும் நாட்டின் பல பகுதிகளில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் இந்த 10 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இச் சம்பவங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நால்வர் நேற்று (14) பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் மேலும் பத்து பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கடந்த 9 ஆம் திகதி 857 வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் சம்பவங்கள் தொடர்பில் 2,784 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 1,096 சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பங்களாதேஷ் பாதுகாப்பு சேவை கட்டளை அதிகாரிகள் கல்லூரியின் கட்டளை தளபதி பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு




ஸாதிக் ஷிஹான்

பங்களாதேஷ் பாதுகாப்பு சேவை கட்டளை அதிகாரிகள் கல்லூரியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் இப்னே பஸால் ஷெய்குஸ்ஸமான், இலங்கை பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்தார். இச்சந்திப்பு கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுரவில் உள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது இடம்பெற்ற சுமூகமான கலந்துரையாடலின் போது, இலங்கை பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் அதிகாரிகள் கல்லூரியின் முயற்சிகளை பாராட்டிய மேஜர் ஜெனரல் ஷெய்குஸ்ஸமான், இக்கல்லூரி கற்றல் மற்றும் பயிற்சிக்கான உகந்த சூழலைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜெனரல் ஷெய்குஸ்ஸமானின் கருத்துக்களுக்கு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன நன்றி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் மேஜர் ஜெனரல் ஷெய்குஸ்ஸமான் ஆகியோர் நினைவுச் சின்னங்களை பரிமாறிக்கொண்டனர்.

இந்நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்காரவும் கலந்துகொண்டார்.

# நாடுகளுக்கு உதவ முடிந்தமை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் வெற்றி

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் பெருமிதம்



இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் 'கருணை ஊசி மருந்து' திட்டத்தின் ஊடாக 98 நாடுகளுக்கு இந்தியா கொவிட் தடுப்பூசிகளை வழங்க முடிந்தமை இந்திய வெளிநாட்டு கொள்கைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும் இந்திய வெளிநாட்டமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் எட்டாண்டு ஆட்சியின் வெற்றி தொடர்பாக டில்லியில் உரையாற்றிய இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், உலகின் முக்கிய நிகழ்வுகளில் இந்தியா தன் பங்களிப்பை வழங்கி வந்திருப்பதாகவும், நேபாள பூகம்பம், யேமன் பிரச்சினை, மாலைதீவு தண்ணீர் பிரச்சினை, இலங்கை மண்சரிவு, மியன்மார் புயல், மொஸாம்பிக் வெள்ளம் என நட்பு நாடுகளின் கஷ்டங்களில் இந்தியா முதலாவது உதவும் நாடாகக் கைகொடுத்து வந்திருக்கிறது என்று தெரிவித்திருக்கும் அவர், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை அவ்வாறுதான் வடிவமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, கரிபியன் நாடுகள் மற்றும் பசுபிக் தீவுகள் என்பன கொவிட் தொற்றினால் பொருளாதார பாதிப்புகளை எதிர்நோக்கியபோது இந்தியா தனது உள்ளூர் தயாரிப்பான தடுப்பூசிகளை வழங்கியதாகவும் குறிப்பிட்டிருக்கும் அவர், கொவிட் தடுப்பூசியாகட்டும் அல்லது பொருளாதார கஷ்டங்களாகட்டும் தன் அயல் நாடுகளுக்கு உதவுவதில் இந்தியா முன்னணியிலேயே இருந்து வந்திருக்கிறது என்று அவர் தனது உரையில் மேலும் கூறியுள்ளார்.

'வெக்சீன் மைத்ரி' எனப்படும் ஊசிமருந்தை நாடுகளுக்கு வழங்கும் திட்டம், இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றியாகும் என அவர் பெருமிதத்துடன் தெரிவிக்கவும் செய்தார்.

# சுதந்திர பலுசிஸ்தான் அமைப்பு கண்டனம்

FBM
FREE BALOCHISTAN MOVEMENT

காணமலாக்கப்பட்டோரது குடும்பத்தினரின் அமைதியான செயற்பாடுகள் மற்றும் கராச்சியில் இடம்பெறும் ஏனைய அமைதி ஆர்ப்பாட்டங்கள் மீது பாகிஸ்தான் படைகளின் தாக்குதல்களை சுதந்திர பலுசிஸ்தான் அமைப்பு கண்டித்துள்ளது.

கராச்சி பொலிஸார் கடந்த திங்கள் என்று பெண்கள் உட்பட பல டஜன் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்திருந்தனர். காணாமல்போன இரு மாணவர்கள் தொடர்பில் சிந்த் சட்டமன்றத்திற்கு முன்னாள் இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.


திகதி 15.06.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4787
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,271,840.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,908,661.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 1 3 2 5 2 9

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0096
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,960,307.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 01 08 49 59
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1265
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,504,120.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 0 2 3 8 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,834,102.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3029
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,940,220.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 55 61 65 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,546,688.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 817
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,234,760.00
வெற்றி இலக்கினம் P வெற்றி இலக்கங்கள் 25 34 44 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,628,037.60

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1135
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,173,460.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 256,616,970.00
P 26 15 37 53 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

(கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு)

MEPA

## களஞ்சிய வளாகம் மற்றும் வீட்டை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

### கேள்விக்கான அழைப்பு (IFB)

கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, இல. 177 எனுமிடத்தில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் மாதாந்த வாடகை/ குத்தகை அடிப்படையில் கீழேயுள்ள களஞ்சியம் மற்றும் கட்டிட தேவைப்பாடுகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. 05 அறைகளுடான வீடு**

**02. 5000 சதுர அடி களஞ்சிய வளாகம்**

**அதற்கான அடிப்படை தேவைப்பாடுகள் கீழ்க்காணுமாறு அமையும்**

**01. வீட்டிற்கான தேர்ந்தெடுக்கும் தகவுத் திறன்கள்**

1. நீர்கொழும்பு, சரக்கு கந்த கடற்கரையிலிருந்து 10Km இற்குள் பமுனுகம வத்தளை. ஜா-எல பிரதேசத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
2. குறைந்தபட்சம் டபள் கட்டிலுடன் 5 அறைகள் இருத்தல் வேண்டும்.
3. போதுமான துப்புரவேற்பாட்டு வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. பாதுகாப்பு வாயிற்கதவு மற்றும் மதிலால் சூழப்பட்டிருத்தல் வேண்டும்.
5. கட்டிடத்துக்கென ஒதுக்கப்பட்ட மீட்டருடன் மின்சாரம் மற்றும் நீர் இணைப்புக்கள் இருத்தல் வேண்டும்.
6. குறைந்தபட்சம் 5 வாகனங்கள் நிறுத்தி வைக்கக்கூடிய வசதிகள் இருத்தல் வேண்டும்.
7. காணி மற்றும் நுழைவுப் பாதை மழைநீரில் மூழ்காது இருத்தல் வேண்டும்.

**02. 5000 சதுர அடி களஞ்சிய வளாகத்திற்காக தேர்ந்தெடுக்கும் தகவுத்திறன்**

1. கொழும்புத்துறைமுகம் மற்றும் திக்ஓவிட்ட துறைமுகம் அருகில் (10Km எல்லைக்குள்) அமைந்திருத்தல்
2. 5000 சதுர அடி தரைப் பிரதேசம் இருத்தல் வேண்டும்.
3. களஞ்சியத்திற்குள் 20 அடி / 40 அடி அளவான கொள்கலன்களை செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
4. களஞ்சியம் பாதுகாப்பு வாயிற்கதவும் மற்றும் மதிலால் சூழப்பட்டிருத்தல் வேண்டும்.
5. கட்டிடத்திற்கு ஒதுக்கப்பட்ட மீட்டருடன் மின்சாரம் மற்றும் நீர் இணைப்பு இருத்தல் வேண்டும்.
6. போதுமான துப்புரவேற்பாட்டு வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. களஞ்சியம் மற்றும் அதன் சுற்றுச்சூழல் முழுமையாக உள்ளடக்குமாறு CCTV கெமரா அமைப்பு இருத்தல் வேண்டும்.
8. கொள்கலன்களை அடைவதற்கு போதுமான பிரவேச பாதை வசதிகள் இருத்தல் வேண்டும்.
9. காணி மற்றும் பிரவேச பாதை மழை நீரில் மூழ்காத இடமாக இருத்தல் வேண்டும்.
10. முறையான தீயணைப்பு உபகரண அமைப்பு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
11. பாதுகாப்பு கூடம் மற்றும் அலுவலகமொன்று இருத்தல் வேண்டும்.
12. களஞ்சியம் முழுமையாக உள்ளடக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

### பொதுவான விடயங்கள்

01. மேற்கண்டவாறே களஞ்சிய வளாகம் மற்றும் வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்றவர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது சகல விபரங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி வசதிகள் மற்றும் அதற்கு மேலதிகமாக காணப்படும் ஏனைய வசதிகள் போன்றவை பற்றிய விபரங்களை விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் ஆவணங்களின் பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன், இவ் விலைமனுக்களின் மூலப்பரதி (original) மற்றும் - நகல் பிரதி (Duplicate) என வேறு இரு உறைகளில் இட்டு பின்னர் அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில இட்டு பொறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கட்டிடம் வாடகைக்கு வழங்குதல் பற்றிய விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டியது உரிமையாளர் அல்லது அங்கீகாரம் பெற்ற நபர் மூலம் மாத்திரமே களஞ்சிய வளாகம் அல்லது வீட்டிற்காக வேறு வேறாக விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

03. குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட கட்டிடத்தின் வரைபடம், அனுகூலச் சான்றிதழ், சொத்துக்களுடன் சம்பந்தப்பட்ட உறுதி அல்லது தேவையெனில் அட்டோர்ணி தத்துவபத்திரம், வளவின் வரைபடம் போன்றவற்றின் பிரதியொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. விலைமனுக்கள் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘மாதாந்த வாடகை/ குத்தகை அடிப்படையில் களஞ்சிய வளாகம் அல்லது வீட்டை வழங்குதல்’ என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. இடைத்தரகர்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் விலைமனுக்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் இல்லையெனில் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும். உங்களது விலைமனுக்களை 2022.06.29ம் திகதி 14.00 மணிக்கு முன் குறித்த முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும் அத்துடன் அதன் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது.

06. விலைமனுக்கோருதல் முடிவடைந்தவுடன் கொழும்பு -05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, இல. 177 எனுமிடத்தில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்வி சமர்ப்பிப்போருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க வாய்ப்பளிக்கப்படும்.

07. மேலதிக விபரங்களை தொ.பே.இல. 2554006 அல்லது 2554373 மூலம் நீடிப்பு 101 அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் (கேள்விச் சபை),**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை**
**இல. 177, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட**
**கொழும்பு-05.**

# புத்தளம் புனித மரியாள் மகா வித்தியாலய பொன் விழா

புத்தளம் புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயத்தின் 150 ஆம் ஆண்டு பொன் விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன.

இதன் ஓர் அங்கமாக கல்லூரிக்கு வருகை தந்த இக்கல்லூரியின் பழைய மாணவரும், திருகோணமலை மறைமாவட்ட ஆயருமான அதி வணக்கத்திற்குரிய கிரிஸ்ட்டியன் நொயெல் இம்மானுவெல் மற்றும் சிலாபம் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய வெலன்ஸ் மென்டிஸ் ஆகியோர், கல்லூரிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாசிகசாலை, கணனியறை மற்றும் கணித விஞ்ஞான ஆய்வுகூடங்களை கொண்ட கட்டடத் தொகுதியை (15) திறந்து வைத்து ஆசீர்வதித்தனர்.

அதனைத் தொடர்ந்து திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய கிரிஸ்ட்டியன் நொயெல் இம்மானுவெலின் தலைமையில் திருப்பலி பூசையும் நடைபெற்றது.

இதேவேளை முப்பொன்விழாவையொட்டி கலை விழாவும் நினைவு மலர் வெளியீடும் இம் மாதம் 24 ம் திகதி நடைபெறவுள்ளது.


## விலைமனுக் கோரல் அறிவித்தல்

### மாவனல்லை பிரதேச சபைக்கு உரித்தான சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதல்

2022.07.15ம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரையிலான காலத்திற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

❖ விலைமனுப் பத்திரங்களை வழங்குதல் - 2022.06.16 ஆம் திகதி முதல் 2022.07.06 ஆம் திகதி பி.ப.2.30 வரை
❖ விலைமனுப் பத்திரங்களை கையேற்றல் - 2022.07.07 ஆம் திகதி மு.ப. 10.00 வரை
❖ விலைமனுப் பத்திரங்களை திறத்தல் - 2022.07.07 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். குறித்த நிகழ்விற்கு விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்துமூலமான அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவருக்கு பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

விண்ணப்பப்பத்திர கட்டணம் - 1000.00

அட்டவணை

| தொடர் இலக்கம் | விலைமனுக் கோரும் இடத்தின் பெயர் | குறைந்த வருடாந்த கேள்வி விலை | மீளச் செலுத்தும் விலைமனு வைப்புத் தொகை | மீளச் செலுத்தாத விலைமனு வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | ஹிஜ்ராகம மாட்டிறைச்சிக் கடை | 1380000.00 | 69000.00 | 5000.00 |

விலைமனுப் பத்திரங்களை உரிய நேரத்திற்கு முன் மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் அல்லது ''தவிசாளர், பிரதேச சபை, மாவனல்லை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு
T.P - 035-2246275

**2022.06.16 ஆம் திகதி**
**மாவனல்லை பிரதேச சபையில்.**

**R.P.N தஸந்த ஸ்டிவன்,**
**தவிசாளர்,**
**மாவனல்லை பிரதேச சபை**




திண்டுக்கல், தோட்டனூத்து கிராமத்தில் 17.17 கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் பணிகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் இ. பெரியசாமி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். அயலக நல்வாழ்வு நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச. விசாகன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ச. தினேஷ்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் ப. வேலுச்சாமி வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச. காந்திராஜன் உட்பட துறைசார் அலுவலர்கள் பலர் அருகில் உள்ளனர்.

# எரிபொருள் பற்றாக்குறையால் 145, 178 ஆம் இலக்க பஸ் சேவைகள் பாதிப்பு

வட கொழும்பு தினகரன் நிருபர்

கடந்த சில நாட்களாக டீசல் தட்டுப்பாடு நிலவுவதால் மட்டக்குளி கங்காராம வரையிலான145 ஆம் இலக்க மார்க்க பஸ்களும் மட்டக்குளி நாரஹேன்பிட்டி 178 ஆம் இலக்க மார்க்க பஸ்களும் தற்போது சேவையில் குறைந்தளவே ஈடுபட்டுள்ளன.

இதனால் பொது மக்கள் கடந்த புதன் கிழமை முதல் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர். தொழிலுக்குச் செல்வோர் மிக கஷ்டத்தை அனுபவிப்பதுடன் பெற்றோல் தட்டுப்பாட்டினால் முச்சக்கர வண்டி சாரதிகளும் நீண்ட தூரபயணத்தை மேற்கொள்ள மறுத்து வருகின்றனர்.

இ.போ.சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்தாலும் பயணிகளின்தேவைக் கேற்ற வகையில் பஸ்கள் சேவையில் அமர்த்தப்படவில்லை என பயணிகள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் மட்டக்கருளி, மோதர, கொட்டாஞ்சேனை எரிபொருள் விற்பனைநிலையங்களில் மண்ணெண்ணெய் விநியோகம் பல நாட்களாக செயல்படாமையினால் மக்கள் வீதிகளில் மண்ணெண்ணெய் பெறுவதற்காக நீண்ட கியூவரிசையில்காத்திருக்கின்றனர்.

வயது எல்லைகளை தாண்டிய நிலையில் மக்கள் பிளாஸ்டிக் கேன்களுடன் எரிபொருள்விற்பனை நிலையங்களில் இரவு பகல் பாராது கியூ வரிசையில் நிற்பதைகாணக் கூடியதாக உள்ளது. மூன்று மாதங்களின் பின்னர் மட்டக்குளி பகுதியில் லாப் கேஸ் விநியோகம் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.


# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர் களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD09/3108/2021 | கணனி முறைமைகளுக்கான காப்புறுதி - மாநகர பொருளாளர் திணைக்களம் | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 2,240.00 | 20,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD13/1211/2022 | நகர மண்டப கட்டிடம், மற்றும் நகர மண்டப புதிய கட்டிடத்திலுள்ள கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள், அச்சுப்பொறிகள், தொலைநகல், புகைப்படப் பிரதி இயந்திரம், விரல் ரேகை பதிவு போன்றவற்றுக்கான பராமரிப்பு | | ரூபா 2,240.00 | 20,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 3. | CPD20/1413/2021 | சுதுவெல்லயிலுள்ள கொ.மா. சபையின் பிரதான களஞ்சியசாலை கட்டிடத்தொகுதி மற்றும் பொரளை கெம்பல் பார்க் மற்றும் மாதம்பிட்டியிலுள்ள மாநகர சபை எரிபொருள் நிலையங்களுக்கு புதிய வீடியோ கண்காணிப்பு முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | | ரூபா 2,240.00 | 50,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 4 | CPD15/1046/2022 | விஞ்ஞான ரீதியாக நவீனமயப்படுத்தப்பட்ட ஆயுர்வேத மருந்துகளின் பெறுகை | | ரூபா 5,600.00 | 50,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 5 | CPD18/1134/2022 | The Digital Meeting Automation Software | | ரூபா 5,600.00 | 200,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) **இரண்டு முறைகளில்** பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **மக்கள் வங்கி நகர மண்டப கிளையில்** பேணப்படும் **167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு** வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ **வட்டார அலுவலகம்-04,**
இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
கொழும்பு 06.

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
மாளிகாகந்த, கொழும்பு-10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-07-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2022 ஜூலை 06ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2022.12.03ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2022.11.03ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022 ஜூலை 07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022 ஜூலை 07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**


# யாசின் மாலிக்கு ஆயுள் தண்டனை



ஜம்மு காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களில் ஒருவரான யாசினுக்கு டில்லி நீதிமன்றம் அண்மையில்ஆயுள் தண்டனை வழங்கியது. அவர் கைதுசெய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படும் வரை பாகிஸ்தான் ஊடகங்களும் இணைய தளங்களும் யாசின் மாலிக் தொடர்பாக போலியானதும் உண்மைகளை மறைப்பது போலவும் செய்திகளை வெளியிட்டு வந்திருப்பதாக தெரியவந்துள்ளது.

செய்திகளின் உண்மைத்தன்மையையும் வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சுகளையும் கண்டுபிடித்து அவற்றின் உண்மைத் தன்மைகளை வெளிப்படுத்தும் டிஜிட்டல் ஆய்வு மற்றும் பகுத்தறியும் நிலையம் இத்தகவலை வெளியிட்டுள்ளது. யாசின் மாலிக் மீதான விசாரணைகள் நடைபெற்று வந்தபோது யாசின் மாலிக்கை விடுதலை செய், மாலிக்குடன் பாக். நிற்கிறது என்பதுபோன்ற 'ஹேஷ்டெக்' தளங்கள் புதிது புதிதாக உருவாகி மாலிக் விடுதலைக்கான உலகளாவிய ஆதரவைத் திரட்டத் தொடங்கியதாகவும் சமூக வலைத்தளங்களில் அவற்றின் நடவடிக்கைகள் உச்சம் பெற்றதாகவும் இந்நிலையம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் அரசும் எதிர்க்கட்சிகளும் மாலிக் கைதுசெய்யப்பட்டதை கடுமையாக விமர்சித்திருந்தன. மாலிக்கின் மனைவியும் ஊடகவியலாளர்களை சந்தித்து மாலிக்கின் விடுதலையை வற்புறுத்தினார். மேலும் ஸ்ரீநகரில் அவரது விடுதலைக்காக பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது. இப்பேரணி தொடர்பாக ஆராய்ந்த மேற்படி நிலையம், அப்பேரணி தொடர்பான புகைப்படங்களும் காணொளிகளும் 2018 ஆம் ஆண்டு வொஷிங்டனில் நடைபெற்ற ஒரு பேரணியை வைத்து போலியாக உருவாக்கப்பட்டவை என்பதை கண்டுபிடித்துள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகள், சதித் திட்டம், பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் யாசின் மாலிக் மீது ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## நுவரெலியாவில் சர்வதேச யோகாசனம் வைபவம்

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு (கண்டி) இந்திய தூதுவர் டாக்டர் செல்வி அதிராவின் அனுசரணையுடன் நுவரெலியா உடற்பயிற்சி நிலையம், நுவரெலியா ரோட்டரிக்கழகம், நுவரெலியா லயன் கழகம் ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் நுவரெலியா கிறகறி வாவி கரையிலுள்ள பூங்காவில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் 7 மணிவரை யோகாசனம் நடைபெறும். இந்த யோகாசனம் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டுக்குழு சார்பில் நுவரெலியா லயன்ஸ் கழக செயலாளர் ஜெகதீசன் குமரேஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## அன்னதானம் வழங்கல்

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் கலைஞர் ஜோசப் பெர்னாண்டோவின் ஏற்பாட்டில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோணியார் ஆலய திருவிழா தினத்தன்றும் (13.06.2022) மறுநாளான (14.06.2022) பொசன் பௌர்ணமி தினத்தன்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தலைமையில் கொட்டாஞ்சேனை சங்கமித்த மாவத்தையில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.


# அறிவித்தல்

## இப்பாகமுவ பிரதேச சபை

### 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

2023ஆம் ஆண்டிற்காக இப்பாகமுவ பிரதேச சபையின் நிகழ்ச்சித் திட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரம் பிரதேசத்தின் பொதுமக்கள் மற்றும் சனசமூக சங்கங்களிலிருந்து அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளை 2022 ஜூன் 30ம் திகதிக்கு முன் கிடைக்கச் செய்யுமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

**டபிள்யூ. அஜித் குமார் விக்ரமசிங்க**
**பிரதேச சபை,**
**இப்பாகமுவ**

**தொலைபேசி இலக்கம்: 037-2259977**



# சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

வேலைவாய்ப்பு

113

சுசூகி கார்கள்
விற்பனைக்கு

CP CAY-4122 Suzuki DAA-MH55S- Wagon R Motor Car 2017 Orange கூடிய விலைக் கோரிக்கைக்கு. சிபிசி பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுக ஸ்தோட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 2002 7 2 . 036578

122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

WP HP-1504 Bajaj, 2003, CP QJ-9217 Bajaj, 2007, CP AAX-51 1 3 Bajaj , 2015, Threewh ee l கூடிய விலைக் கோ ரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 036745

321

வெற்றிடங்கள்
தோட்டத்துறை

தோட்ட வேலை, தேயிலை கொ முந்து பறித்தல் மற்றும் தோட்ட வேலைகளிற்கு குடும்பமொன்று மற்றும் இரண்டு கங்காணிகள் தேவை. நீர், மின்சாரம் உண்டு. அனுபவத்தின் அடிப்படையில் சம்ப ளம். அழைக்கவும் 0773436200. 036525

Repeat Your Ad For Better Offers

# இஸ்லாத்தில் நம்பிக்கை சுதந்திரம்

இஸ்லாம் வணக்க வழிபாடுகளை மாத்திரம் போதிக்கும் மார்க்கமல்ல. அது ஒவ்வொருவரும் ஏனையவர்களுடன் கொண்டுள்ள உறவுகளை பேணி நடந்து கொள்ளுமாறும் அவர்களது உணர்வுகளை மதித்து நடந்து கொள்ளுமாறும் உரிமைகளை நிறைவேற்றுமாறும் கற்றுத் தருகின்றது. இதனை அல் குர்ஆனின் பின்வரும் வசனங்கள் எடுத்தியம்புகின்றன.

**'நம்பிக்கை கொண்டோரே! ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தைக் கேலி செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தோராக இருக்கக்கூடும். எந்தப் பெண்களும் வேறு பெண்களைக் கேலி செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தோராக இருக்கக்கூடும். உங்களுக்குள் நீங்கள் குறை கூற வேண்டாம். பட்டப் பெயர்களால் குத்திக் காட்ட வேண்டாம். நம்பிக்கை கொண்ட பின் பாவமான பெயர் (சூட்டுவது) கெட்டது. திருந்திக் கொள்ளாதவர்கள் அநீதி இழைத்தவர்கள்'. *(49:11)***

**'நம்பிக்கை கொண்டோரே! ஊகங்களில் அதிகமானதை விட்டு விலகிக் கொள்ளுங்கள். சில ஊகங்கள் பாவமாகும். துருவித் துருவி ஆராயாதீர்கள். உங்களில் ஒருவர் மற்றவரைப் புறம் பேசாதீர்கள். உங்களில் எவரேனும் இறந்த தமது சகோதரனின் மாமிசத்தைச் சாப்பிட விரும்புவாரா? அதை வெறுப்பீர்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள். அல்லாஹ் மன்னிப்பை ஏற்பவன். நிகரற்ற அன்புடையோன். *(49:12)***

நபி (ஸல்) அவர்கள் நற்பண்பு மிக்கவராகவும் மற்றவர்களின் உரிமைகளை சரிவர நிறைவேற்றக் கூடியவர்களாகவும் உணர்வுகளை மதிக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

**ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் 'நீங்கள் ஒருவொருக்கொருவர் பொறாமை கொள்ள வேண்டாம். பொருட்களை வாங்கும் நோக்கமில்லாமல் விலையை அதிகரிக்க வேண்டாம். நீங்கள் ஒருவொருக்கொருவர் கோபப்பட வேண்டாம்' என்று குறிப்பிட்டார்கள்.** (ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)

அவ்வாறே பிற சமூக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவற்றை மதித்து நடக்க வேண்டும் என்றும் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

ஒவ்வொருவருக்கும் அவரவரது மத நம்பிக்கைகளும், மத, கலாசார அடையாளங்களும் பிரத்தியேக வாசகப் பிரயோகங்களும் முக்கியமானவை. பெறுமதி வாய்ந்தவை. அவற்றை மதித்து நடப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். ஒருவரது உணர்வுகளை குறைத்து மதிப்பிடுவதற்கோ, அதற்கு களங்கங்களை ஏற்படுத்துவதற்கோ, உணர்வுகளைத் தூண்டி குழப்பத்தை ஏற்படுத்துவதற்கோ, குறை கூறி விமர்சிப்பதற்கோ இஸ்லாம் இடமளிக்கவில்லை.

அதன் காரணத்தினால் ஒருவரது மத நம்பிக்கைகளும், கலாசார விழுமியங்களும் மற்றொருவருக்கு தவறாக, விமர்சனத்திற்குரியதாகத் தென்பட்டால் அது தொடர்பில் தெளிவையும் விளக்கத்தையும் பெற்றுக்கொள்ளவே முயற்சிக்க வேண்டும். அதுவே நாகரிகமான நற்பண்பாகும்.

அதனால் தான் இஸ்லாம் நற்பண்புகளும் விழுமிய நெறிமுறைகளும் நிறைந்தவர்களாக மனிதர்களை உருவாக்க விரும்புகின்றது. இப்பின்புலத்தில் தான் அல் குர்ஆன், **'அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் திட்டாதீர்கள்' (6:108)** என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இவ்வசனத்தின் ஊடாக பிற மக்கள் வழிபடும் தெய்வங்களைத் திட்ட வேண்டாம், குறை கூற வேண்டாம் என்று தடை விதிக்கப்படுகின்றது. இதன் ஊடாக மத, கலாசார உரிமைகளையும் விழுமிய நெறிமுறைகளையும் அங்கீகரித்துள்ள இறைவழிகாட்டலாகவும் இஸ்லாம் விளங்குகிறது. இதற்கு, **'நீங்கள் வணங்குபவைகளை நான் வணங்க மாட்டேன். நான் வணங்குபவைகளை நீங்கள் வணங்கவில்லை. உங்களுடைய (செயலுக்குரிய) கூலி உங்களுக்கும், என்னுடைய (செயலுக்குரிய) கூலி எனக்கும் (கிடைக்கும்)'** என்று அல் குர்ஆனின் சூரா காபிரூன் என்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருப்பது நல்ல சான்றாகும்.

அதனால் நம்பிக்கைக் கோட்பாடுகளையும், மத, கலாசார அடையாளங்களையும் மதித்து நடப்பது அவசியம். தமது மத நம்பிக்கையும், கலாசார விழுமியங்களும் தவிர்ந்த ஏனைய கொள்கை கோட்பாடுகளையும் மத, கலாசார விழுமிங்களையும் குறைத்து மதிப்பிடவோ, தரக்குறைவாக நோக்கவோ இடமளிக்காத உயர்ந்த இறைவழிகாட்டலே இஸ்லாம்.

ஆகவே, ஒவ்வொருவரும் அடுத்தவரின் மத, கலாசார விழுமியங்களை மதித்து, கௌரவமாக நடந்து கொள்ள வேண்டும். அது மத, கலாசார ரீதியிலான புரிந்துணர்வின் மேம்பாட்டுக்கும் சகவாழ்வு நல்லிணக்கத்திற்கும் அடித்தளமாக அமையும். அதுவே உலகளாவிய தேவையுமாகும்.

அஷ்ஷெய்க்
**ஏ.எச்.எம். மின்ஹாஜ் முப்தி (காஷிபி)...**

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# பெற்றோர்–பிள்ளைகள் உறவு

'தாய் தந்தையருடன் நல்ல முறையில் அன்புடன் நடந்து கொள்ளுங்கள்' என்ற வசனம் அல் குர்ஆனில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இடம் பெற்றுள்ளன. அதாவது அல்லாஹ்வுக்கு வழிபாடுமாறு கட்டளையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, 'பெற்றோருடன் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும்' என்ற வசனம் அமைவுற்றுள்ளது. இதன் தாற்பரியம் இதுதான்.

அல்லாஹ் மனிதன் மீது அதிகளவு பேருபகாரங்கள் புரிந்துள்ளான். அவனது பேருபகாரங்களுக்கு பிறகு வருவது தாய் தந்தையரின் உபகாரங்களாகும். ஒரு பிள்ளையின் பிறப்பு, வளர்ப்பு, கவனிப்பு, கல்வி, ஒழுக்கப்பயிற்சி மற்றும் அவனது பொருளாதார முன்னேற்றங்கள் ஆகியவற்றில் பெற்றோரின் பங்களிப்பு மிக அதிகம்.

பெற்றோரின் பங்களிப்பு இல்லாவிடில் ஒருவரது வாழ்வே பெரும் ஆபத்துக்குள்ளாகிவிடும். அதேநேரம் பெற்றோர் புரியும் உபகாரங்களில் அல்லாஹுடைய பேருபகாரங்களின் பிரதிபலிப்பு காணப்படவே செய்கின்றது.

**அதனால் தான் அவர்களுடன் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொள்வது பிள்ளைகளின் கடமையாக இருக்கின்றது. இதனை அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது. 'எனக்கும் நன்றி செலுத்துவீராக.... உம்முடைய தாய் தந்தையருக்கும் நன்றி செலுத்துவீராக. மேலும் என்னிடமே திரும்பி வரவேண்டியுள்ளது. *(31 : 14)***

நாம் பிள்ளையாய், பலவீனமான குழந்தையாய் இருந்தது முதல் எமது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆரோக்கிய நலன்களுக்கும் எம் பெற்றோர் தம் தயவினாலும் அன்பினாலும் எமது உயிர்வாழ்வுக்காக அளப்பரிய பங்களிப்பை நல்கி உள்ளார்கள். குறிப்பாக தங்களது உதிரத்தைப் பாலாய் ஊட்டி வளர்த்து வாழ்க்கையெனும் திடலில் ஓடி ஆடி செயற்படுவதற்கும் உழைப்பில் ஈடுபடுவதற்கும் ஏற்ப எம்மை வளர்த்தெடுத்துள்ளனர். அந்தளவுக்கு மகத்துவம் மிக்க அன்பையும் நேசத்தையும் அவர்கள் எமக்கு அளிக்கின்றனர்.

அதனால் தான் அல் குர்ஆன்

**'என் றப்பே... சிறுவயதில் என்னை எவ்வாறு இவர்கள் கருணையுடனும் பாசத்துடன் வளர்த்தார்களோ, அவ்வாறு நீ இவர்கள் மீது கருணைபுரிவாயாக.. *(17:14)***

என்று பெற்றோரின் நலன்களுக்காக பிரார்த்தனை புரியும் ஒழுங்கைக் கற்றுத்தருகிறது.

எனவே இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப பெற்றோரின் நலன்கள் குறித்து கவனமும் சிரத்தையும் எடுத்துக்கொள்வோம்.

**அபூ முஜாஹித் ...**

# திருமண வாழ்வுக்கான இறை வழிகாட்டல்

இஸ்லாத்தின் பார்வையில் திருமணமென்பது மனதில் அமைதியையும் இதயத்தில் உறுதியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகும். அது ஆண், பெண்ணிடையே அன்பையும், நேசத்தையும், கருணையையும் நிலைத்தோங்கச் செய்யக்கூடியதாக விளங்குகிறது. இதன் மூலம் கணவன் மனைவிக்கிடையில் அன்பான, அமைதியான குடும்ப வாழ்வு ஏற்பட்டு தூய்மையான இஸ்லாமிய சந்ததி உருவாக வழி வகுக்கிறது.

ஆண், பெண்ணிடையே அமைந்த இந்த இயற்கையான தொடர்பை மிக அழகிய முறையில் அல் குர்ஆன் எடுத்தியம்பியுள்ளது. இருவருக்குமிடையில் புரிந்துணர்வையும் பரஸ்பர அன்பையும் மன அமைதியையும் திருமண உறவு ஏற்படுத்துகிறது என்று இந்த அருள்மறை கூறுகிறது.

**'(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டுபண்ணியிருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சனங்களுக்கு, இதிலும் (ஒன்றல்ல) நிச்சயமாக (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன.**

**(அல் குர்ஆன் 30:21)**

திருமணம் என்பது ஆண், பெண் இருவருக்கிடையில் ஏற்படும் ஒரு பலமான உறவாகும். இவ்வுறவின் மூலமாக ஆண், பெண்ணை அல்லாஹ் உறுதியுடன் ஒன்றிணைக்கிறான். கருணையும், அன்பும், பாசமும் நிறைந்த இந்த இல்லற வாழ்வில் இவ்விருவரும் முழுமையான நிம்மதியும், மகிழ்ச்சியும் பெறுகிறார்கள். இஸ்லாத்தின் பார்வையில் நற்குணமுள்ள மனைவி இவ்வுலக வாழ்வில் இனிமை சேர்ப்பவளாகவும் அல்லாஹ்வின் மகத்தான அருட்கொடையாகவும் இருப்பாள். ஏனெனில், வாழ்வில் துன்பத்தையும் சோதனைகளையும் சந்திக்கும் கணவன் இல்லம் திரும்பும்போது அவளிடம் நிம்மதியையும் மன ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அடைவான். இம் மகிழ்ச்சிக்கு இணையாக உலகில் வேறெதுவும் இருக்க முடியாது.

இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் கூறும் போது, **'உலகம் அனைத்தும் இன்பமானது. அதில் தலைசிறந்த இன்பம் நற்குணமுள்ள மனைவி என்றார்கள்.**

(ஆதாரம்: முஸ்லிம்)

இதுதான் திருமணம் குறித்த உயர்ந்த பார்வையாகும். அதேநேரம் நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை, **'நான்கு நோக்கங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகிறாள். அவளது செல்வத்துக்காக, அவளது குடும்ப பாரம்பரியத்துக்காக, அவளது அழகுக்காக, அவளது மார்க்கப் பற்றுக்காக. மார்க்கப் பற்றுடையவளை (மணந்து) வெற்றி அடைந்துகொள்' என்றார்கள்.**

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

இதன்படி, நபி (ஸல்) அவர்கள் மார்க்கப் பேணுதல் உடைய பெண்ணை தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு இளைஞர்களுக்கு உபதேசித்திருப்பது தெளிவாகிறது. என்றாலும் அது அழகான பெண்ணை விரும்பக் கூடாது என்ற கருத்தில் அல்ல என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், நபி (ஸல்) அவர்கள் திருமணத்துக்கு முன் பெண்ணை பார்த்துக் கொள்வதும் விரும்பத்தக்கது என்றார்கள்.

**முகீரா இப்னு ஷுஃபா (ரழி) அவர்கள் கூறினார்கள், நபி (ஸல்) அவர்களின் காலத்தில் நான் திருமணம் செய்ய பெண் பேசினேன். நபி (ஸல்) அவர்கள் 'அந்தப் பெண்ணைப் பார்த்தீரா' என்று கேட்டார்கள். நான் 'இல்லை' என்றேன். நபி (ஸல்) அவர்கள் 'அவளைப் பார்த்துக்கொள்! அது உங்களுக்கு இடையில் நேசம் ஏற்பட மிகச்சிறந்ததாக அமையும் என்று கூறினார்கள்.**

(ஆதாரம்: ஸுனனுன் நஸயீ)

மற்றொரு சந்தர்ப்பத்தில், **அன்சாரிப் பெண்ணை திருமணம் பேசியிருந்த நபரொருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். அவரிடம் நபி (ஸல்) அவர்கள், 'அப்பெண்ணைப் பார்த்தாயா? என்று கேட்டார்கள். அவர் 'இல்லை' என்றார். அப்போது 'அப் பெண்ணை பார்த்துக்கொள்' என அவரை ஏவினார்கள்.**

(ஆதாரம்: ஸுனனுன் நஸயீ)

திருமணம் என்பது ஆயிரம் காலத்து பயிர் என்பர். அதனால் ஆணும் பெண்ணும் உறுதியான உடன்படிக்கையின் ஊடாக இணைந்து கொள்ளும் திருமண வாழ்வு உறுதியாகவும் அமைதி, மகிழ்ச்சி, சந்தோஷம் நிறைந்ததாகவும் அமைந்திட வேண்டும் என்பதில் இஸ்லாம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. அதற்கு அல் குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் நல்ல எடுத்துக்காட்டுக்களாக உள்ளன.

ஆகவே இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப திருமண வாழ்வை அமைத்துக்கொள்வதில் ஒவ்வொருவரும் அக்கறை காட்டுவது மிகவும் அவசியமானது.

**அபூ முஷீரா...**

# அல் குர்ஆனின் பார்வையில் மறுமையில் மனிதனின் நிலை

**'வானங்கள் மற்றும் பூமியிலுள்ள அனைத்தும் யாருக்குரியவை?' என்று நீர் அவர்களிடம் கேளும். 'அனைத்தும் இறைவனுக்கே உரியவை' என்று கூறும். கருணை புரிவதை அவன் தன்மீது கடமையாக்கிக் கொண்டான். மறுமை நாளில் அவன் உங்கள் அனைவரையும் திண்ணமாக ஒன்று திரட்டுவான். இது சந்தேகத்திற்கிடமில்லாத ஓர் உண்மையாகும். ஆனால், எவர்கள் தம்மைத் தாமே அழிவுக்குள்ளாக்கிக் கொண்டார்களோ அவர்கள் இதனை ஏற்பதில்லை. (அல்அன்ஆம் 6:12)**

உண்மையில் சொத்து செல்வங்களும் மனைவி பிள்ளைகளும் உலக வாழ்வின் நிலையற்ற அலங்காரமே. நற்செயல்கள் தாம், நிலைத்திருக்கக் கூடியவை, நன்மைகளைப் பெற்றுத் தரக்கூடியவை. இறைவனின் பொறுத்தத்திற்கு உரியவையும் ஆகும். அதனால் நற்செயல்கள் மீதுதான் நல்ல எதிர்பார்ப்புகளை கொள்ள முடியும்.

'அந்த நாளைக் குறித்து கவலை கொள்ள வேண்டும். அன்று நாம் மலைகளைப் பெயர்த்து விடும்போது பூமி முற்றிலும் வெட்டவெளியாக இருப்பதை நீர் காண்பீர். மேலும், மனிதர்கள் அனைவரையும் நாம் ஒன்று சேர்ப்போம். (முற்காலத்து மற்றும் பிற்காலத்து மக்களில்) எவரையும் விட்டு வைக்க மாட்டோம். மேலும், எல்லாரும் உம் அதிபதியின் முன்னிலையில் கொண்டு வந்து அணியணியாய் நிறுத்தப்படுவார்கள் (பாத்துக் கொள்ளுங்கள்!) வந்துவிட்டீர்கள் அல்லவா, நீங்கள் எம்மிடம்! நாம் உங்களை முதல் தடவை எவ்வாறு படைத்திருந்தோமோ அவ்வாறு! உங்களுக்காக வாக்களிக்கப்பட்ட ஒரு நேரத்தையும் நாம் நிர்ணயிக்கவில்லை என்று தானே நீங்கள் கருதியிருந்தீர்கள்.

**மேலும், வினைப்பட்டியல் முன்னால் வைக்கப்பட்டுவிடும். நீர் பார்ப்பீர். அவ்வேளை குற்றம் புரிந்தோர், தமது வாழ்க்கைப் புத்தகத்தில் உள்ளவற்றைக் கண்டு அஞ்சிக் கொண்டிருப்பார்கள். மேலும், அவர்கள் புலம்பிக் கொண்டிருப்பார்கள். 'அந்தோ...! எங்கள் துர்ப்பாக்கியமே! இது என்ன பதிவேடு! எங்கள் செயல்களில் சிறிதோ பெரிதோ எதையும் பதிக்காமல் இது விட்டுவைக்கவில்லையே!' தாங்கள் செய்தவை அனைத்தும் தம் முன்னால் இருப்பதை அவர்கள் காண்பார்கள். மேலும், உம் அதிபதி எவருக்கும் சிறிதும் அநீதி இழைக்கமாட்டான். (அல்கஹ்ஃப் 18:4649)**

மேலும் அவருடைய சமூகத்தில் எந்தத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்களோ இன்னும் இறுதி நாளின் சந்திப்பை பொய்யென்று வாதாடினார்களோ, மேலும் இவ்வுலகில் ஆடம்பரமான வாழ்க்கையை எவர்களுக்கு நாம் வழங்கியிருந்தோமோ, அந்தத் தலைவர்கள் கூறலானார்கள். **இவர் உங்களைப் போன்ற மனிதரேயன்றி வேறில்லை. நீங்கள் உண்ணுகின்ற வற்றையே இவரும் உண்ணுகின்றார். மேலும், நீங்கள் பருகுகின்ற வற்றையே இவரும் பருகுகின்றார். எனவே, உங்களைப் போன்ற ஒரு மனிதருக்கு நீங்கள் கீழ்ப்படிவீர்களாயின் அப்போது திண்ணமாக நீங்கள் இழப்பிற்குரியவராகி விடுவீர்கள்! நீங்கள் இறந்து மண்ணாகவும், எலும்புகளாகவும் ஆகிவிட்ட பிறகு நீங்கள் (மண்ணறைகளிலிருந்து) வெளியாக்கப்படுவீர்கள் என்று இவர் உங்களிடம் எச்சரிக்கின்றாரா? உங்களிடம் விடுக்கப்படும் இந்த எச்சரிக்கை சாத்தியமற்றது, முற்றிலும் சாத்தியமற்றது! நம்முடைய இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறு ஒரு வாழ்க்கை இல்லை. நாம் இறக்கப்போவதும் உயிர் வாழ்வதும் இங்குதான்! நாம் ஒருபோதும் எழுப்பப்பட மாட்டோம். இறைவனின் பேரில் பொய்யைப் புனைந்துரைத்துக் கொண்டிருக்கும் மனிதரே இவர்! நாம் ஒருபோதும் இவரை நம்ப மாட்டோம். (அல்மூமினூன் 23:3338)**

அதேநேரம், **'நிராகரிப்பாளர்கள் நினைப்பது போன்று, நாம் இந்த வானத்தையும், பூமியையும் அவற்றிற்கிடையேயுள்ள இந்த உலகத்தையும் வீணாகப் படைத்திடவில்லை. இத்தகைய நிராகரிப்பாளர்களுக்கு நரக நெருப்பின் மூலம் அழிவுதான் இருக்கின்றது. நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றவர்களையும் பூமியில் அராஜகம் செய்து திரிபவர்களையும் நாம் சமமாக்கி விடுவோமா என்ன? இறையச்சமுள்ளோரை ஒழுக்க கேடர்களைப் போன்று ஆக்குவோமா என்ன?**

**(ஸாத் 38:2728)** என்றும் புனித அல் குர்ஆன் கேள்வி எழுப்பியுள்ளது.

மனிதர்களே! மரணத்திற்கு பின் உள்ள வாழ்க்கை பற்றி உங்களுக்கு ஏதேனும் ஐயம் இருந்தால் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் உங்களை மண்ணிலிருந்து பிறகு இந்திரியத்திலிருந்து பிறகு இரத்தக்கட்டியிலிருந்து பிறகு வடிவமைக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்படாத சதைப் பிண்டத்திலிருந்து படைத்தோம். உண்மை நிலையை உங்களுக்கு நாம் விளக்குவதற்காகத்தான் (இவற்றை நாம் எடுத்துரைக்கின்றோம்) நாம் நாடுகின்ற (இந்திரியத்)தை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருவறையில் தங்க வைக்கின்றோம். பிறகு, உங்களைக் குழந்தை வடிவில் வெளிக் கொணர்கின்றோம், (பிறகு உங்களை வளர்க்கின்றோம்). நீங்கள் வாலிபத்தை அடைவதற்காக! மேலும், உங்களில் சிலர் முன்னரே திரும்ப அழைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். வேறு சிலர் மிக மோசமான முதுமையின் பக்கம் திரும்பப் படுகின்றார்கள். யாவற்றையும் அறிந்த பிறகு எதையும் அறியாத நிலையை அடைவதற்காக! இன்னும் நீங்கள் பார்க்கின்றீர்கள், பூமி வரண்டு கிடக்கின்றது. அதில் நாம் மழையை பொழியச் செய்ததும், உடனே அது சிலிர்த்து, செழித்து வளர்ந்து விதவிதமான அழகிய தாவரங்களை முளைப்பிக்கச் செய்கின்றது.

இவை அனைத்திற்கும் காரணம் இதுதான். **திண்ணமாக, இறைவன்தான் உண்மையானவன், மேலும், உயிரற்றவற்றை அவனே உயிர்ப்பிக்கின்றான். மேலும் அவன் யாவற்றின் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கின்றான். இன்னும் மறுமை நாள் வந்தே தீரும். அதில் சந்தேகமே இல்லை. (என்பதற்கும் இரு ஒரு சான்றாகும்) மேலும் மண்ணறைகளில் உள்ளவர்களைத் திண்ணமாக இறைவன் எழுப்புவான். (அல்ஹஜ் 22:57)**

**இறுதியில் அவர்களில் எவருக்கேனும் மரணம் வந்துவிடுமானால், 'என் இறைவனே! நான் விட்டு வந்துள்ள உலகுக்கு என்னைத் திரும்ப அனுப்புவாயாக! அங்கு நான் நற்செயல் புரிவேனே' என்று கூறத் தொடங்குவான். அவ்வாறு ஒருபோதும் நடக்காது. இது அவன் பிதற்றிக் கொண்டிருக்கின்ற வெறும் வார்த்தைகள்தாம்! (இறந்து போகும்) அவர்கள் அனைவருக்கும் பின்னால், 'பர்ஸக்' திரையாக இருக்கின்றது. இவர்கள் மீண்டும் உயிர்த்தெழப்படும் நாள் வரையில்! பிறகு, எக்காளம் (சூர்) ஊதப்பட்டதும் அவர்களிடையே எந்த உறவுகளும் அந்நாளில் இருக்காது. ஒருவருக்கொருவர் விசாரித்துக் கொள்ளவும் மாட்டார்கள். (அவ்வேளை) எவர்களுடைய (நன்மையின்) எடைத் தட்டுகள் கனத்திருக்குமோ அவர்களே வெற்றி பெறுவார்கள். எவர்களுடைய எடைத் தட்டுக்கள் இலேசாக இருக்குமோ அவர்கள் தங்களைத் தாங்களே இழப்புக்கு ஆளாக்கி கொண்டவர்களாவர். அவர்கள் நரகத்தில் நிரந்தரமாயிருப்பார்கள். (அல்மூமினூன் 23:99103)**

**விரைவில் கிடைக்கக்கூடிய (உலகப்) பலன்களை ஒருவன் விரும்புகிறான் எனில், அவனுக்கு இங்கேயே நாம் அதனைக் கொடுத்துவிடுகிறோம். நாம் நாடுகின்றவற்றை நாம் நாடுவர்க்கு மட்டும்! பிறகு நாம் அவனுடைய பங்கில் நரகத்தை எழுதிவிடுகின்றோம்!. மேலும் இறை நம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் யார் மறுமையை விரும்புகின்றாரோ, அதற்காக முறைப்படி பாடுபடுகின்றாரோ அத்தகைய ஒவ்வொருவரின் முயற்சியும் மதிக்கப்படக் கூடியதாகவே இருக்கும்.**

**(பனூஇஸ்ராயீல் : 17:1819)**

இவ்வாறு மனிதனின் நிலை மறுமையில் காணப்படும் குறித்து அல் குர்ஆன் எடுத்தியம்பியுள்ளது.

தொகுப்பு:
**ஏ.எம். முஹம்மத் ஸப்வான்**
சீனன் கோட்டை, பேருவளை.



# இலங்கை அணி 9/220 ஓட்டங்கள்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 47.4 ஓவர்கள் நிறைவில் 220 /9 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை இடைநிறுத்தப்பட்டது.

இலங்கை - அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் தனது அணி களத்தடுப்பில் ஈடுபடும் என அறிவித்தார்.

அதற்கு இணங்க ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக தனுஷ்க குணதிலக்க மற்றும் பெத்தும் நிசங்க இருவரும் களமிறங்கினர்.ஆனால் கடந்த போட்டியை போல் அரைச்சதம் பெறுவார் என்ற நிலையில் 14 ஓட்டங்கள் பெற்று பெத்தும் நிசங்க ஆட்டமிழந்து சென்றார். பின்னர் தனுஷ்க குணதிலக்கவுடன் இணைந்தார் குசால் மெண்டிஸ். தனுஷ்க குணலதிலக்க 30 பந்துகளை



எதிர் கொண்டு 18 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் மெண்டிசுடன் இணைந்தார் தனஞ்சய டி சில்வா.தனஞ்சய டி சில்வா 34 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார். அவரும் மத்திய வரிசையில் சிறப்பாக ஆடிய நிலையில் இந்த ஆட்டமிழப்பு இடம்பெற்றது. பின்னர் இணைந்தார் மெண்டிஸூடன் சரித் அசலங்க.கடந்த போட்டியில் சிறப்பாக ஆடிய மெண்டிஸ் 36 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார். அசலங்கவுடன் இணைந்தார் அணியின் தலைவர் தசுன் சானக்க. சரித் அசலங்க 13 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.பின்னர் அணியின் தலைவருடன் இணைந்தார் சாமிக்க கருணாரத்தன. கருணாரத்ன 18 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார்.பின்னர் அணியின் தலைவர் சானக்கவுடன் இணைந்தார் துனிந்து வெல்லாலகே. அணிக்கு ஓரளவு ஓட்டங்களை பெற்றுக் கொடுத்த அணியின் தலைவர் சானக்க 34 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்து சென்றார். பின்னர் வெல்லாலகேயுடன் இணைந்தார் ஜெப்ரி வென்டர்சே. வென்டர்சே இலங்கை அணிக்கு நம்பிக்கை அளிக்கும் படி ஆடுவார் என்ற நிலையில் அவரும் வந்த வேகத்தில் 7 ஓட்டங்களுக்கு

ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் வெல்லாலகேயுடன் இணைந்தார் துஷ்மந்த சமீர.வெல்லாலகே 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். அத்துடன் சமீரவுடன் இணைந்தார் மஹீஷ் தீக்ஷன.சமீர 7 ஓட்டங்களுடனும் தீக்ஷன 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

போட்டியின் 47.4 ஓர்கள் பந்து வீசிய போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இலங்கை அணி 9 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களை பெற்றது.

இந்த போட்டி கண்டி பல்லேகல்ல சர்வதேச மைதானத்தில் இடம்பெற்றது.அவுஸ்திரேலிய அணியில் சுழல் பந்து வீச்சாளர் மெத்திவ் குன்மேன் தனது ஒரு நாள் அறிமுகத்தை பெற்றார்.

அந்த அணியில் மூன்று மாற்றங்கள் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.அத்துடன் தனது அறிமுக போட்டியில் பெத்தும் நிசங்கவின் விக்கெட்டை வீழ்த்தி தனது கன்னி ஒரு நாள் விக்கெட்டை வீழ்த்தினார்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மெக்ஸ்வெல் இரு விக்கெட்டையும், பட்கமின்ஸ் 4 விக்கெட்டையும்,மெத்திவ் குன்மென் இரு விக்கெட்டையும் மிச்சல் சுவிப்சன் ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹஸரங்க, இரண்டாவது ஒருநாள் போட்டியில் விளையாடவில்லை அவருக்கு பதிலாக இலங்கை அணியில் ஜெப்ரி வென்டர்சே சேர்க்கப்பட்டுள்ளார்.

வனிந்து ஹஸரங்க கடந்த (14) நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபடும்போது, உபாதைக்கு முகங்கொடுத்திருந்தார்.

தொடையின் மேல் பகுதியில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு காரணமாக தன்னுடைய பந்துவீச்சை நிறைவுசெய்துக்கொண்டு, வனிந்து ஹஸரங்க மைதானத்திலிருந்து வெளியேறியிருந்தார். இதன்போது போட்டியில் 4 விக்கெட்டுகளையும் இவர் வீழ்த்தியிருந்தார்.

ஸ்கேன் பரிசோதனையில் வனிந்து ஹஸரங்கவின் தொடைப்பகுதியில் சிறிய உபாதை ஏற்பட்டுள்ளதன் காரணமாக இரண்டாவது ஒருநாள் போட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இரு அணிகளும் மோதும் மூன்றாவது போட்டி எதிர்வரும் 19 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

**பத்திரிகை அச்சுக்கு போகும் வரையான தகவலே இவை.**

# எப்.எச்.எஸ்.சி பௌசி கிண்ணம் சம்மாந்துறை கழகம் சம்பியன்

**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

40 வருடங்கள் பழமையான சாய்ந்தமருது பிளையிங் கோர்ஸ் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்த கிழக்கு மாகாண 32 முன்னணி கழகங்கள் பங்குபற்றிய பௌசி கிண்ண 20 க்கு 20 கடினபந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதியாட்டத்தில் வென்று சம்பியன் பட்டத்தை சம்மாந்துறை விளையாட்டுக்கழகம் தனதாக்கி கொண்டது.

சாய்ந்தமருது பொதுவிளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இறுதி போட்டியில் சாய்ந்தமருது ஹொலிஹீரோஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய சம்மாந்துறை விளையாட்டுக்கழகம் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயித்த 20 ஓவர்களில் 131 ஓட்டங்களை 09 விக்கட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது. சம்மாந்துறை விளையாட்டுக்கழக வீரர் ஷிபான் 30 பந்துகளை எதிர்கொண்டு 38 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். மேலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஜபீர்கான் 20 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். சாய்ந்தமருது ஹொலிஹீரோஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் றஸ்பாஸ், ரப்ஸான்,அஸ்லம் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அதனடிப்படையில் 132 எனும் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பம் முதல் தடுமாறி வந்த நிலையில் 16.1 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டனர். சாய்ந்தமருது ஹொலிஹீரோஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் சிறப்பாக விளையாடிய நிப்ராஸ் 23 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சார்பில் சிறப்பாக பந்துவீசிய றிக்காஸ் மற்றும் பர்ஸாத் ஆகியோர் தலா மூன்று விக்கட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சம்மாந்துறை விளையாட்டுக்கழக வீரர் றிக்காஸ் தெரிவு செய்யப்பட்டார்.




சாய்ந்தமருது பிளையிங் கோர்ஸ் விளையாட்டு கழக தலைவர் ஓய்வுபெற்ற அதிபர் ஐ.எல்.ஏ. மஜீட் தலைமையில் இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி ஷிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் கௌரவ அதிதியாக கலந்துகொண்டார். மேலும் சாய்ந்தமருது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர், இளைஞர் சேவை உத்தியோகத்தர், அனுசரணையாளர்கள், சாய்ந்தமருது கிரிக்கெட் கழகங்களின் சங்க நிர்வாகிகள், சாய்ந்தமருது பிரதேச கிரிக்கட் கழகங்களின் நிர்வாகிகள், பிளையிங் கோர்ஸ் விளையாட்டு கழக நிர்வாகிகள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தனர். சம்பியன் பட்டத்தை வென்ற சம்மாந்துறை விளையாட்டுக்கழகத்திற்கு வெற்றிக்கேடயத்துடன் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

# சுவிட்சர்லாந்தில் சுமேதவுக்கு வெண்கலப் பதக்கம்

சுவிட்சர்லாந்தின் பெயனில் கடந்த (14) நடைபெற்ற சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் இலங்கையின் சுமேத ரணசிங்க வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

உலக மெய்வல்லுநர் கண்டங்களுக்கிடையிலான சுற்றுத் தொடரின் வெண்கலப் பிரிவின் கீழ் நடைபெற்ற Citius Meeting Bern 2022 சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் பங்குபற்றிய 31 வயதான சுமேத ரணசிங்க, 74.55 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்தார்.

முன்னதாக கடந்த 11ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற அத்லெட்டிக் ஏஜ்னீவ் 2022 போட்டியில் பங்குகொண்ட அவர், 70.21 மீற்றர் தூரம் எறிந்து 4ஆவது இடத்தைப் பிடித்தார்.



ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் இலங்கை சாதனைக்கு (83.04 மீற்றர்) சொந்தக்காரராகிய சுமேத ரணசிங்க, கடந்த ஏப்ரல் மாதம் தியகமவில் நடைபெற்ற 100ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டியில் 82.16 மீற்றர் தூரத்தை எறிந்து தனது இரண்டாவது சிறந்த தூரத்தைப் பதிவு செய்தார்.

ஆனால், அடுத்த மாதம் அமெரிக்காவில் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டித் தொடருக்கு அவர் பரிந்துரைக்கப்பட வேண்டுமானால் குறைந்தபட்சம் 85.00 மீற்றர் தூரத்துக்கு தனது திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

சுமேதவைத் தவிர மேலும் மூன்று வீரர்கள் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி Citius Meeting Bern 2022 சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றியிருந்தாலும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை.


இதில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் பங்குகொண்ட காலிங்க குமாரகேவுக்கு ஆறாவது இடத்தையே பெற்றுக்கொள்ள முடிந்தது. போட்டித் தூரத்தை அவர் 46.36 செக்கன்களில் ஓடிமுடித்தார்.

பெண்களுக்கான 800 மீற்றரில் கயன்திகா அபேரட்ன ஆறாவது இடத்தைப் பிடித்தார். போட்டியை நிறைவுசெய்ய 2 நிமிடமும் 04.48 செக்கன்களை எடுத்துக் கொண்டார்.

கடந்த 11ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற அத்லெட்டிக் ஏஜ்னீவ் 2022 போட்டியில் பெண்களுக்கான நீளம் பாய்தலில் தங்கப் பதக்கம் வென்ற சாரங்கி சில்வாவுக்கு சுவிட்சர்லாந்தின் பெயனில் நேற்று நடைபெற்ற Citius Meeting Bern 2022 சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் நான்காவது இடத்தையே பெற்றுக்கொள்ள முடிந்தது. குறித்த போட்டியில் அவர் 6.19 மீற்றர் தூரம் பாய்ந்து திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

சுவிட்சர்லாந்து சுற்றுப்பயணத்தின் போது இலங்கை வீரர்களால் இரண்டு பதக்கங்களை மாத்திரம் வெற்றி கொள்ள முடிந்தது. எவ்வாறாயினும், சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற இரண்டு மெய்வல்லுநர் போட்டிகளிலும் திறமைகளை வெளிப்படுத்திய சாரங்கி சில்வா மற்றும் சுமேத ரணசிங்க ஆகிய இருவருக்கும் உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# யட்டிநுவர யங் பைட்டர்ஸ் சம்பியன்



**(அக்குறணை குறூப் நிருபர்)**

கண்டி யட்டிநுவர பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக கழகங்களுக்கு இடையில் இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தெஹியங்க, 'யங் பைட்டர்ஸ்' விலையாட்டுக் கழகம் வெற்றியீட்டி சம்பியனானது. தெஹியங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மைதானத்தில் இப் போட்டிகள் இடம் பெற்றன.

இப் போட்டியில் ஆறு அணிகள் கலந்து கொண்டதுடன் இறுதிப் போட்டி தெஹியங்க யங் பைட்டர்ஸ்' அணிக்கும், தந்துறை 'லீகர் பவர்' அணிக்கும் இடையில் இடம் பெற்றது.

இப்போட்டியில் 5–0 கோல் வித்தியாசத்தில் 'யங் பைட்டர்ஸ்' அணி வெற்றியீட்டியது.

யங் பைட்டர்ஸ்' அணி அதன் பயிற்றிவிப்பாளர் எம்.ஆர் எம். ரியாஸ் இனது வழிகாட்டலில் மேற்படி வெற்றியை ஈட்டிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை மண்ணுக்கு வரலாற்று சாதனை

**கிண்ணியா மத்திய நிருபர்**

கொழும்பு சுகததாச மைதானத்தில் இடம்பெற்ற கனிஷ்ட தேசிய தடகள போட்டியில் திருகோணமலை சல்லி அம்பாள் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அருட்செல்வன் பிரதீஷா இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்த வித்தியாலயத்தில் இருந்து முதன் முதலாக மாணவர்கள் இருவர் இம்முறை இந்த போட்டியில்
பங்குபற்றியிருந்தனர் .

இதில் கடந்த (07.06.2022) இடம் பெற்ற நிகழ்வுகளில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் இடம்பெற்ற 3000மீற்றர் Steeplechase நிகழ்வில் அருட்செல்வன் பிரதீஷா தேசிய மட்ட கனிஷ்ட தடகள போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த மாணவன் குறித்த பயிற்சியை பெற்றுக்கொள்ள தரமான தரமான மைதானமோ, அந்த நிகழ்ச்சிக்குஉரிய உபகரணங்களோ

இல்லாது, கிடைத்த இடத்தில் கிடைத்த பொருட்களை கொண்டு தனது பயிற்சியை மேற்கொண்டே



இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளார். பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த மாணவிக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டனர்.

# ஹைலண்ட் அணி வெற்றி



**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

உதைபந்தாட்டப் போட்டியில் அட்டாளைச்சேனை ஹைலண்ட் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

சம்மாந்துறை வை.எம்.எம்.ஏ. ஏற்பாட்டில் தலைவர் ஐ.எல்.சம்சுத்தீன் தலைமையில் சம்மாந்துறை எவக்கிறீன் விளையாட்டுக் கழக அணிக்கும், அட்டாளைச்சேனை ஹைலண்ட் விளையாட்டுக் கழக அணிக்குமிடையில் சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் அட்டாளைச்சேனை ஹைலண்ட் அணி ஒரு கோலினை புகுத்தி 1:0 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸ் பிரதம அதிதியாகவும், அடடாளைச்சேனை ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தீன் தலைவர் ஏ.எச்.ஹம்சா னுஸ் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இரு கழகங்களின் இளம் வீரர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

1. பின்வரும் பாடலை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.

புன்னகை செய்யும் பூக்கள் போதாது
புண்ணியம் செய்யும் பூமி வேண்டும்.
சிலையானகற்கள் போதாது
சுவையான கல்வி வேண்டும்.
சுட்டெரிக்கும் சூரியன் போதாது
சுகமான நிலவும் வேண்டும்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) இப்பாடலில் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள அம்சம் யாது?
..............................................................................................................

(ii) பாடலில் போதாது எனக் குறிப்பிடப்பட்டுள்ள அம்சம் யாது?
..............................................................................................................

(iii) "சுட்டெரிக்கும் சூரியன்" என்பதன் கருத்து யாது?
..............................................................................................................

(iv) "தருமம்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல் யாது?
..............................................................................................................

(v) பெயரடை மொழி ஒன்று தருக.
..............................................................................................................

(vi) பெயரெச்சம் ஒன்று தருக.
..............................................................................................................

2. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) இலங்கையில் உள்ள கல்வெட்டுக்கள் ..........................................
(பழமை / பழைமை) வாய்ந்தவை.

(ii) ஒவ்வொரு பூக்களும் ..........................................
(இனிமையானது / இனிமையானவை) ஆகும்.

3. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் / பயனிலைத் தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் (✓) எனவும், பிழையாக எழுதப்பட்டிருப்பின் (✗) எனவும் வாக்கியத்திற்கு எதிரே உள்ள அடைப்புக்குள் இடுக.

(i) நாம் அனைவரும் மிருகக்காட்சிச் சாலைக்குப் போவோம். ( )
(ii) வண்டுகள் ஒவ்வொரு மரங்களிலும் உள்ள சாற்றை உறிஞ்சிக் குடித்தது. ( )
(iii) சில நல்ல மனிதர்களின் பண்புகள் ஏனைய மனிதருக்கு வழிகாட்டியாக அமைகின்றன. ( )
(iv) தாய் மொழியும் சமயமும் இருகண்களைப் போன்றது. ( )

4. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.
(i) நாக்குப் புரளுதல் ..........................................................................
(ii) உச்சி குளிர்தல் ..........................................................................

5. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) சமுத்திரத்தில் முத்துக் குளித்து முத் தெடுப்பவன் ........................................
(வலைஞன், மீன் பிடிப்பவன்)

(ii) ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை ........................................
(முகவுரை / பதிப்புரை)

6. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து விடை எழுதுக.

அருமை உடலின் நல மெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே
வருமுன் நோயைக் காப்பாயே
வையம் புகழ வாழ்வாயே

(i) வருமுன் காக்க வேண்டியது எது?..............................................................

7. கீழே தரப்பட்டுள்ள பெண்பால் சொல்லுக்குப் பொருத்தமான ஆண்பால் சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

உழத்தி ........................................

8. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியீடுகளை இடுக.
மகனே நீ பாடசாலைக்குச் செல்கிறாயா

9. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.
பின்னர் இடப்பக்கமும் / பின்னர் வலப்பக்கமும் / முதலில் வலப்பக்கமும் / வீதியினைக் / பார்த்து / கடக்க வேண்டும் / நாம்

..............................................................................................................

10. பின்வரும் பழமொழியை பூர்த்தி செய்க.

அணைகடந்த வெள்ளம் ........................................

11. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) அடுத்தவருடம் :- ..........................................................................
(ii) வானவில் :- ..........................................................................

12. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்திலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைப் பெட்டியில் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

(i) We buy vegetable from the :- ....................................................
(ii) We buy fish from the :- ....................................................

Bakery
Hospital
Market
Post office

13. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தை ஆங்கில எழுத்துகளில் எழுதுக.
எனக்கு தாகமாக இருக்கிறது.

..............................................................................................................

14. பின்வரும் வாக்கியத்தை சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

வெசிகிலிய ..............................................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.
நான் விளையாடுகிறேன்

..............................................................................................................

16. "முப்பத்தைந்தாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது" என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

..........................................................................

17. தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

3 607, 3 549, 2 907, 3 419, 2 909 ............................................................

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண்கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
(i) 25, 36, 47, 58, .................. (ii) 4, 9, 19, 39, 79, ..................

19. ஒரு வியாபாரி வாங்கிய 686 கொய்யாப்பழங்களில் $\frac{6}{7}$ ஐ விற்றான். அவன் விற்பனை செய்யாமல் இருக்கும் கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................

20. 1800 அப்பிள் பழங்களை ஒரு பெட்டிக்கு 16 வீதம் பைகளில் பொதி செய்ய வேண்டி உள்ளது.

(i) ஒரு பையில் 16 வீதம் பொதி செய்வதற்குத் தேவையான பைகள் எத்தனை? ...............................

(ii) அதன் பின்னர் எத்தனை அப்பிள் பழங்கள் மீதியாக இருக்கும் ? ...............................................

21. தேக்கரண்டி ஒன்றில் கொள்ளும் திரவத்தின் கனவளவு 5ml ஆகும். நாளொன்றுக்கு 3 தடவைகள் 3 தேக்கரண்டி வீதம் மருந்து எடுத்தால் ஒருவாரத்தில் எடுக்கப்படும் மருந்தின் அளவு யாது?

..........................................................................................

22. $\frac{1}{2} - \frac{3}{8} =$ ..........................

23. காஞ்சனா பிற்பகல் 9.55 இற்கு நித்திரைக்குச் சென்று அடுத்தநாள் முற்பகல் 5.50 இற்கு விழித்தெழுந்தாள். அவள் எவ்வளவு நேரம் நித்திரை செய்தாள்?

..........................................................

24. 


உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பத்தின் பங்குகளாக எழுதுக.
..........................................................

25. கடிகார முகத்தில் காட்டப்படும் நேரம் ஒரு பிற்பகல் நேரமாகும். அதனை இருபத்து நான்கு மணித்தியால கடிகார நேரத்தில் எழுதுக.



..............................................

26. காட்டப்பட்டுள்ள திண்ம உருவினைக் கொண்டு விடை அளிக்குக.



(i) இத்திண்மத்திற்கு எத்தனை வளைந்த விளிம்புகள் உண்டு? ..................................................
(ii) இத்திண்மத்திற்கு எத்தனை முகங்கள் உண்டு? ..................................................


27. 1575ml இனிப்புப் பானத்தை 9 போத்தல்களில் நிரப்பினால் ஒருபோத்தல் கொள்ளும் இனிப்புப் பானத்தின் கொள்ளளவு யாது?

..........................................................................................

28. 1 கிலோ கிராம் தேயிலையின் விலை ரூபாய் 280 உம் 1 கிலோகிராம் சீனியின் விலை ரூபாய் 90 உம் ஆகும். குமார் 250g தேயிலையும், 250g சீனியையும் வாங்கி ரூபாய் 500 ஐக் கொடுத்தால் அவனுக்கு மீதியாக எவ்வளவு பணம் கிடைத்திருக்கும்?

..........................................................................................

29. ஒரு பாடசாலையில் நான்கு ஆண்டுகள் புலமைப்பரிசில் பரீட்சையில் 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்ற மாணவர் எண்ணிக்கைகள் வரைபில் காணப்படுகின்றன.




(i) 2015 ஆம் ஆண்டைவிட 2018 ஆம் ஆண்டில் எத்தனை மாணவர்கள் கூடுதலாக 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்?

..........................................................................

(ii) இந்நான்கு ஆண்டுகளிலும் 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

- **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. எமது நாட்டுக்கே உரித்தான தாவரம் அல்லாதது
(1) குங்கிலியமரம் (2) பெரும்பிரம்பு (3) ஈரப்பலா (4) நிலவேம்பு

31. நீரினாலும், காற்றினாலும், பிராணிகளினாலும் முறையே பரம்பும் வித்துக்கள் அடங்கியுள்ள விடை யாது?
(1) கடல் மாங்காய், எருக்கலை, மா
(2) எண்ணை, கத்தாப்பு, மரமுந்திரிகை
(3) மா, மரமுந்திரிகை, எண்ணை
(4) எண்ணை, மா, கத்தாப்பு

32. விவசாயிகளுக்கு பிராணிகள் செய்யும் நன்மை அல்லாதது
(1) மண்புழு மண்வளியை அதிகரித்தல்.
(2) கறையான் அடிக்கட்டைகளை அரித்து உக்கல் அடையச்செய்தல்
(3) வண்ணத்துப்பூச்சி மகரந்த சேர்க்கைக்கு உதவுதல்.
(4) வௌவால் பழங்களை உண்டு விதைகளை வீடுகளில் போடுதல்.

(12ஆம் பக்கம் பார்க்க)

11 ஆம் பக்கத் தொடர்

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

33. நெற்பயிர்களை தாக்கும் பிராணி அல்லாதது
(1) குருவி (2) தேனீ (3) அந்துப்பூச்சி (4) வெட்டுக்கிளி

34. பின்வருவனவற்றுள் ஈரூடக வாழி எது?
(1) தவளை (2) முதலை (3) நண்டு (4) ஆமை

35. எமது நாட்டில் தடுக்கப்பட்டுள்ள நோய் எது?
(1) டெங்கு (2) நெருப்புக்காய்ச்சல்
(3) இளம்பிள்ளைவாதம் (4) யானைக்கால்

36. கியூலக்ஸ் நுளம்பினால் பரவக்கூடிய நோய் எது?
(1) மலேரியா (2) யானைக்கால் (3) வாந்திபேதி (4) சிக்கன் குன்யா

37. கொழுப்பு அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவுக்கான உதாரணம்
(1) கவ்பி (2) பாதாம் பருப்பு (3) கடலை (4) சோயா அவரை

38. வித்து முளைப்பதற்கு அவசியம் தேவை அல்லாதது
(1) ஈரப்பதன் (2) வளி (3) சூரியஒளி (4) மழை

39. தாவரம் ஒன்றில் ஆவி உயிர்ப்பு இடம் பெறுவது
(1) வேரினால் (2) கந்தினால் (3) மரத்தினால் (4) இலையினால்


40. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணி யாது?
(1) அயடீன் குறைபாடு
(2) கல்சியக்குறைபாடு
(3) பொஸ்பரஸ் குறைபாடு
(4) புரதக்குறைபாடு

43. உடற்பயிற்சி செய்வதற்கு முன்னர் உடலை இளஞ்சூடாக்க உகந்த செயற்பாடு
(1) மெதுவாக நடத்தலாகும்
(2) ஒரே இடத்தில் நடத்தல் ஆகும்.
(3) ஒற்றைக் காலில் நிற்றல் ஆகும்
(4) ஆழமாக உட்சுவாசித்து வெளிச்சுவாசித்தல் ஆகும்.



44. உருவில் உள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?
(1) விருச்சிகம் (2) பெருங்கரடி
(3) கலப்பை (4) பெருநாய்

45. உருவில் காணப்படும் தையல் முறை யாது?
(1) மீன் முள்ளுத்தையல்
(2) வெட்டுக்குத்துத்தையல்
(3) சங்கிலித்தையல்
(4) கம்பளித்தையல்



46. மீள் சுழற்சிக்கு உட்படுத்தலாம் என்பதன் கருத்தை உணர்த்தும் உரு யாது?



(1) (2) (3) (4)

47. போக்குவரத்திற்காகச் சைக்கிள்களை அதிகமாகப் பயன்படுத்துவது தொடர்பான சரியான கூற்று
(1) நோய்கள் ஏற்படுவதைக் குறைக்கலாம்.
(2) சுற்றாடல் மாசடைவதை அதிகரிக்கலாம்.
(3) நீண்ட தூரப்பயணங்களை மேற்கொள்ளலாம்.
(4) விரைவாக போக்குவரத்தை மேற்கொள்ளலாம்.

48. தேசத்தின் ஒற்றுமைக்காகப்பணியாற்றியவரும் இவ்வரிப்படத்தில் காணப்படுவருமான பெரியார் யார்?
(1) சேர். பொன்னம்பலம் இராமநாதன் (2) கலாநிதி. ரீ. பீ. ஜாயா
(3) ரீ. பி. ஜாயா (4) கலாநிதி. ஆனந்த குமாரசாமி



49. இலங்கையில் சிங்கராஜவனக் காடு இருக்கும் மாவட்டம் எது?
(1) நுவரெலியா (2) இரத்தினபுரி (3) அம்பாறை (4) கேகாலை

50. இலங்கை பேராதனையில் உள்ள மிகப்பெரிய தாவரவியற் பூங்காவிற்கு அருகில் ஓடும் கங்கை.
(1) வளவகங்கை (2) மகாவலிகங்கை (3) ஜின்கங்கை (4) களுகங்கை

51. வாத்தியக்கருவிகளில் கஞ்சல் கருவிக்கு உதாரணம்
(1) தாளம் (2) மேளம் (3) கிற்றார் (4) வயலின்

52. ஒரு அணியில் பதினொருபேர் இடம்பெறும் விளையாட்டுக்கள் எவை?
(1) எல்லே, கபடி (2) உதைபந்து, எல்லே
(3) கிறிக்கற், எல்லே (4) கிறிக்கற், உதைபந்தாட்டம்

53. ஈரச்சுதைமுறையில் சுவரோவியங்கள் காணப்படும் வரலாற்று பிரசித்தி பெற்ற இடம்
(1) யாப்பகூவா (2) இசுறுமுனி (3) சீகிரியா (4) எம்பக்க

54. பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் விலங்குகள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க.
(1) எறும்பு, கறையான், தேனீ (2) வீட்டு ஈ, வெட்டுக்கிளி, தேனீ
(3) தண்டுகோதி, அழுக்கணவன், வெட்டுக்கிளி (4) மூட்டைப்பூச்சி, பேன், மரங்கொத்தி

55. பின்வரும் உணவுப் பொருள்களுள் உற்பத்தித் திகதிக்கும் காலாவதியாகும் திகதிக்கும் இடையே நீண்ட காலத்தை கொண்டது எது?
(1) யோகட் (2) ஐஸ்கிறீம் (3) பாற்கட்டி (4) ரின்மீன்

56. வெளிநாட்டில் வசிக்கும் உமது சகோதரன் கோயில் தீர்த்தத் திருவிழா படம் ஒன்றை இயன்றவரை துரிதமாக அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளான். இதற்காக நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது?
(1) கடுகதித் தபால் (2) மின்னஞ்சல் (3) கடற்தபால் (4) விமானத்தபால்

57. கடந்த காலங்களில் எமது நாட்டை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களில் அதிக காலம் ஆட்சி புரிந்தவர்கள்
(1) ஒல்லாந்தர் (2) போர்த்துக்கீசர், ஒல்லாந்தர்
(3) ஒல்லாந்தர், பிரித்தானியர் (4) போர்த்துக்கீசர், பிரித்தானியர்

58. இலங்கையின் பெருந்தெருக்களில் ஓடும் பாதைகளின் மேல் வீதிச் சட்டதிட்டங்களுக்கு அமைவாகக் கோடுகள் வரைவதற்குப் பயன்படுத்தப் படும் நிறங்கள் எவை?
(1) மஞ்சள் (2) கறுப்பு
(3) வெள்ளை (4) சிவப்பு

59. படத்தில் தரப்பட்டுள்ள இலச்சினையினால் குறிக்கப்படுவது
(1) ஸ்ரீலங்கா விமான சேவை
(2) இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம்
(3) இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
(4) இலங்கை அஞ்சல் சேவை




60. "நான் கூட்டில் வளரும் ஒரு கிளியாக இருந்தால்......" என்னும் தலைப்பில் கருத்துடைய 3 வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

(1) ........................................

(2) ........................................

(3) ........................................

## கடந்த வார (10.06.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 09 | 2 | 17 | 3 | 25 | 2 | 33 | 3 |
| 02 | 3 | 10 | 3 | 18 | 1 | 26 | 1 | 34 | 1 |
| 03 | 2 | 11 | 1 | 19 | 1 | 27 | 3 | 35 | 2 |
| 04 | 1 | 12 | 2 | 20 | 2 | 28 | 2 | 36 | 2 |
| 05 | 3 | 13 | 3 | 21 | 3 | 29 | 3 | 37 | 3 |
| 06 | 3 | 14 | 3 | 22 | 3 | 30 | 3 | 38 | 3 |
| 07 | 1 | 15 | 1 | 23 | 2 | 31 | 1 | 39 | 1 |
| 08 | 3 | 16 | 2 | 24 | 1 | 32 | 2 | 40 | 3 |

# குருதிக் கொடையாளர் தினம் கல்முனையில் அனுஷ்டிப்பு

## 107 தடவை இரத்த தானம் செய்தவருக்கு பாராட்டு

உலக குருதிக் கொடையாளர் தினம் கடந்த 14 ஆம் திகதி கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது. கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையில் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 6 வருட காலங்களில் வைத்தியசாலையில் ஐந்து தடவைக்கு மேல் குருதியை தானமாக வழங்கிய சுமார் 100 பேர் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் கலந்து சிறப்பித்தார்.

அங்கே அவர் உரையாற்றுகையில் "நானும் ஐந்து தடவை குருதி தானம் செய்திருக்கின்றேன். அதற்கான சான்றிதழ்கள் என்னிடம் உள்ளன. அந்த வகையில் இந்த நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டது ஒருவகையில் பொருத்தமாக இருக்கின்றது. இங்கே ஒரு அன்பர் 107 தடவை குருதி வழங்கி இருக்கிறார். உண்மையிலேயே பாராட்டுகின்றேன். அவருக்கு பணப்பரிசை வழங்குகிறேன் .இந்த வைத்தியசாலை இதனை நடத்துவதை உண்மையிலேயே மனப்பூர்வமாக பாராட்டுகின்றேன். இத்தகைய பாராட்டுக்கள் விழிப்புணர்ச்சி ஊட்டுவது மட்டுமல்லாமல் குருதியை தானம் செய்பவர்களின் எண்ணிக்கையும் கூட்டும் என்பது எனது கருத்தாகும்" என்றார்.





வர்த்தகப் பிரமுகர் எம். விஸ்வநாதன் பேசுகையில் "குருதிக் கொடையாளர்கள் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டும். இங்கு பாராட்டப்படுகின்ற குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். இது பன்மடங்காக தொடர வேண்டும்" என்றார்.

வண பிதா ஜேசுதாசன் பேசுகையில் "நாங்கள் எந்த மாவட்டத்தில் இருந்தாலும் குருதிக் கொடையாளர்களை பாராட்டி கௌரவிப்பது வழமை. அதில் இவ்வைத்தியசாலை முன்னணி வகிக்கின்றது.

இது ஒரு மனிதாபிமான பணி. இப்பணியை சிறப்பாக மேற்கொள்ளும் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கும் அதன் அத்தியட்சகர் டொக்டர் முரளீஸ்வரனுக்கும் குருதி வங்கி பிரிவு வைத்தியர் மற்றும் ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்றார்.

கல்முனை தமிழ் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் நடராசா ரமேஷ் உட்பட ப லரும் உரையாற்றினார்.

_வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு குறூப் நிருபர்)

# எலிகளிடமிருந்து மீட்கப்பட்ட ரூ. 5 இலட்சம் தங்க நகைகள்!

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையை சேர்ந்த சுந்தரி பிளானிபெல் என்பவர் கோகுல்தாம் கொலனி பகுதியில் வீட்டு வேலை செய்து வருகிறார். அவர் தனது தங்க நகைகளை வங்கியில் அடகு வைக்க சென்றபோது வழியில் இருந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு, தான் கொண்டு சென்ற உணவுப் பையை கொடுத்துள்ளார். அதில் தவறுதலாக நகைகளையும் வைத்துள்ளார்.

சுந்தரி வங்கிக்கு சென்று பார்த்தபோது தான் நகை, தான் கொண்டு வந்த பையில் இல்லை என தெரியவந்தது. இதையடுத்து அவர் திரும்பிச் சென்று குழந்தைகளை தேடியுள்ளார். ஆனால் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு அவர் பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொண்டு புகார் அளித்துள்ளார். இதையடுத்து பொலிசார் உதவியுடன் தேடியதில், அந்த குழந்தைகள் இருக்கும் இடம் தெரியவந்தது.

அவர்களிடம் விசாரித்ததில் அந்தப் பையை குழந்தைகள் குப்பையில் போட்டு விட்டதாகத் கூறினர். குப்பையை சென்று பார்த்த போது அதில் நகைகள் இல்லை. இதைத் தொடர்ந்து பொலிசார் சி.சி.டி.வி உதவியுடன் பார்த்த போது, குப்பையில் இருந்து சில எலிகள் அந்த உணவுப்பையை எடுத்துக் கொண்டு சாக்கடைக்குள் சென்றது தெரியவந்தது.

இதையடுத்து சாக்கடைக்குள் தேடிய போது அந்த பை கிடைத்தது. அதில் இருந்த நகைகளும் பத்திரமாக இருந்தன. அந்த நகைகளின் மதிப்பு ரூ.5 இலட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த நகைகளை பொலிசார் சுந்தரியிடம் ஒப்படைத்தனர்.

# சாகசப் பயணத்தின் ஆரம்பப் பயிற்சி பட்டறையும், சான்றிதழ் வைபவமும்





ஜீனியஸ் 7 விருதுப் பிரிவின் ஏற்பாட்டில் எடின்பரோ கோமகன் சர்வதேச விருதின் 'சாகசப் பயணத்தின் ஆரம்ப பயிற்சி' பட்டறையும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நிகழ்வும் சாய்ந்தமருது கமு/அல்ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் ஜீனியஸ் 7 விருதுப் பிரிவின் தலைவரும் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான இஷட்.எம் சாஜீத் தலைமையில் நடைபெற்றன.

இச்செயலமர்வில் ஜீனியஸ் 7 விருதுப் பிரிவில் வெண்கலம், வெள்ளி ,தங்க விருதுக்கு விண்ணப்பித்து விருது செயற்பாடுகளில் ஈடுபடவுள்ள இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதுடன், இதன் போது வெளிக்கள சாகசப் பயணத்தில் சர்வதேச நியமங்களுக்கு அடிப்படையில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் ஆரம்பப் பயிற்சியாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை பொதுச்சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம் சலீம் விசேட அதிதியாகவும், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆசீக், முன்னாள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம். ஐ.எம். சதாத்,தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முன்னாள் உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.ஏ லத்தீப், சாய்ந்தமருது பிரதேச செயலக நிதி உதவியாளார் எம். முஹம்மட்,சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி எ.ஏ.எம் ஹாரூன், சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். இஷட் இலாஹி, இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் வசந்தம் தொலைக்காட்சி சிரேஷ்ட அறிவிப்பாளார் ரோசன் அஷ்ரப் ஆகியோர் ஏனைய அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் கலந்து கொண்டஅனைத்து இளைஞர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

எடின்பரோ கோமகன் சர்வதேச விருதுக்கு 14_24 வயது உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு ஆளுமை, நுண்ணறிவு, வெளிக்கள ஆய்வு, தலைமைத்துவம், ஆற்றல்,கல்வி, திறமை,விளையாட்டு, சர்வதேச தொடர்புகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற ஓர் சர்வதேச விருதாகும்.

இவ்விருது நிகழ்வானது 1956 இல் பிரித்தானிய முடிக்குரிய அரசினால் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 140 இற்கும் மேற்பட்ட நாடுகளில் நடத்தப்பட்டு வருகின்றது. எடின்பரோ சர்வதேச கோமகன் விருதுக்குரிய தலைமைக் காரியாலயம் லண்டன் மாநகரிலும் இலங்கைக்குரிய பிராந்திய காரியாலயம் அவுஸ்ரேலியாவிலும் அமைக்கப்பட்டுள்ளன.



_ றிசாத் ஏ. காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

அறிவித்தல்

கல்வி அமைச்சு

## 2023 ஆம் ஆண்டில் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பான ஆலோசனைகள்

2023 ஆம் ஆண்டில் அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் தமது பிள்ளைகளை அனுமதிக்க எதிர்பார்க்கும் பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையவும் வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை தமக்குப் பொருத்தமான பாடசாலைகளின் அதிபர்களுக்கு **2022 ஜுலை 16 ஆம் திகதிக்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். **அனைத்து தகுதிகளும் பூர்த்தியாக்கப்படவேண்டியது 2022 ஜுன் 30 திகதிக்கு செல்லுபடியானவாறாகும்.** விண்ணப்பங்கள் கீழே பிரசுரிக்கப்படும் மாதிரிக்கு ஏற்ப தயார் செய்யப்படுதல் வேண்டும்.

### 2023 ஆம் ஆண்டில் ................................................................ வித்தியாலயத்தில் முதலாம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவம்

**(பிள்ளையின் பிறப்பு சான்றிதழின் பிரதி ஒன்றினையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்களை சான்றுறுதிப்படுத்த தேவையான ஆவணங்களின் பிரதிகளையும் சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்தி இதனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)**

01. **விண்ணப்பிக்கும் வகை :-** ................................................................
**(ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்கு தகைமை பெறின் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்)**

02. **பிள்ளை பற்றிய விபரம்** :
- 2.1 முழுப் பெயர் :- ................................................................
(குடும்பப் பெயரின் கீழ்க் கோடிடுக)
- 2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்):- ................................................................
(கடைசியில் வரும் ஒரு பெயரை மாத்திரம் எழுதுக உ-ம் : எஸ்.ஜே. ரூபன்)
- 2.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்):- ................................................................
(கடைசியில் வரும் ஒரு பெயரை மாத்திரம் எழுதுக உ-ம் : S.J.Ruban.)
- 2.4 பால் (ஆண் /பெண்) :-................................................................
- 2.5 சமயம் :- ................................................................
- 2.6 போதனா மொழி (சிங்களம் /தமிழ்) ................................................................
- 2.7 பிறந்த திகதி : வருடம் :…... மாதம் :…… திகதி :……
- 2.8 2023 ஜனவரி 31ஆம் திகதியன்று வயது :…… வருடம் …… மாதம் ….. நாள்

03. **விண்ணப்பதாரியின் விபரங்கள்** : (தாய்/ தந்தை/ சட்டரீதியான பாதுகாவலர்)

| **விண்ணப்பதாரி** | **வாழ்க்கைத் துணை** |
|---|---|
| 3.1 முழுப் பெயர் :- ........................................ | 3.2 முழுப் பெயர் :- ........................................ |
| 3.3 முதலெழுத்துக்களுடன் பெயர் :- ........................................ | 3.4 முதலெழுத்துக்களுடன் பெயர் :- ........................................ |
| 3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ........................ | 3.6 தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ........................ |
| 3.7 இலங்கையரா? :- ........................ | 3.8 இலங்கையரா? :- ........................ |
| 3.9 சமயம் :- ........................ | 3.10 சமயம் :- ........................ |
| 3.11 நிரந்தர முகவரி :-........................ | 3.12 நிரந்தர முகவரி ........................ |
| 3.13 தொலைபேசி இலக்கம் :- ........................ | 3.14 தொலைபேசி இலக்கம் :- ........................ |
| 3.15 வசிக்கும் நிர்வாக மாவட்டம் :- ........................ | 3.16 வசிக்கும் நிர்வாக மாவட்டம் :- ........................ |
| 3.17 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :- ........................ | 3.18 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :- ........................ |
| 3.19 வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவு :- ........................ இலக்கம் :- ........................ | 3.20 வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவு :- ........................ இலக்கம் :- ........................ |

04. **விண்ணப்பிக்கும் பாடசாலைகள்** : (இப்பாடசாலையும் உட்பட தமது விருப்பு முன்னுரிமைக்கேற்ப எழுதுதல் வேண்டும்)

| தொடர் இல. | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை (தேசிய/மாகாண) | வதிவிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் (மீட்டர்/கி.மீ) |
|---|---|---|---|
| 01. | | | |
| 02. | | | |
| 03. | | | |
| 04. | | | |
| 05. | | | |
| 06. | | | |

(உங்களது பிள்ளை, விண்ணப்பித்த பாடசாலைகளிடையே ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பமொன்றின் போது உங்களால் மேலே குறிப்பிடப்பட்ட முன்னுரிமை ஒழுங்கிற்கு ஏற்ப முன்னுரிமை கூடிய பாடசாலையைப் பெற்றுக் கொடுப்பதோடு தெரிவு செய்யப்பட்டுள்ள ஏனைய பாடசாலைகளின் **பெயர்** பட்டியல்களிலிருந்து நீக்கம் செய்யப்படும்.)

05. விண்ணப்பிக்கும் இப்பாடசாலை தவிர வதிவிடத்துக்கு அண்மித்த பிள்ளையை அனுமதிக்கக்கூடிய வேறு பாடசாலைகள்:

1. ................................................................
2. ................................................................
3. ................................................................
4. ................................................................
5. ................................................................
6. ................................................................
7. ................................................................
8. ................................................................
9. ................................................................
10. ................................................................

06. வாக்காளர் இடாப்பில் பதிவு:
(வதிவினை உறுதி செய்து கொள்ள வேண்டிய அருகிலுள்ள அல்லது சகோதர வகைகளுக்கு உரிய பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர், கிராம அலுவலர் பணிமனையில் விபரங்களைப் பெற்று இப் பகுதியை பூரணப்படுத்தி, அதனை தாமே உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

வருடம் -
வாக்கெடுப்புப் பிரிவு -
கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -
தேர்தல் தொகுதி -
கிராமம்/ வீதி /தோட்டம்

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -
வாக்கெடுப்புப் பிரிவு -
கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -
தேர்தல் தொகுதி -
கிராமம் /வீதி/ தோட்டம் -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -
வாக்கெடுப்புப் பிரிவு -
கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -
தேர்தல் தொகுதி -
கிராமம்/ வீதி/ தோட்டம் -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -
வாக்கெடுப்புப் பிரிவு -
கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -
தேர்தல் தொகுதி -
கிராமம்/ வீதி/ தோட்டம்

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -
வாக்கெடுப்புப் பிரிவு -
கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -
தேர்தல் தொகுதி -
கிராமம் /வீதி/ தோட்டம் -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

மேற்கூறப்பட்ட தகவல்கள் வாக்காளர் இடாப்புக்களுடன் பரீட்சிக்கப்பட்டு என்னால் பிழையின்றி குறிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.

................................................
விண்ணப்பதாரியின் ஒப்பம். திகதி ..............................

07. கீழ்வரும் பகுதிகளில் தான் விண்ணப்பிக்கும் வகைக்குரிய பகுதியை மாத்திரம் பூரணப்படுத்துக.

| விடயம் | புள்ளிகள் (அலுவலக உபயோகத்திற்கு) |
|---|---|
| 7.1 **பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள்** | |
| 7.1.1 வதிவினை உறுதி செய்யக்கூடிய பிரதான ஆவணங்கள் - ................................................ | |
| 7.1.2 வதிவினை உறுதி செய்யக்கூடிய மேலதிக ஆவணங்கள் :- ................................................ | |
| 7.1.3 வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரி பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்களின் எண்ணிக்கை :- ........................ <br> வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியின் வாழ்க்கைத் துணையின் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்களின் எண்ணிக்கை :- ...................... <br> வாக்காளர் இடாப்பில் சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்களின் எண்ணிக்கை:-.................. <br> (விண்ணப்பத்தினை அனுப்பும் வருடத்துக்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்கு இது தொடர்புடையதாகும்.) <br> (கட்டாயமாக இல : 06 பூரணப் படுத்தப்படல் வேண்டும்) | |
| 7.1.4 விண்ணப்பித்த இப்பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை :- ................................ | |
| 7.2 **பழைய மாணவர்களின் பிள்ளைகள்:** | |
| 7.2.1 மாணவராக பாடசாலையில் கற்ற தரங்களின் எண்ணிக்கை :- ................................ <br> ..................தரத்தில் இருந்து ........................ தரம் வரை | |
| 7.2.2 பாடசாலைக் காலத்தினுள் பெற்றுக் கொண்ட கல்விசார் வெற்றிகள்:- ................................ | |
| 7.2.3 பாடசாலைக் காலத்தினுள் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றிகள்:- ................................ | |
| 7.2.4 பழைய மாணவர் சங்க அங்கத்துவம், பாடசாலைக் காலத்தின் பின் பெற்றுக் கொண்டுள்ள கல்விசார் வெற்றிகள், (அதிபரால் அங்கீகரிக்கப்பட்டவை) பாடசாலையின் அபிவிருத்திக்காக வழங்கிய பல்வேறுபட்ட உதவிகள் :- ................................ | |
| 7.3 **தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர/ சகோதரிகள்** | |
| 7.3.1 விண்ணப்பதாரியின் பிள்ளையொன்று/ பிள்ளைகள் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருப்பின் | |

| பிள்ளையின் பெயர் | வகுப்பும் சேர்வு இலக்கமும் | இப் பாடசாலையில் அனுமதி பெற்ற வகுப்பு | கற்ற வகுப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

| விடயம் | புள்ளிகள் |
|---|---|
| 7.3.2 பாடசாலையிலுள்ள சகோதர/ சகோதரிகள் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்துள்ள வெற்றிகளும் பாடசாலையின் அபிவிருத்திக்காக விண்ணப்பதாரி வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளும் :- ................................ | |
| 7.3.3 வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை ஆவணம் :-.............................. | |
| 7.3.4 வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரி பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள்:- ............................ <br> வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியின் வாழ்க்கைத் துணையின் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள் :- ............................ <br> வாக்காளர் இடாப்பில் சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள் :-.................. <br> (விண்ணப்பத்தினை அனுப்பும் வருடத்துக்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்கு இது தொடர்புடையதாகும்.) <br> (கட்டாயமாக இல 06 பூரணப்படுத்தப்படல் வேண்டும்.) | |
| 7.3.5 விண்ணப்பிக்கும் இப் பாடசாலையை விட தமது வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை :-................ | |
| 7.4 **கல்வியமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனங்களில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் :** | |
| 7.4.1 குறித்த நிறுவனங்களில் நிரந்தரப் பணியாளராக சேவையாற்றும் பதவியும் சேவைக்காலமும் :- ................................ | |
| 7.4.2 தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றின் தொடர்ச்சியான கஷ்டப் பாடசாலையில் சேவையாற்றும் சேவைக் காலம் :- ………… | |
| 7.4.3 இதற்கு முன் கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றி இருப்பின் அச்சேவைக் காலம் :- .............................. | |
| 7.4.4 பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள்:- <br> 2021 - ………………. <br> 2020 - ………………. <br> 2019 - ………………. <br> 2018 - ………………. <br> 2017 - ………………. | |
| 7.4.5 விண்ணப்பித்த பாடசாலையிலேயே சேவையாற்றிக் கொண்டிருப்பின் அப் பாடசாலையில் சேவைக்காலம் :- ……………… | |
| 7.4.6 நிரந்தர வதிவிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலைக்குள்ள தூரம் (கி.மீ):- ……… | |
| 7.4.7 வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை ஆவணம் :- ................................ | |
| 7.4.8 விண்ணப்பிக்கும் பாடசாலையிலிருந்து தற்போதைய சேவை நிலையத்துக்குள்ள தூரம் (கி.மீ) :-…………….. | |
| 7.5 **அரச சேவைத் தேவையின் பொருட்டு இடமாற்றம் அல்லது அரச வருடாந்த இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்களின் பிள்ளைகள்** | |
| 7.5.1 இறுதியாக இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்தில் பதவி ஏற்ற திகதி :- ................................ | |
| 7.5.2 இடமாற்றத்துடன் தொடர்புடைய புதிய சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் :-................................ | |
| 7.5.3 இடமாற்றத்துடன் தொடர்புடைய பழைய சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் :- ................................ | |
| 7.5.4 ................................ | |
| 7.5.5 பழைய சேவை நிலையத்தில் கடமையாற்றிய சேவைக்காலம் ……………… இருந்து ………………… வரை | |
| 7.5.6 முதல் சேவை நிலையத்திற்கும் மாற்றம் பெற்றுவந்த தற்போதைய சேவை நிலையத்திற்குமான தூரம் (கி.மீ) :- ……… | |
| 7.5.7 விண்ணப்பிக்கும் இப் பாடசாலையை விட தமது வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை:-.................... | |
| 7.5.8 அரச.'. கூட்டுத்தாபன.'. நியதிச்சட்டசபை.'. அரச வங்கி அலுவலராக சேவைக் காலம்:- ................................ <br> பெற்றுக் கொள்ளாத விடுமுறை நாட்கள்: <br> 2021 - ………………. <br> 2020 - ………………. <br> 2019 - ………………. <br> 2018 - ………………. <br> 2017 - ………………. | |
| 7.6 **உரிய பிள்ளையுடன் வெளிநாட்டில் வசித்துவிட்டு திரும்புவோரின் பிள்ளைகள்** | |
| 7.6.1 வெளிநாட்டில் இருந்து விட்டு மீண்டும் நாடு திரும்பிய திகதி:- ……… | |
| 7.6.2 பிள்ளையுடன் தொடர்ச்சியாக வெளிநாட்டில் இருந்த கால எல்லை ……………ஆம் திகதி தொடக்கம் ……………ஆம் திகதி வரை | |
| 7.6.3 வெளிநாடு சென்றதற்கான காரணம் :- ................................ | |
| 7.6.4 விண்ணப்பிக்கும் இப்பாடசாலையை விட தமது வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை:- ................................ | |

**08. உறுதியுரை :**

எனது பிள்ளை எந்த அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் அல்லது வேறு பாடசாலையொன்றில் தற்பொழுது கல்வி பயில்வதில்லை என்பதை இதன் மூலம் அறியத் தருகின்றேன். செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டுள்ள முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பில் ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் இல 01 தொடக்கம் இல 12 வரையுள்ள நியதிகளுக்கு உடன்படுகின்றேன். மேலும் மேலேயுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், என்னால் மேலே குறிப்பிடப்பட்ட நிரந்தர வதிவிடம் பற்றியும் ஏனைய தகவல்கள் பற்றியும் திருப்திகரமான அத்தாட்சிகளைச் சமர்ப்பிப்பதற்கு இணங்குகிறேன் எனவும் உறுதியளிக்கின்றேன். என்னால் தரப்பட்ட ஏதாவது விபரங்கள் **போலியானது அல்லது** உண்மையற்றதெனத் தெரிய வந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன். எனது பிள்ளை பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட பின் என்னால் தரப்பட்ட விபரங்கள் உண்மையற்றவை எனத் தெரியவந்தால் எனது பிள்ளையை பாடசாலையிலிருந்து விலக்கி மாகாண கல்விப் பணிப்பாளர் மூலம் பெயர் குறிப்பிடப்படும் அதே பிரதேசத்திலுள்ள வேறொரு பாடசாலையில் சேர்ப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

திகதி : ..............................

.......................................
தாய்.'. தந்தை.'. சட்டரீதியான பாதுகாவலரின் கையொப்பம்

## முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பான அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும்

**1.0** விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துவதற்கு முன் கீழ்க் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்

**2.0 அடிப்படைத் தகைமைகள்**

2.1 2023 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 31ஆம் திகதியன்று பிள்ளையின் வயது ஐந்து (05) வருடங்கள் பூரணமாய் இருத்தல் வேண்டும். இதனை உறுதிப்படுத்த பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். பாடசாலையிலுள்ள வெற்றிடங்களுக்கு போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகளுக்கு மாத்திரம் பிள்ளையொன்றுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லாத போது அதற்குப் பதிலாக பிறந்த திகதியை உறுதிப்படுத்த பிறப்பு, விவாக மற்றும் மரணம் தொடர்பான பதிவாளர் நாயகத்தினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்படும் அனுமான வயதுச் சான்றிதழ் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் பின்பு பிறப்புச் சான்றிதழை கட்டாயமாக பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

2.2 2023 ஜனவரி மாதம் 31ஆம் திகதியன்று 06 அல்லது 06 வயதை விடக்கூடிய பிள்ளைகள், 06 வயதுக்கு குறைந்த தகைமைகளையுடைய சகல பிள்ளைகளையும் அனுமதித்த பின்னரே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**3.0 கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் (அனைத்து வகைகளுக்கும் பொருந்தும்)**

3.1 முதலாம் தரத்தின் சமாந்தர வகுப்பொன்றிற்காக 35 பிள்ளைகள் நேர்முக பரீட்சை மூலமும் 05 பிள்ளைகள் யுத்த நடவடிக்கைப் பணிகளில் ஈடுபட்ட முப்படைகள் மற்றும் பொலிஸ் உறுப்பினர்களின் பிள்ளைகளிலிருந்தும் தெரிவு செய்யப்படுவர். இதன்படி வகுப்பொன்றில் இருக்க வேண்டிய உச்ச மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆகும்.

3.2 1960 இன் 5 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (சிறப்பு விதிகள்), 1961இன் 8ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக விதிகள்) எனும் சட்ட மூலங்களுக்கு ஏற்ப அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகளில் வெற்றிடங்களை நிரப்புகையில் பொறுப்பேற்ற போது குறித்த பாடசாலையில் இருந்த மாணவர் சமய விகிதாசாரம் குறித்து கவனத்திற்கொண்டு மொத்த வெற்றிட எண்ணிக்கை சமய ரீதியாகவும் ஒவ்வொரு வகைகளுக்கேற்பவும் வகுக்கப்படும். ஏதாவது சமயப் பிரிவில் ஒரு வகைக்கு ஒதுக்கப்பட்ட அளவை விட குறைந்த விண்ணப்பதாரிகள் இருக்குமிடத்து அவ்வெற்றிடங்கள் அச் சமயத்துக்குரிய மற்றைய வகைகளிடையே விகிதாசாரத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொள்ளப்படும். ஏதாவது ஒரு சமயத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அல்லது குறைவாக இருக்குமிடத்து அவை விகிதாசாரத்திற்கு ஏற்ப மற்றைய சமயப் பிரிவினரிடையே பகிர்ந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

3.3 பெற்றோரின் வதிவிடம் ஒரே இடமாக இல்லாத பட்சத்தில், அவர்கள் சட்டப்படி பிரியாதவர்களாயின் அவர்கள் சட்டப்படி பிரிவதற்காக நீதிமன்ற செயற்பாடுகளை ஆரம்பித்தமையை ஆவணங்கள் மூலம் நிரூபிப்பின் விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பித்தவரின் (தாய்/ தந்தை) வதிவிடம் பிள்ளையின் வதிவிடமாகக் கொள்ளப்படும்.

3.4 நீதிமன்ற தீர்ப்பொன்றின் மூலம் சட்டரீதியாக நிரந்தரமாக வளர்ப்புப் பிள்ளையாக வளர்க்க நியமிக்கப்பட்ட ஒருவரை தாய்/ தந்தையாக ஏற்றுக்கொள்ள முடியும். அனாதை இல்லங்களில் வசிக்கும் பிள்ளைகளின் சட்டரீதியான பாதுகாவலராக இல்லப் பொறுப்பாளர் கருதப்படுவார். சட்டரீதியாக பிள்ளையை வளர்க்கும் நபர் மூலம் அது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பினை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் வருடத்தின் ஜுன் 30 திகதிக்கு முன் பெற்றிருத்தல் வேண்டும். தாய், தந்தை இருவரும் உயிருடன் இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் பிள்ளையை பராமரிக்கும் நபருக்கு அப்பிள்ளையின் பாதுகாவலராக விண்ணப்பிக்க முடியும்.

3.5 பிள்ளையின் தாயும் தந்தையும் வெளிநாடு சென்றிருக்கும் சந்தர்ப்பமொன்றின் போது அல்லது பெற்றோரில் ஒருவர் உயிரிழந்து மற்றவர் வெளிநாடு சென்றிருக்கும் போது சட்டரீதியாக பாதுகாவலராக நியமிக்கப்பட்டிராதிருப்பினும் தற்காலிகமாக பிள்ளையின் பொறுப்பினைக் கொண்டிருப்பவர் பிள்ளையின் பெற்றோரின் பெயரில் விண்ணப்பிக்க முடியும். எனினும் மேற்கூறப்பட்டதற்கேற்ப பிள்ளையின் பெற்றோரின் ஆவணங்களே கருத்திற் கொள்ளப்படும். அத்தோடு பிள்ளையின் தாய்/ தந்தை வெளிநாட்டிலிருப்பதை, உயிருடன் இல்லாதிருப்பதை உரிய ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும்.

3.6 பாடசாலைக்கு விண்ணப்பிக்கும் பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் பாடசாலைக்கு ஊட்டற் பிரதேசத்தினுள் வசிக்க வேண்டியதுடன், உரிய கிராமசேவகர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் ஊட்டற பிரதேசம் என்பது பாடசாலை அமைந்துள்ள நிர்வாக மாவட்டம் மற்றும் நிர்வாக மாவட்ட எல்லைக்குள் ஏதேனும் பாடசாலையொன்று அமைந்துள்ள சந்தர்ப்பத்தில் எல்லைக்கண்மையிலுள்ள நிர்வாக மாவட்டத்தின் அண்மித்த பிரதேச செயலாளர் பிரிவுமாகும். (பழைய மாணவர்களுடைய பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக இந்த நிபந்தனை பொருந்தாது.)

**4.0 விண்ணப்பங்களை அனுப்புவதற்கான நடைமுறைகள்**

4.1 யுத்த நடவடிக்கை கடமைகளுக்காக வழங்கப்படும் விசேட சலுகையின் கீழ் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்க விரும்பும் யுத்தக் கடமைகளில் ஈடுபட்ட முப்படைகள் மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் உரிய சேவை நலன்புரிப் பணிப்பாளர் மூலம் விண்ணப்பப் படிவங்களை பெற்று ஒழுங்காகப் பூரணப்படுத்தி தமது நிறுவனத் தலைவர் மூலம் உரிய நலன்புரிப் பணிப்பாளருக்கு குறித்த தினத்திற்கு முன் அனுப்புதல் வேண்டும்.

4.2 தமது பிள்ளைக்காக பாடசாலையொன்றுக்கு விண்ணப்பிக்கத் தகைமை பெறும் ஏனைய அனைத்துப் பெற்றோர்கள்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் உரிய பாடசாலையின் அதிபருக்கு 2022 ஜுலை 16 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பத்தினுடன் சுய விலாசமிடப்பட்ட பதிவுத் தபாலுக்கான முத்திரை ஒட்டிய கடித உறை ஒன்றையும் **பிள்ளையை அனுமதிப்பதற்கு தேவையான தகைமை பற்றி தானே உறுதிப்படுத்திய ஆவணங்களின் பிரதிகளையும் இணைத்து (மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி கட்டண பற்றுச்சீட்டு முன்வைக்கும் விண்ணப்பதாரர்கள், ஒரு வருடத்திற்கு ஒரு பற்றுச்சீட்டு வீதம் மற்றும் விண்ணப்பம் முன்வைக்கப்படும் வருடம் ஜுன் மாதம் 30 திகதிக்கு முன்னரான மாதத்தின் பற்றுச்சீட்டினை இணைக்க வேண்டும். நேர்முக தேர்வில் நேர்முக தேர்வுக்குழு கோறும் பற்றுச்சீட்டினை முன்வைத்தல் அவசியமாகும்)** தானே உறுதிப்படுத்திய, தாம் விண்ணப்பிக்கும் வகைக்குரிய அனைத்து ஆவணங்களதும் பிரதிகளும் அவற்றினை சான்றுப்படுத்துவதற்கு சத்தியக்கடதாசி ஒன்றுடன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். வெற்றிட எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையில் விண்ணப்பங்களைப் பெறும் பாடசாலைகளுக்கு மாத்திரம் இவ் விண்ணப்பங்களை நேரடியாகச் சமர்ப்பிக்க முடியும். நேரடியாகச் சமர்ப்பிப்பதாயின் பாடசாலையால் அவ் விண்ணப்பத்தினை பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.3 யுத்த நடவடிக்கைப் பணிகளில் ஈடுபட்ட முப்படைகளினதும் பொலிஸ் உறுப்பினர்களினதும் பிள்ளைகள் நேரடியாக பாடசாலைக்கு விண்ணப்பிக்க தகைமை பெற்று இருப்பின் உரிய பாடசாலையின் அதிபருக்கு பொதுவான விதிமுறைகளின் கீழ் விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

4.4 பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் ஒரு பாடசாலையில் ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்கு விண்ணப்பிக்க தகைமை பெற்றிருப்பின் அந்த ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வகை தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். (விண்ணப்பங்கள் முன்வைக்கப்படும் வருடத்தின் ஜுன் 30 திகதியன்று விண்ணப்பதாரி உரிய வகையின் கீழ் தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்)

4.5 அனைத்து விண்ணப்பதாரிகளும் **குறைந்த பட்சம் தமக்கு அண்மித்த மாகாணப் பாடசாலைகள் 03 உட்பட பாடசாலைகள் 06 இற்காவது விண்ணப்பித்தல் கட்டாயமாகும். பாடசாலைகளைப் பெயரிடும் போது அனைத்து விண்ணப்பங்களிலும் அப்பாடசாலைகளின் விருப்பு முன்னுரிமைக்கேற்ப குறிப்பிடுதல் வேண்டும்.** அத்தோடு 06 பாடசாலைகளுக்கு விண்ணப்பித்து அப்பாடசாலைகளினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தும் அதில் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரர்களும் இவ்வாறு விண்ணப்பிக்காத பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்களும் பாடசாலை ஒன்று கிடைக்காதவிடத்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மேன் முறையீடு ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். இம் மேன்முறையீடு கருத்திற் கொள்ளப்பட்டு அவர் மூலம் பெயர் குறிப்பிடப்படும் பாடசாலைக்கு தமது பிள்ளையினை அனுமதித்தல் வேண்டும்.

4.6 சிங்களம் மற்றும் தமிழ் இரு போதனா மொழிகளிலும் பாடசாலைகளில் பாடசாலைகளின் விண்ணப்பிக்க விரும்பினால் அந்த பாடசாகைளகளுக்கு ஒரு மொழிமூலத்துக்கு மட்டுமே விண்ணப்பங்களை அனுப்பமுடியும். பாடசாலைக்குத் தெரிவானதன் பின்னர் அம்மொழிமூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**5.0 தெரிவு செய்வதற்கான நடைமுறைகள்**

5.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் வரை கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை பாடசாலையின் முதலாம் தரத்திற்கு பாடசாலை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதி வழங்கும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு மேற்படின் மாத்திரமே நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் நடாத்தப்படும்.

5.2 நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் விண்ணப்பப் படிவங்கள் பரீட்சிக்கப்பட்டு கீழே தரப்பட்டிருக்கும் புள்ளியிடும் முறைக்கேற்ப புள்ளிகள் வழங்கப்படும். இதன் பின் அப் புள்ளிகள் முன்னுரிமைக்கேற்ப பாடசாலைக்கு நேர்முகப்பரீட்சையின் மூலம் அனுமதிக்கக் கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கையைப் போன்று 4 மடங்கு தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சையொன்றுக்கு தோற்றுமாறு உரிய விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவர்.

5.3 விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படும் வெற்றிட எண்ணிக்கையைப் போல் நான்கு மடங்கினுள் அடங்காவிடின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள். எனினும் இது தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாமைக்கான காரணம் தெளிவாக விளக்கப்பட்டு எழுத்து மூலம் நேர்முகப் பரீட்சை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு அதிபர் மூலம் உரிய விண்ணப்பதாரர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5.4 தகைமை இருந்தும் தமது பிள்ளையின் விண்ணப்பம் 4 மடங்கிற்குள் உட்படுத்தப்படாமல் நிராகரிக்கப்பட்டிருப்பின் மாத்திரம் உரிய ஆவணங்களுடன் (முன்னைய விண்ணப்பத்துடன் அனுப்பப்பட்ட ஆவணங்கள்) மீண்டும் விண்ணப்பமொன்றினை, புள்ளிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய முறையை தர்க்க ரீதியாக விபரித்து நிராகரிக்கப்பட்டதற்கான கடிதத்தின் பிரதியொன்றுடன் பாடசாலையின் அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் மீண்டும் கருத்திற் கொள்ளல்''எனக் குறிப்பிட்டு நிராகரிப்புக் கடிதம் கிடைத்து ஒரு வாரத்தினுள் அனுப்புதல் வேண்டும்.

**6.0 தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் நடைமுறைகள்**

(அ) பாடசாலையொன்றில் முதலாம் தரத்தில் காணப்படும் வெற்றிடங்களில் பாடசாலையின் மூலம் தெரிவு செய்யப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை கீழே காட்டப்படும் விகிதாசாரத்திற்கேற்ப கீழ்வரும் வகைகளுக்குரிய பிள்ளைகளிடையே இருந்து தெரிவு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| I. | பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள் | 50% |
| II. | குறித்த பாடசாலையில் பழைய மாணவர்களாக உள்ள பெற்றோரின் பிள்ளைகள | 25% |
| III. | தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர/ சகோதரிகள் | 14% |
| IV. | கல்வியமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் | 06% |
| V. | அரச சேவைத் தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்ற அரச/ கூட்டுத்தாபன/நியதிச் சட்டசபை/ அரச வங்கி அலுவலர்களின் பிள்ளைகள் | 04% |
| VI. | பிள்ளையுடன் வெளிநாட்டில் வசித்து விட்டு வந்தவர்களின் பிள்ளைகள் | 01% |

(ஆ) ஒவ்வொரு வகையின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைக்கேற்ப தெரிவு செய்வதற்காக நேர்முகப்பரீட்சைக் குழுவின் மூலம் புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படும். இங்கு பெற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் கூடிய புள்ளிகள் 100 ஆகும்.

(இ) விண்ணப்பதாரர் பல வகைகளின் கீழ் விண்ணப்பித்திருந்தால் மற்றும் ஒரு வகையின் நேர்முகப்பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் ஒன்று போலியான/ மோசடியான ஆவணம் என நிரூபிக்கப்பட்டால், அத்தகைய சந்தர்ப்பத்தில் மற்ற அனைத்து வகைகளின் கீழும் விண்ணப்பதாரர் சமர்ப்பித்த விண்ணப்பத்தை நேர்முகப்பரீட்சை சபையால் நிராகரிக்கப்பட இயலும்.

(ஈ) வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதை குறித்துக் கொள்வதற்காக விண்ணப்பப் படிவத்தில் பகுதியொன்று தரப்பட்டுள்ளது. தமது வதிவினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள விபரங்களைச் சமர்பிக்க வேண்டியுள்ள அண்மித்த மற்றும் சகோதர வகைக்குரிய பெற்றோர்கள்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் கிராம அலுவலர் காரியாலயத்தில் விபரங்களைப் பெற்று இப்பகுதியைப் பூரணப்படுத்தி தானே சான்றுப்படுத்துதல் வேண்டும்.

(உ) வசிப்பிடத்திலிருந்து கோரப்படும் பாடசாலைக்குள்ள அண்மைத் தூரத்தினைக் கவனத்திற் கொள்ளுகையில் விண்ணப்பதாரியின் வீட்டை (பிரதான வாசல்) மையமாகக் கொண்டு விண்ணப்பிக்கும் பாடசாலையின் பிரதான அலுவலகத்திற்கும் (ஆரம்பப் பிரிவு பாடசாலையில் இருந்து வேறாக வேறோரிடத்தில் அமைந்திருப்பின் அதன் அலுவலகத்திற்கும்) இடையேயான (வான்) தூரத்தை ஆரையாகக் கொண்டு வரையப்படும் வட்டத்தின் எல்லைக்குள் உட்படும் பாடசாலைகளுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும். இங்கே பிரதான பாடசாலைக்கு வெளியே வேறு சூழலொன்றில் ஆரம்பப்பிரிவு அமையப் பெற்று பாடசாலை தொடர்பாக புள்ளி குறைக்கப்பட வேண்டியது, ஆரம்பப்பிரிவு அமைந்த நிலையத்திற்கு என்பதோடு இடைநிலைப் பிரிவு அமைந்த நிலையத்திற்கு அல்ல.

ஏதாவது பாடசாலை ஒன்று இவ் வட்டத்தின் எல்லைக்குள் காணப்படினும் ஆறுகள், குடா, ஈரநிலம், பாதுகாக்கப்பட்ட வனங்கள் போன்ற இயற்கையான தடைகள் அல்லது அதிவேகப்பாதை காணப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் வீட்டிலிருந்து அந்தப் பாடசாலைக்கு பயணம் செய்யக்கூடிய மிகக் குறுகிய தூரம் கோரப்படும் பாடசாலைக்குரிய மிகக்குறுகிய பாதைத்தூரத்தை விடமிகவும் அதிகமாயின் புள்ளி குறைக்கப்படக்கூடாது. அதன்போது பெற்றோர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சாட்சியங்களுடன் வழி வரைபடத்தை நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்படி சமயத்தில் அண்மைத்தன்மையை பரீட்சிப்பதற்காக அரசாங்க நில அளவைத் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள 1:10,000 பிரமாண அளவிடை வரைபடங்கள் பாவிக்கப்படும். இதற்கு மேலதிகமாக கூகுள் வரைபடத்துடன் (Google Map) ஒப்பிட்டுப் பார்த்து தீர்மானம் எடுக்கப்படும். மேற்கூறிய வழித்தடத் தூரத்தை கணிக்கும் போது நடைமுறைச் சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் தீர்த்துக் கொள்வதற்காக நியாயமான மற்றும் பொது முடிவு எடுப்பதற்கு நேர்முக சபைக்கு அதிகாரம் இருப்பதோடு, தேவையின் அடிப்படையில் நிலைய இடத்தை பரீட்சிப்பதின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) வதிவினை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் விண்ணப்பத்தினைச் சமரப்பிக்கும் போது வசிக்கும் வதிவிடத்திற்கு அமைவாகவே இருத்தல் வேண்டும்.

**6.1 பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள் - 50%**

(அ) இவ்வகையின் கீழ் ஊட்டப் பிரதேசத்தினுள் (முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பான அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும் எனும் தலைப்பின் 3.6 உப பிரிவின்படி) வசிக்கும் அனைவருக்கும் விண்ணப்பிக்க முடியும். இங்கு வதிவு மிக அத்தியாவசியமாவதோடு, அதுகுறித்து பௌதீக ரீதியாகவும் எழுத்துமூலமாகவும் அத்தாட்சிப்படுத்தல் கட்டாயமாகும்.

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

**I. வதிவினை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய மற்றும் மேலதிக ஆவணங்கள்**

மேற்படி ஆவணங்கள் உரிய நபரின் பெயரில் சொந்தமாக்கப்பட்டு, விண்ணப்பத்தை முன்வைக்கும் வருடத்தின் ஜுன் 30 திகதியிலிருந்து முந்திய 5 வருடங்கள் அல்லது அதைவிட அதிகமாகவோ பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளும், 5 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 4 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 80மூ மும், 4 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 3 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 60மூ மும், 3 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 2 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 40மூ மும், 2 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 1 வருடம் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 20மூ மும், 1 ஆண்டுக்குக் குறைவாகவோ அல்லது 6 மாதங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 10மூ மும், 6 மாதங்களுக்குக் குறைவாகப் பெற்றிருந்தால் மொத்தப் புள்ளியில் 05மூ மும் என்றவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

**(அ) வதிவினை உறுதிப்படுத்தும் அடிப்படை ஆவணங்கள்**
- ✓ உரித்து உறுதி
- ✓ தலைப்புப்பதிவு சான்றிதழ் (விம்சவிய)
- ✓ அன்பளிப்பு உறுதி
- ✓ கொடுப்பனவுப் பத்திரம்
- ✓ அரசாங்க வழங்கல் பத்திரம் (உரிமையாளர் இறந்திருந்தால் விண்ணப்பதாரி/ வாழ்க்கைத் துணை, பின்னுரித்தாளியாகியாக பெயரிடப்பட்டிருப்பதோடு, சம்பந்தப்பட்ட உரித்துடையவர் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்)
- ✓ விகாரை> Njthyak தொடர்பான சட்டமூலத்தின் கீழ் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மூலம் வழங்கப்பட்டுள்ள குத்தகை உறுதிப் பத்திரம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

அல்லது பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட உரிய விகாராதிபதி மூலம் வழங்கப்பெற்ற சான்றுப்பத்திரம்.

- ✓ வரலாறு மூலம் உறுதிப்படுத்தப்பட்டு 10 வருடத்தை விட அதிக காலத்தைக் கொண்ட வெளியிடுகைப் பத்திரம்
- ✓ அரச மற்றும் அரை அரச நிறுவனத்தில் தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் விலைக்கு வாங்கிய, முழு கொடுப்பனவையும் செலுத்தி முடிவுறுத்தி ஆனாலும் இதுவரை உரிய நிறுவனத்தினூடாக அதன் உரிமையாளருக்கு அந்த ஆதனத்தை ஒப்படைத்திராத வீடுகள் (முழு பணத்தையும் செலுத்தி பூர்த்தி செய்துள்ளார் என்பதை உரிய நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட எழுத்து மூல உறுதி ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

(உரித்துறுதி மற்றும் அன்பளிப்பு உறுதி தொடர்பாக வெளியிடுகைப் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அவ் வெளியிடுகைப் பத்திரம் 10 வருடங்கள் அல்லது அதை விடக் கூடிய காலம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

- **விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் பெயருக்கு வதிவிடத்தின் உரிமை இருந்தால் - 20 புள்ளிகள்**
- **விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரில் வதிவிடத்தின் உரிமை இருந்தால் – 16 புள்ளிகள்**

உரிய 05 வருட காலப்பகுதியினுள் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரிலுள்ள உறுதி விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத்துணைக்கு உரிமை மாற்றப்பட்டிருப்பின் உரிய இரு காலங்களும் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

(உரிமையானது வேறொருவரின் பெயரில் இருப்பின் இப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

அவசியமேற்படின் வரலாற்றுப் பதிவு அல்லது இரண்டாம் பிரதி பரீட்சிக்கப்பட்டு உரிமை உறுதிப்படுத்திக் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் பெயரில் மாத்திரமுள்ள தொடர்த்தேர்ச்சியாக பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப்பத்திரம் **(தேவையேற்படின் குத்தகை வழங்கியவரின் உரிமை தொடர்பாக வரலாறு ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.) குத்தகை உறுதி குறைந்தது விண்ணப்பம் முன்வைக்கப்படும் வருடத்தின் ஜுன் 30 திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் என்பதோடு, உரிய ஆதனம்/ வீட்டுக்காக தனியாக சோலைவரி இலக்கம் / வீட்டு இலக்கம் இருக்க வேண்டும்**/ விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் பெயரில் மாத்திரமுள்ள அரச உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்பதற்கான ஆவணம் (திணைக்கள தலைவர் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்) பிரம்மச்சாரிகளுக்கான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்போர் இப்புள்ளிகளுக்கான உரிமைக்காக சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்/ வீட்டு வாடகை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வாடகை வீட்டாளர்கள் என உறுதிப்படுத்தப்படும் ஆவணங்கள், விண்ணப்பதாரரின்/ வாழ்க்கைத்துணையின் பெயரில் மட்டுமே உள்ள அரச/ அரை அரச நிறுவனம் ஒன்றின் தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் விலைக்கு வாங்கிய என்றாலும் கொடுப்பனவை இறுதிப்படுத்தாத வீட்டு ஆவணம் (அரச/ அரை அரச நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட விற்பனவு ஒப்பந்தம் தொடர்பில் அந்த ஒப்பந்தம் மற்றும் தவணைக் கொடுப்பனவு செய்த பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.) -

10 புள்ளிகள்

உரிய 05 வருட காலப்பகுதியினுள் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப்பத்திரத்தின் உரித்தாளியாயிருந்து அதன் பின்னர் அவ் உரிமையானது நிரந்தர உறுதியொன்றாகத் தமக்கு மாற்றப்பட்டதாயின் உரிய இரு காலங்களும் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

(வாடகை உறுதிப் பத்திரத்திற்கு வெளியிடுகைப் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அவ் வெளியிடுகைப் பத்திரம் 10 வருடங்கள் அல்லது அதை விடக் கூடிய காலம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

- ✓ விண்ணப்பதாரி/ வாழ்க்கைத்துணை குறித்த 10 வருடங்களைவிட அதிககாலம் அரச காணியொன்றில் (உரிய முகவரியில்) வசிப்பவராயின் உரிய பிரதேசத்தின் மாநகர ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் (உரிமையானது வேறொருவரின் பெயரில் இருப்பின் இப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.) – 05 புள்ளிகள்

- ✓ ஏனைய ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணங்கள் - 04 புள்ளிகள்

வசிப்பிடம் தொடர்பான மேலே கூறப்பட்டிருக்கும் ஆவணங்கள் அல்லாத ஆனால், விண்ணப்பதாரி/ வாழ்க்கைத் துணைக்குரிய முகவரியில் நிரந்தர வதிவைக் கொண்டிருப்பாரானால், விண்ணப்பத்தை முன்வைக்கும் வருடத்தின் ஜுன் 30 திகதியன்றுக்கு முந்திய 6 வருடங்கள் அல்லது அதைவிட கூடிய காலம், வதிவை உறுதிப்படுத்தும் ஆவணம் தொடர்பாக, 04 ஆவணங்களிற்கு 01 புள்ளி அல்லது விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரில் இருப்பின் 0.5 புள்ளி வீதமும் வழங்கப்படும்.

மின் கட்டணப்பட்டியல், நீர் கட்டணப்பட்டியல், வரி செலுத்தும் பற்றுச்சீட்டு, ஏக்கர் வரிப் பத்திரம், அடையாள அட்டை/ வாழ்க்கைத் துணையுடைய பிறப்புச் சான்றிதழ்.

மேற்படி ஆவணங்கள் கட்டாயமாக முந்திய 6 வருடங்களுக்கு அல்லது அதைவிட அதிக காலத்துக்குரியதாக இருப்பதோடு அந்த ஆவணங்களில் குறைந்தது 03 ஆவணங்களாவது இருந்தால் மட்டுமே இப்புள்ளிகள் வழங்கப்படும்.

குறித்த 6 வருட காலத்தினுள் விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரில் செலுத்தப்பட் கட்டணப் பட்டியல்கள் பின்னர் விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் பெயருக்கு மாற்றப்பட்டிருப்பின் உரிய இரு காலங்களும் பரிசீலிக்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

- ✓ அரச/ அரை அரச நிறுவனம் சார்ந்த ஆதனத்தில் பிறந்தது தொடக்கம் வதிவிலிருந்தாலும், அந்த ஆதனத்துக்காக பதிவை உறுதி செய்யும் பிரதான ஆவணம் இல்லாத சந்தர்ப்பத்தில், எந்தவொரு எவ்வித அண்மித்த பாடசாலைக்காக புள்ளி வெட்டுப்படாத விண்ணப்பதாரர்/ வழ்க்கைத் துணைக்கு உரிய ஆவணத்தில் அண்மித்த முன் 5 வருடங்களுக்கு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட, பிறந்தது தொடக்கம் விண்ணப்பதாரர், வாழ்க்கைத்துணை உரிய இடநிலையத்தில் வசித்து வருவதை உறுதி செய்யக்கூடிய (பிறப்புச் சான்றிதழ், விடுகை சான்றிதழ் …. முதலியன ஊடாக) திருமணத்தின் பின் இதுவரை விண்ணப்பிக்கப்படும் முகவரியில் வசித்து வருவதை உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரருக்கு (அந்த ஆதனம் அரச /அரை அரச நிறுவனம் சார்ந்த ஆதனம் என்பது குறித்தும், விண்ணப்பதாரர் அந்த ஆதனத்தில் பிறந்தது தொடக்கம் வசித்துவருவது குறித்து, உரிய நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட உறுதிப்பாடு விண்ணப்பதாரரினால் நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)) – 15 புள்ளிகள்

(உச்சமாக 20 புள்ளிகள்)

**இந்த வகையின் கீழ் மேற்குறித்த விடயங்களுக்குரிய வதிவை உறுதி செய்வதற்காக உரித்தான புள்ளியை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரருக்கு மட்டும் இதற்கு பின்னர் வரும் பாகங்களுக்கு புள்ளிகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.**

**ஆ) வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் மேலதிகள ஆவணங்கள்**

விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத் துணையின் பெயரிலுள்ள ஒரு ஆவணத்திற்கு 1 புள்ளி வீதம் கீழ்வரும் ஆவணங்களில் ஏதேனும் 05 ஆவணங்களுக்கு - 05 புள்ளிகள்

தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்/ நிலையான தொலைபேசி கட்டணப்பட்டியல் (கம்பியுடன்)/ பாடசாலை விடுகைப் பத்திரம்/ விவாகப் பதிவுச் சான்றிதழ்/ ஆயுட் காப்புறுதி உறுதிப்பத்திரம்/ பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ்/ வங்கிக் கணக்குப் புத்தகம்/ வாகனப் பதிவுச் சான்றிதழ்/ வாகன வருமானவரிப் பத்திரம்/ வாகன காப்புறுதிச் சான்றிதழ்

(விடுதி மின் கட்டணப் பட்டியல்/ நீர் கட்டணப் பட்டியல்/ வரிச் சான்றிதழ்/ ஏக்கர் வரிப்பத்திரம் வதிவினை உறுதிப்படுத்தும் பிரதான ஆவணத்தின்கீழ் வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணமொன்றாகக் கருதி புள்ளி வழங்க முடியாதவிடத்து மாத்திரம் வதிவினை உறுதிப்படுத்தும் மேலதிக ஆவணமாகக் கருத்திற் கொள்ளப்படும்.)

(உச்சமாக 5 புள்ளிகள்)

**II. வதிவினை உறுதிப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பின் பதிவு**

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை குறிப்பதற்கு விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள பகுதி (இல – 06) பூரணப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

அ) வாக்காளர் இடாப்பில் பதிவிற்காக புள்ளிகள் வழங்கும் போது விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்தய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்கள் (2021 – 2017) கவனத்திற் கொள்ளப்படும்.

அட்டவணை இல (ஐ) வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கு புள்ளிகள் வழங்கல்

| | விபரம் | புள்ளிகள் |
|---|---|---|
| i. | தாய் மற்றும் தந்தை இருவரினதும்/ சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் 05 வருடங்களுக்கு பதிவு செய்யப்பட்டிருத்தல் **அல்லது** தாய்/தந்தை பெயர் 5 வருடத்துக்கும், திருமணம் பதிவு செய்யப்பட்ட வருடம் உள்ளிட்ட வாழ்க்கைத்துணையின் பெயர் வாக்காளர் பதிவேட்டில் உள்ளிடப்பட விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தால் மற்றும் அதற்கு மேலும் தொடர்ச்சியாக 04 வருடங்கள் வாழ்க்கைத்துணையின் பெயர் வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருப்பின் | 25 |
| ii. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 04 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 22.5 |
| iii. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 03 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 20 |
| iv. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 02 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 17.5 |
| v. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 01 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 15 |
| vi. | தாய்/ தந்தையின் பெயர் மாத்திரம் 05 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 12.5 |

குறிப்பு :- ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 2.5 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டு மேற்காட்டப்பட்ட புள்ளி வழங்கும் முறை தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி புள்ளி வழங்கும் அட்டவணையினுள் அடங்காத சந்தர்ப்பத்தில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள காலத்திற்கு ஒருவருக்கு 2.5 புள்ளிகள் வீதம் புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

சட்டரீதியான பாதுகாவலர் தாய், தந்தை இருவருமெனக் கருதப்படுவதனால் தாய், தந்தை ஆகிய இருவரினதும் பதிவு வருடங்களின் எண்ணிக்கைக்கேற்ப கிடைக்கும் புள்ளிகள் (அதாவது வருடம் ஒன்றிற்கு 05 புள்ளிகள்) சட்ட ரீதியான பாதுகாவலருக்கு வழங்குதல் வேண்டும்.

**(உச்சப் புள்ளிகள் - 25)**

(ஆ) இதே போன்று முன் வருடங்களில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த விண்ணப்பதாரரின் துணை வெளிநாடு சென்றிருப்பின் அல்லது இறந்து இருப்பின் அல்லது சட்டரீதியாக விவாகரத்து பெற்றிருப்பின் உரிய ஆவணங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு இருவரும் இருப்பதாக கருதி புள்ளிகள் வழங்கப்படும்.

(இ) தற்போது வசிக்கும் இடத்தின் ஆவணங்களுக்கு ஏற்பவே வதிவிற்கான புள்ளிகள் வழங்கப்படும். எனினும் தற்போது வசிக்கும் இடத்தில் வதிவதற்கு முன்பு ஊட்டற் பிரதேசத்தினுள் வேறோர் இடத்தில் வசித்த விண்ணப்பதாரி ஒருவர் தமது குறைந்தபட்ச ஐந்து வருட வதிவுக்காலத்தினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் பதிவு அட்டவணைகள் இரண்டு இடத்திற்குமாகச் சமர்ப்பிக்கும் போது, (முன்னர் வசித்த நிலையம் 6.1.1 (அ)யில் குறிப்பிட்ட ஆவணம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.) அந்த இரு இடத்திலும் விண்ணப்பிக்கும் பாடசாலைக்கு மிக அண்மையிலுள்ள உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய பாடசாலைகள், ஒரே பாடசாலைகளாக இருந்தால் மாத்திரம் இரு இடங்களிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டவணைகள் தற்போதைய வசிப்பிடத்தின் வாக்காளர் அட்டவணைகளாகக் கருத்திற்கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.

ஈ) விண்ணப்பத்தை முன்வைக்கும் வருடத்தின் ஜுன் 30 திகதியிலிருந்து முந்திய 05 வருடங்களுக்குள் செய்யப்பட்ட அரசாங்க அபிவிருத்தித் திட்டங்கள் அல்லது அபிவிருத்திப் பிரேரணைகளுக்காக, சில பிரதேசங்களின் குடியிருப்பாளர்கள் அப் பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வேறு பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது மேற்படி அரசாங்க அபிவிருத்தி வேலைகள் காரணமாக அப்புறப்படுத்தப்பட்ட குடியிருப்பாளர்கள் அரசாங்கத்தின் நட்டஈட்டினை பெற்று வேறு பகுதிகளுக்கு நிரந்தரமாக குடியேறியுள்ள வேளையில், அவர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கு முந்திய மற்றும் தற்போதைய வதிவிடங்கள் இரண்டுக்குமுரிய முன்வைக்கப்பட்ட ஆவணங்கள், ஒரே இடத்துக்குரிய ஆவணமாக கவனிக்கப்பட்டு உரிய நியதிகளின் படி புள்ளிகள் வழங்கப்படவேண்டும்.

**III. வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத்தூரம்**

விண்ணப்பதாரியின் வதிவு உறுதிப்படுத்தப்படின் மாத்திரம் அவரால் தனது தற்போதைய வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகள் பெற்றுத் தரப்படும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்சப் புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 05 புள்ளிகள் வீதம் குறைக்கப்படும்.

(உரிய பிள்ளைக்கு ஆரம்பப் பிரிவுடன் கூடிய அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான போதனா மொழியைக் கொண்டதும், தமக்கு உரிய பெண்கள்/ ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரச பாடசாலைகளாகும (என்றாலும் சமய விகிதாசாரம் உரியதல்லாத பாடசாலைகளுக்கு எந்தவொரு சமயத்தின் மாணவருக்கு அனுமதி பெறு இயலும்.)

**(உச்சப் புள்ளிகள் - 50)**

இவ்வகையின் கீழ் விண்ணப்பதாரியின் வதிவு உறுதப்படுத்தப்படாவிடின் வழங்கப்பட்ட புள்ளிகளை நீக்க முடியும்.

**6.2 குறித்த பாடசாலையில் பழைய மாணவர்களாக உள்ள பெற்றோரின் பிள்ளைகள் - 25%**

(அ) இவ் வகையின் கீழ் குறித்த பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்/ மாணவியரான பிள்ளையின் தாய்/ தந்தை/ சட்டரீதியான பாதுகாவலருக்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) இடைநிலைப் பாடசாலைகள் எண்ணக்கருவின் கீழ் தாய்ப் பாடசாலையிலிருந்து ஆரம்பப் பிரிவு வேறொரு பாடசாலையாக பிரிக்கப்பட்டு நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு வேறாக்கப்பட்ட ஆண்டிலிருந்து இடைநிலைப் பாடசாலையின் 6ம் தரத்திலிருந்து கல்வி கற்கும் மாணவர் மற்றும் அதேவேளை இடைநிலைப் பாடசாலையிலிருந்து வெளியேறிய பழைய மாணவர் உரிய ஆரம்பப் பாடசாலையின் பழைய மாணவர்களாகக் கருதப்பட வேண்டும்.

(இ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

I. விண்ணப்பதாரி பாடசாலையில் கல்வி கற்ற தரமொன்றுக்கு (தரமொன்றில் மீண்டும் தங்கியிருப்பின் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது) 02 புள்ளிகள் வீதம்

**(உச்சப் புள்ளிகள் - 26)**

II. பாடசாலைக் காலத்தினுள் விண்ணப்பதாரி பெற்றுக் கொண்ட கல்வி சார் வெற்றிகள்.

**(உச்சப் புள்ளிகள் - 25)**

III. பாடசாலைக் காலத்தினுள் விண்ணப்பதாரி இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் பெற்றுக்கொண்ட வெற்றிகள்.

**(உச்சப் புள்ளிகள் - 25)**

IV. பழைய மாணவர் சங்க அங்கத்துவம், பாடசாலைக் காலத்தின் பின் பெற்றுக் கொண்டுள்ள கல்வி சார் வெற்றிகள், பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடசாலை அதிபரின் அனுமதியுடன் செயற்பாட்டிற்காகப் பெற்றுக் கொடுத்த பல்வேறு வழிகளிலான பல்வேறுபட்ட உதவிகள். (இங்கு பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளுக்கு உயர்ந்த பட்சம் 06 புள்ளிகளை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.)

**(உச்சப் புள்ளிகள் - 24)**

குறிப்பு: (II), (III) மற்றும் (IV) இல் குறிப்பிடப்படும் உச்ச புள்ளிகளை நேர்முகப்பரீட்சைக் குழுவின் தற்றுணிவுக்கேற்ப வழங்கப்பட்டுள்ள சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு பாதகம் ஏற்படாதவாறு சிறு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள முடியும்.

**6.3 தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர, சகோதரிகள் - 14%**

(அ) இவ்வகையின் கீழ் பிள்ளையின் பெற்றோரின்/ சட்டரீதியான பாதுகாவலரின் மூத்த பிள்ளைகள் தற்போது அப்பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருப்பின் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

**I. பாடசாலையில் உள்ள சகோதர சகோதரிகள்**

அ) பாடசாலையில் கல்வி கற்கும் சகோதர/ சகோதரிகள் பாடசாலையில் படித்த ஒரு தரத்திற்கு 02 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகள் (கல்வி கற்கும் சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கை எவ்வளவாயினும் அதில் ஒருவருக்கு மாத்திரமே இப்புள்ளிகள் வழங்கப்படும்.)

ஆ) குறித்த பாடசாலையில் கல்விகற்கும் மேலே குறிப்பிடப்பட்ட சகோதரன்/ சகோதரி முதலாம் தரத்தில் அனுமதி பெற்று கல்வி கற்றுவருவாராயின். (05 புள்ளிகள் )

இ) குறித்த பாடசாலையில் சகோதரர்கள்/ சகோதரிகள் இருவர் அல்லது இருவரை விட அதிகமாக கல்விகற்போராயின். (05 புள்ளிகள் )

ஈ) பாடசாலையில் கல்வி கற்கும் சகோதர/ சகோதரிகள் பாடசாலைக்கு பெற்றுத் தந்துள்ள வெற்றிகளும் பாடசாலையின் வளர்ச்சிக்கு பெற்றோர் மூலம் பாடசாலைக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளும். (பாடசாலைக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளுக்கு உயர்ந்த பட்சம் 4 புள்ளிகள் மட்டுமே வழங்கப்படும்.) (10 புள்ளிகள் )

**(உச்சப் புள்ளிகள் - 40)**

**II. வதிவினை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய ஆவணங்கள்**

மேற்படி ஆவணங்கள் உரிய நபரின் பெயரில் சொந்தமாக்கப்பட்டு, விண்ணப்பத்தை முன்வைக்கும் வருடத்தின் ஜுன் 30 திகதியிலிருந்து முந்திய 5 வருடங்கள் அல்லது அதைவிட அதிகமாகவோ பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளும், 5 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 4 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 80மூ மும், 4 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 3 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 60மூ மும், 3 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 2 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 40மூ மும், 2 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 1 வருடம் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 20மூ மும், 1 ஆண்டுக்குக் குறைவாகவோ அல்லது 6 மாதங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 10மூ மும், 6 மாதங்களுக்குக் குறைவாகப் பெற்றிருந்தால் மொத்தப் புள்ளியில் 05மூ மும் என்றவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

- ✓ உரித்து உறுதி
- ✓ தலைப்புப்பதிவு சான்றிதழ் (விம்சவிய)
- ✓ அன்பளிப்பு உறுதி
- ✓ கொடுப்பனவுப் பத்திரம்
- ✓ அரசாங்க வழங்கல் பத்திரம் (**உரி**மையாளர் இறந்திருந்தால் விண்ணப்பதாரி / வாழ்க்கைத் துணை, **பின்**னுரித்தாளியாகியாக பெயரிடப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட உரித்துடையவர் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்)
- ✓ விகாரை> Njthyak தொடர்பான சட்டமூலத்தின் கீழ் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மூலம் வழங்கப் பட்டுள்ள குத்தகை உறுதிப் பத்திரம் அல்லது பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட உரிய விகாராதிபதி மூலம் பெற்ற சான்றுப்பத்திரம்.
- ✓ வரலாறு மூலம் உறுதிப்படுத்தப்பட்டு 10 வருடத்தை விட அதிக காலத்தைக் கொண்ட வெளியிடுகைப் பத்திரம்
- ✓ அரச மற்றும் அரை அரச நிறுவனத்தில் தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் விலைக்கு வாங்கிய, முழு கொடுப்பனவையும் செலுத்தி முடிவுறுத்தி ஆனாலும் இதுவரை உரிய நிறுவனத்தினூடாக அதன் உரிமையாளருக்கு அந்த ஆதனத்தை ஒப்படைத்திராத வீடுகள் (முழு பணத்தையும் செலுத்தி பூர்த்தி செய்துள்ளார் என்பதை உரிய நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட எழுத்து மூல உறுதி ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

(உரித்துறுதி மற்றும் அன்பளிப்பு உறுதி தொடர்பாக வெளியிடுகைப் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அவ் வெளியிடுகைப் பத்திரம் 10 வருடங்கள் அல்லது அதை விடக் கூடிய காலம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

- **விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத்துணையின் பெயருக்கு வதிவிடத்தின் உரிமை இருந்தால் - 10 புள்ளிகள்**
- **விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தைரின் பெயரில் வதிவிடத்தின் உரிமை இருந்தால் – 06 புள்ளிகள்**

உரிய 05 வருட காலப்பகுதியினுள் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரிலுள்ள உறுதி விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத்துணைக்கு உரிமை மாற்றப்பட்டிருப்பின் உரிய இரு காலங்களும் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

(உரிமையானது வேறொருவரின் பெயரில் இருப்பின் இப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

அவசியமேற்படின் வரலாற்றுப் பதிவு அல்லது இரண்டாம் பிரதி பரீட்சிக்கப்பட்டு உரிமை உறுதிப்படுத்திக் கொள்ளப்படும்.

- ✓ விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் பெயரில் மாத்திரம் தொடர்த்தேச்சியாக பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப்பத்திரம் **(தேவையேற்படின் குத்தகை வழங்கியவரின் உரிமை தொடர்பாக வரலாறு ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.) குத்தகை உறுதி குறைந்தது விண்ணப்பம் முன்வைக்கப்படும் திகதி ஜுன் 30 திகதியிலிருந்து 1 வருடத்திற்கு செல்லுபடியாகும் என்பதோடு, உரிய ஆதனம்/ வீட்டுக்காக வேறாக சோலை வரி இலக்கம் / வீட்டு இலக்கம் இருக்க வேண்டும்.**/ விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் பெயரில் மாத்திரம் அரச உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்பதற்கான ஆவணம் (திணைக்கள தலைவர் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்) பிரம்மச்சாரிகளுக்கான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்போர் இப்புள்ளிகளுக்கான உரிமைக்காக சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்/ வீட்டு வாடகை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வாடகை வீட்டாளர்கள் என உறுதிப்படுத்தப்படும் ஆவணங்கள், விண்ணப்பதாரரின்/ வாழ்க்கைத்துணையின் பெயரில் மட்டுமே உள்ள அரச/ அரை அரச நிறுவனம் ஒன்றின் தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் விலைக்கு வாங்கிய என்றாலும் கொடுப்பனவை இறுதிப்படுத்தாத வீட்டு ஆவணம் (அரச/ அரை அரச நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட விற்பனவு ஒப்பந்தம் தொடர்பில் அந்த ஒப்பந்தம் மற்றும் தவணைக் கொடுப்பனவு செய்த பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.) - 04 புள்ளிகள்

உரிய 05 வருட காலப்பகுதியினுள் பதிவு செய்யப்பட்ட உறுதிப்பத்திர உரித்தாளி, அந்த ஆதனத்தின் உரிமையாளராக மாறியிருப்பின், அந்தக் காலப்பகுதி வேறு வேறாக கவனத்திற் கொள்ளப்பட்டு உரிய வீதாசாரத்தின் படி புள்ளி வழங்கப்படும். இந்த நிலையத்தில் வசித்திருத்தல் தொடர்ச்சியாக இருந்திருக்க வேண்டு:ம

(பதிவு உறுதிப் பத்திரத்திற்கு வெளியிடுகைப் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அவ் வெளியிடுகைப் பத்திரம் 10 வருடங்கள் அல்லது அதை விடக் கூடிய காலம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

- ✓ விண்ணப்பதாரி/ வாழ்க்கைத்துணை குறித்த 10 வருடங்களைவிட அதிககாலம் அரச காணியொன்றில் (உரிய முகவரியில்) வசிப்பவராயின் உரிய பிரதேசத்தின் மாநகர ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் (உரிமையானது வேறொருவரின் பெயரில் இருப்பின் இப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.) – 04 புள்ளிகள்

- ✓ **ஏனைய ஏற்றுக் கொள்ளப்படும் ஆவணங்கள் - 02 புள்ளிகள்**

வசிப்பிடம் தொடர்பான மேலே கூறப்பட்டிருக்கும் ஆவணங்கள் அல்லாத ஆனால், விண்ணப்பதாரி/ வாழ்க்கைத் துணைக்குரிய முகவரியில் நிரந்தர வதிவைக் கொண்டிருப்பாரானால், விண்ணப்பத்தை முன்வைக்கும் வருடத்தின் ஜுன் 30 திகதியன்று முந்திய 06 வருடங்கள் அல்லது அதைவிட அதிக காலம், வதிவை உறுதிப்படுத்தும் ஆவணம் தொடர்பாக, 04 ஆவணகளிற்க்கு விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின பெயரில் இருப்பின் 0.5 புள்ளிகள் வீதமும் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் தாய் அல்லது தந்தையின் பெயரிலிருப்பின் 0.25 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

மின் கட்டணப் பட்டியல்/ நீர் கட்டணப் பட்டியல்/ வரிச் சான்றிதழ்/ ஏக்கர் வரிப்பத்திரம்/ விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் பிறப்புச் காண்றிதழ்.

மேற்படி ஆவணங்கள் கட்டாயமாக முந்திய 6 வருடங்களுக்கு அல்லது அதைவிட அதிக காலத்துக்குரியதாக இருப்பதோடு அந்த ஆவணங்களில் குறைந்தது 03 ஆவணமாவது இருந்தால் மட்டுமே இப்புள்ளிகள் வழங்கப்படும் .

குறித்த 6 வருட காலத்தினுள் விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரில் செலுத்தப்பட் கட்டணப் பட்டியல்கள் பின்னர் விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் பெயருக்கு மாற்றப்பட்டிருப்பின் உரிய காலங்கள் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

- ✓ அரச/ அரை அரச நிறுவனம் சார்ந்த ஆதனத்தில் பிறந்தது தொடக்கம் வதிவிலிருந்தாலும், அந்த ஆதனத்துக்காக பதிவை உறுதி செய்யும் பிரதான ஆவணம் இல்லாத சந்தர்ப்பத்தில், எந்தவொரு எவ்வித அண்மித்த பாடசாலைக்காக புள்ளி வெட்டுப்படாத விண்ணப்பதாரர்/ வழ்க்கைத் துணைக்கு உரிய ஆவணத்தில் அண்மித்த முன் 5 வருடங்களுக்கு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட, பிறந்தது தொடக்கம் விண்ணப்பதாரர், வாழ்க்கைத்துணை உரிய இடநிலையத்தில் வசித்து வருவதை உறுதி செய்யக்கூடிய (பிறப்புச் சான்றிதழ், விடுகை சான்றிதழ் …. முதலியன ஊடாக) திருமணத்தின் பின் இதுவரை விண்ணப்பிக்கப்படும் முகவரியில் வசித்து வருவதை உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரருக்கு (அந்த ஆதனம் அரச /அரை அரச நிறுவனம் சார்ந்த ஆதனம் என்பது குறித்தும், விண்ணப்பதாரர் அந்த ஆதனத்தில் பிறந்தது தொடக்கம் வசித்துவருவது குறித்து, உரிய நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட உறுதிப்பாடு விண்ணப்பதாரரினால் நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)) – புள்ளி 06

(ஆகக்கூடியது 10 புள்ளிகள்)

**இந்த வகையின் கீழ் மேலுள்ள விடயங்களுக்குரிய வதிவை உறுதி செய்து கொள்வதற்காக உரித்தான புள்ளியை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரருக்கு மட்டுமே இதற்கு பின்னர் வரும் பாகங்களுக்காக புள்ளிகள் பெற்றுக்கொள்ள முடியும்**

**III. வதிவினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு**

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை குறிப்பதற்கு விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள பகுதி (இல - 06) பூரணப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

அ) வாக்காளர் இடாப்பில் பதிவிற்காக புள்ளிகள் வழங்கும் போது விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்தய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்கள் (2021 – 2017) கவனத்திற் கொள்ளப்படும்.

அட்டவணை இல:- (ஐஐ) வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கு புள்ளிகள் வழங்கல்

| | விபரம் | புள்ளிகள் |
|---|---|---|
| i. | தாய், தந்தை இருவரினதும் பெயர்கள்/ சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் 05 வருடங்களும் பதிவாகியிருப்பின் | 20 |
| ii. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 04 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 18 |
| iii. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 03 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 16 |
| iv. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 02 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 14 |
| v. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 01 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 12 |
| vi. | தாய்/ தந்தையின் பெயர் மாத்திரம் 05 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 10 |

**(உச்சப் புள்ளிகள் - 20)**

குறிப்பு:- ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டு மேற்காட்டப்பட்ட புள்ளி வழங்கும் முறை தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி புள்ளி வழங்கும் அட்டவணையினுள் அடங்காத சந்தர்ப்பத்தில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள காலத்திற்கு ஒருவருக்கு 02 புள்ளிகள் வீதம் புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

சட்டரீதியான பாதுகாவலர் தாய், தந்தை இருவருமெனக் கருதப்படுவதனால் தாய், தந்தை ஆகிய இருவரினதும் பதிவு வருடங்களின் எண்ணிக்கைக்கேற்ப கிடைக்கும் புள்ளிகள் (அதாவது வருடம் ஒன்றிற்கு 04 புள்ளிகள்) சட்ட ரீதியான பாதுகாவலருக்கு வழங்குதல் வேண்டும்.

ஆ) இதே போன்று முன் வருடங்களில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த விண்ணப்பதாரரின் துணை வெளிநாடு சென்றிருப்பின் அல்லது இறந்து இருப்பின் அல்லது சட்டரீதியாக விவாகரத்து பெற்றிருப்பின் உரிய ஆவணங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு இருவரும் இருப்பதாக கருதி புள்ளிகள் வழங்கப்படும்.

இ) தற்போது வசிக்கும் இடத்தின் ஆவணங்களுக்கு ஏற்பவே வதிவிற்கான புள்ளிகள் வழங்கப்படும். எனினும் தற்போது வசிக்கும் இடத்தில் வதிவதற்கு முன்பு ஊட்ட பிரதேசத்தினுள் வேறோர் இடத்தில் வசித்த ( மன்னர் வசித்த நிலையம் 6.3 II யில் குறிப்பிட்ட ஆவணம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தமது குறைந்தபட்ச ஐந்து வருட வதிவுக்காலத்தினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் பதிவு அட்டவணைகள் இரண்டு இடத்திற்குமாகச் சமர்ப்பிக்கும் போது, அந்த இரு இடத்திலும் விண்ணப்பிக்கும் பாடசாலைக்கு மிக அண்மையிலுள்ள உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய பாடசாலைகள், ஒரே பாடசாலைகளாக இருந்தால் மாத்திரம் இரு இடங்களிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டவணைகள் தற்போதய வசிப்பிடத்தின் வாக்காளர் அட்டவணைகளாகக் கருத்திற்கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.

ஈ) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் வருடத்தின் ஜுன் 30 திகதியன்றிலிருந்து முந்திய 5 வருடங்களுக்குள் செய்யப்பட்ட அரசாங்க அபிவிருத்தித் திட்டங்கள் அல்லது அபிவிருத்திப் பிரேரணைகளுக்காக, சில பிரதேசங்களின் குடியிருப்பாளர்கள் அப் பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வேறு பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது மேற்படி அரசாங்க அபிவிருத்தி வேலைகள் காரணமாக அப்புறப்படுத்தப்பட்ட குடியிருப்பாளர்கள் அரசாங்கத்தின் நட்டஈட்டினை பெற்று வேறு பகுதிகளுக்கு நிரந்தரமாக குடியேறியுள்ள வேளையில், அவர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கு முந்திய மற்றும் தற்போதைய வதிவிடங்கள் இரண்டுக்குமுரிய முன்வைக்கப்பட்ட ஆவணங்கள், ஒரே இடத்துக்குரிய ஆவணமாக கவனிக்கப்பட்டு உரிய நியதிகளின் படி புள்ளிகள் வழங்கப்படும்..

**IV. வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத்தூரம்**

விண்ணப்பதாரியின் வசிப்பிடத்திலிருந்து தான் விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகள் பெற்றுத் தரப்படும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்சப் புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 03 புள்ளிகள் வீதம் குறைக்கப்படும்.

(உரிய பிள்ளைக்கு ஆரம்பப் பிரிவுடன் கூடிய அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான போதனா மொழியைக் கொண்டதும், தமக்கு உரிய பெண்கள்/ ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரச பாடசாலைகளாகும்.)

**(உச்சப் புள்ளிகள் - 30)**

**6.4 கல்வியமைச்சின் கீழ் அரச பாடசாலைக்கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் - 06%**

(அ) கல்வி அமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்களாக தாய்/ தந்தை/ சட்ட ரீதியான பாதுகாவலர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் வருடத்தின் ஜுன் 30 தினத்திற்கு சேவையில் இருப்பின் மாத்திரமே இவ்வகைக்கு விண்ணப்பிக்க முடியும்

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளிகள் வழங்கும் முறை**

I. கல்வி அமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித்தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனங்களில் நிரந்தரப் பணியாளராக சேவையாற்றிய காலம் - முழு வருடமொன்றுக்கு 01 புள்ளிகள் வீதம்

**(உச்சப் புள்ளிகள் - 20)**

II. கஷ்டப் பாடசாலை சேவைக் காலம் (கஷ்டப் பாடசாலை சேவைக்காலம் உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாத்திரம் உறுதிப்படுத்த வேண்டும். கல்வி அமைச்சின் மூலம் அதிக்'ட மற்றும் க்'டப் பாடசாலை என பெயரிடப்பட்டுள்ள **சுற்றுநிருபத்திற்கிணங்க**)

(அ) தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றின் கஷ்டப் பாடசாலைக் காலம் (இக்காலம் தொடர்ச்சியாய் இருத்தல் வேண்டும்) - பூரண 01 வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் 25 புள்ளிகள்

(ஆ) தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றாதிருப்பினும் இதற்கு முன் கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றியிருப்பின் சேவைக் காலம் (க~டப்பிரதேச கொடுப்பனவு பெற்றமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) - பூரண 01 வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் 15 புள்ளிகள்

**(உச்சப் புள்ளிகள் - 25)**

குறிப்பு:- குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு அதிகமான சேவைக்காலம் க~ட்டப் பாடசாலையொன்றில் உள்ளவர்களுக்கு மாத்திரம் பூரண வருடத்திற்குய புள்ளியும் 06 மாதங்கள் அல்லது அதைவிடக் கூடுதலாகம் இருப்பின் உரிய புள்ளியில் அரைப்பங்கு வழங்கப்படும்.

III. பெற்றுக்கொள்ளாத விடுமுறைகள்:

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் வருடத்திற்கு முந்திய 05 வருடங்களுக்காக கலண்டர் வருடமொன்றில் பெற்றுக்கொள்ளாத 20 விடுமுறை நாட்களுக்கு 02 புள்ளிகள் வீதம்
(வருடத்தில் பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள் 20 ஐ விடக்குறைவாயின் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).

**(உச்சப் புள்ளிகள் - 10)**

IV. பிள்ளையை அனுமதிக்க விரும்பும் பாடசாலையிலேயே சேவையாற்றின்,

- ❖ சேவைக்காலம் ஒரு வருட்த்திற்கு 02 புள்ளிகள் வீதம் 05 வருடத்திற்கான 10 புள்ளிகள்.

**(உச்சப் புள்ளிகள் - 10)**

V. தற்போதைய நிரந்தர வதிவிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலைக்குள்ள தூரம் (அண்மித்த, பொதுப் போக்குவரத்துப் பாதையை உபயோகித்தல் வேண்டும்)

| | |
|---|---|
| 01 கி.மீ உட்பட்டதென்றால் | - 10 புள்ளிகள் |
| 01 கி.மீ விட அதிகம் 03 கி.மீ வரை | - 08 புள்ளிகள் |
| 03 கி.மீ விட அதிகம் 05 கி.மீ வரை | - 06 புள்ளிகள் |
| 05 கி.மீ. ஐ விட அதிகமாயின் | - 04 புள்ளிகள் |

நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு 6.3 II இலுள்ளவாறு ஆவணத்துக்குரிய அது தொடர்பான காலத்துக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

**(உச்சப் புள்ளிகள் - 10)**

VI. தற்போதைய சேவை நிலையத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலைக்குள்ள தூரம்

| | |
|---|---|
| 100 கி.மீ. ஐ விட அதிகமெனின் | - 25 புள்ளிகள் |
| 100 கி.மீ. விட குறைவு 70 கி.மீ. வரை | - 20 புள்ளிகள் |
| 70 கி.மீ. விட குறைவு 40 கி.மீ. வரை | - 15 புள்ளிகள் |
| 40 கி.மீ. விட குறைவு 20 கி.மீ. வரை | - 10 புள்ளிகள் |
| 20 கி.மி. ஐ விட குறைவாயின் | - 05 புள்ளிகள் |

**(உச்சப் புள்ளிகள் - 25)**

**6.5 அரச சேவைத் தேவையின் பொருட்டு / அரச வருடாந்த இடமாற்றம் பெற்ற அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்டசபை/ அரச வங்கி அலுவலர்களின் பிள்ளைகள் - 04%**

(அ) இவ் வகைகளின் கீழ் அரச சேவைத் தேவையின் பொருட்டு/ அரச வருடாந்த இடமாற்றம் பெற்ற அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்டசபை/ அரச வங்கி அலுவலர்களின் அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபை/ அரசாங்க வங்கி அலுவலரட்களுக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் வருடத்தின் ஜுன் 30 திகதிக்கு முந்திய 05 வருடங்களினுள் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தினுள், அமைந்த நிறுவனமொன்றுக்கு இடமாற்றம் பெற்று கடமையை பாரமேற்றதன் பின் பாடசாலையின் ஊட்டற் பிரதேசத்தினுள் பிள்ளையுடன் விண்ணப்பதாரி வசித்தால் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

இங்கு பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் என்பதால் குறிப்பிடப்படுவது உரிய பாடசாலையை மையமாக வைத்து கிலோமீட்டர் 10 ஐ ஆரையாகக் கொண்டு வரையும் வட்டத்தின் எல்லையினுள் உரிய நிறுவனம் அமைந்திருத்தலாகும். (தேவையேற்படின் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு இவ்வெல்லையினை பெரிதாக்கிக் கொள்ள முடியும்). அத்தோடு முந்தைய சேவை நிலையம் அமைந்திருந்த பிரதேசத்தில் பிள்ளையுடன் வசித்து புதிய சேவை நிலயத்திற்குரிய வசிப்பிடத்திற்கு பிள்ளையுடன் வருதல் வேண்டும். இன்னும் கடைசியாகப் பெற்ற இடமாற்றம் மட்டுமே கருத்திற் கொள்ளப்படும். மேலும் இணைப்புச் செய்தல் பயிற்சிப் பாடநெறிகள், கல்விச் செயற்பாடுகளுக்காக வசிப்பிடத்தை மாற்றுதல் போன்றன இதன் கீழ் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதோடு பதிய சேவை நிலைத்துக்கிடையில் குறைந்த பட்சம் 50 மீற்றர் தூரம் இருக்க வேண்டும் என்பதோடு **குறைந்த பட்சம் ஒரு வருடமாவது முன்னைய சேவை நிலையத்தில் சேவையாற்றி இருக்க வேண்டும்.**

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

I. முன்னைய சேவை நிலையத்திற்கும் இடமாற்றம் பெற்று வந்த சேவை நிலையத்துக்கும் இடையிலான தூரம் (அண்மித்த, பொதுப் போக்குவரத்துப் பாதையை உபயோகித்தல் வேண்டும்)

150 கி.மீ. ஐ விட அதிகமெனின் - 35 புள்ளிகள்
150 கி.மீ. ஐ விட குறைவு 100 கி.மீ. வரை - 28 புள்ளிகள்
100 கி.மீ. ஐ விட குறைவு 50 கி.மீ. வரை - 21 புள்ளிகள்

**(உச்சப் புள்ளிகள் - 35)**

**II. வதிவிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள கிட்டிய தூரம்**
**(6.3 II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் ஊடாக வதிவினை உறுதிப்படுத்த வேண்டும்)**

இடமாற்றம் பெற்று வந்து வசிக்கும் வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத் தூரம் வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகள் பெற்றுத் தரப்படும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்ச புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 03 புள்ளிகள் வீதம் குறைக்கப்படும்.

(உரிய பிள்ளைக்கு ஆரம்பப் பிரிவுடன் கூடிய அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் எனக் கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான போதனா மொழியைக் கொண்டதும் தமக்கு உரிய பெண்கள்/ ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரச பாடசாலைகளாகும. என்றாலும் சமய விகிதாசாரம் உரித்தல்லாத பாடசாலைகளுக்கு யாதும் சமயத்தை சார்ந்தவர்கள் அனுமதிக்கப்படலாம்.)

**(உச்சப் புள்ளிகள் - 30)**

III. அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்டசபை/ அரச வங்கி அலுவலரின் சேவைக்காலத்திற்கு வருடத்துக்கு 01 புள்ளி வீதம்
**(உச்சப் புள்ளிகள் - 10)**

IV. முந்திய சேவை நிலையத்தில் பணியாற்றிய காலம் (இறுதியாக இடமாற்றம் பெறுவதற்கு முன் சேவையாற்றிய சேவை நிலையம்)

03 வருடங்கள் அல்லது அதைவிட அதிகம் - 10 புள்ளிகள்
02 வருடத்திலிருந்து 03 வருடங்களாயின் - 08 புள்ளிகள்
01 வருடத்திலிருந்து 02 வருடங்களாயின் - 05 புள்ளிகள்

**(உச்சப் புள்ளிகள் - 10)**

V. இடமாற்றம் பெற்று முடிவடைந்த காலம் (விண்ணப்பம் முன்வைக்கப்படும் வருடத்தின் ஜூன் 30 தினத்திற்கு)

வருடமொன்றிக்குள் - 05 புள்ளிகள்
01 வருடம் - 02 வருடத்தினுள் - 04 புள்ளிகள்
02 வருடம் - 03 வருடத்தினுள் - 03 புள்ளிகள்
03 வருடம் - 04 வருடத்தினுள் - 02 புள்ளிகள்
04 வருடம் - 05 வருடத்தினுள் - 01 புள்ளி

**(உச்சப் புள்ளிகள் - 05)**

VI. பெற்றுக் கொள்ளாத விடுமுறைகள்.

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் வருடத்திற்கு முந்திய 05 வருடங்களுக்காக கலண்டர் வருடமொன்றில் பெற்றுக்கொள்ளாத 20 விடுமுறை நாட்களுக்கு 02 புள்ளிகள் வீதம்

(வருடத்தில் பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள் 20 ஐ விடக் குறைவாயின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).
**(உச்சப் புள்ளிகள் - 10)**

**குறிப்பு:** முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் வருடத்தின் ஜூன் 30 தினத்தின் பின் அல்லது முதலாம் தரம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அரசின் சேவைத் தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்று/ உரிய பிள்ளையுடன் வெளிநாட்டிலிருந்து விட்டு வரும் அலுவலர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக உரிய பாடசாலை அடங்கும் மாகாணக் கல்வி திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பபடிவங்களை அவர்கள் அனுப்புதல் வேண்டும். இப் பெற்றோரின் பிள்ளைகளுக்காக உரிய கல்வி அதிகாரிகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட பாடசாலையொன்று பெற்றுத் தரப்படும்.

**6.6 பிள்ளையுடன் வெளிநாட்டில் வசித்துவிட்டு வந்தவர்களின் பிள்ளைகள் - 01%**

(அ) இவ் வகையின் கீழ் பிள்ளையுடன் வெளிநாட்டில் வசித்து விட்டு விண்ணப்பங்கள் முன்வைக்கப்படும் வருடத்திற்கு முந்திய வருடத்தின் ஜூலை 01 ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் வருடத்தின் ஜூன் 30 தினம் வரையான காலத்தினுள் இந்நாட்டுக்கு வந்துள்ள தாய்/ தந்தை/ சட்டரீதியான பாதுகாவலருக்கு விண்ணப்பிக்க முடியும். அதேபோல் அவர்கள் குறைந்தது தொடர்ச்சியான வருடமொன்றுக்கு குறையாத காலம் வெளிநாட்டில் பணிபுரிந்திருக்க வேண்டும்.

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

I. நாடு திரும்பிய தினம் வரை பிள்ளையுடன் வெளிநாட்டிலிருந்த காலம்

தொடர்ந்து 03 வருடங்கள் அல்லது அதைவிடக் கூடிய காலம் - 25 புள்ளிகள்
தொடர்ந்து 02 தொடக்கம் 03 வருடங்கள் வரையான காலம் - 15 புள்ளிகள்
தொடர்ந்து 01 தொடக்கம் 02 வருடங்கள் வரையான காலம் - 10 புள்ளிகள்

**(உச்சப் புள்ளிகள் - 25)**

(இக்காலத்தினுள் மாதமொன்றிற்கு குறைந்த காலம் விடுமுறையில் இலங்கைக்கு வந்து மீண்டும் உரிய இடத்திற்குச் சென்றிருப்பின் தொடர்காலம் முறிவடையாது)

II. வெளிநாடு சென்றமைக்கான காரணம்:

இலங்கை அரசின் தூதரக அலுவல் காரணமாக - 40 புள்ளிகள்

சொந்த தொழில் தேவையொன்றுக்காக - 30 புள்ளிகள்

(குறைந்தது 2 ஆண்டுகள் வெளிநாட்டில் தொழில் புரிந்திருக்க வேண்டும்)

இலங்கை அரசின் தேவையொன்றுக்காக - 25 புள்ளிகள்

(அரசின் மூலம் அரசிற்காக வெளிநாடொன்றில் கடமையொன்றினை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட ஒருவருக்காக)

புலமைப் பரிசிலொன்றைப் பெற்று - 20 புள்ளிகள்

(புரியும் கடமைக்கான தொழில் வாண்மை விருத்திக்கு அவசியமானது)

**(உச்சப் புள்ளிகள் - 40)**

III. வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத் தூரம்

(வசிப்பிடத்திலிருந்து 6.3 II ல் உள்ளவாறு ஆவணத்தின் படி வதிவினை உறுதிப்படுத்தல் வேண்டும்)

விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்சப் புள்ளிகள் பெற்றுத் தரப்படும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்ச புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 3.5 புள்ளிகள் வீதம் குறைக்கப்படும்.

உரிய பிள்ளைக்கு ஆரம்பப் பிரிவுடன் கூடிய அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் எனக் கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான போதனா மொழியைக் கொண்டதும் தமக்கு உரிய பெண்கள்/ ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரச பாடசாலைகளாகும. என்றாலும் சமய விகிதாசாரம் உரித்தல்லாத பாடசாலைகளுக்கு யாதும் சமயத்தை சார்ந்தவர்கள் அனுமதிக்கப்படலாம்.)

**(உச்சப் புள்ளிகள் - 35)**

**7.0 யுத்த நடவடிக்கை கடமைகளில் ஈடுபட்ட முப்படைகளினதும் பொலிஸ் உறுப்பினர்களினதும் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட சலுகை**

7.1 யுத்த நடவடிக்கைக் கடமைகளில் ஈடுபட்ட முப்படைகள், பொலிஸ் உறுப்பினர்கள் மூலம் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு/ சட்டமும் ஒழுங்குக்குமான அமைச்சின் செயலாளருக்கு அல்லது உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களிடையே தகைமையான பிள்ளைகளை தெரிவு செய்வதற்காக புள்ளி வழங்கும் முறையொன்று உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உரிய அதிகாரிகள் மூலம் தயார் செய்யப்பட்டு அதன்படி பிள்ளைகள் தெரிவு செய்யப்படுவர். இங்கு யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு அங்கவீனமான உறுப்பினர்களுக்கு முன்னுரிமை பெற்றுத் தரப்படல் வேண்டும்.

7.2 பாதுகாப்பு அமைச்சினதும் சட்டமும் ஒழுங்குக்குமான அமைச்சினதும் செயலாளர்கள் மூலம் பாடசாலையொன்றின் சமாந்தர வகுப்பொன்றுக்கு 05 பிள்ளைகள் வீதம் தெரிவுசெய்யப்பட்டு கல்வி அமைச்சுக்கு பெற்றுத் தரப்பட்டதன் பின்னர் அப்பிள்ளைகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர்.

7.3 பாதுகாப்பமைச்சினதும் சட்டமும் ஒழுங்குக்குமான அமைச்சினதும் அதிகாரிகள் மூலம் புள்ளிவழங்கும் முறை ஒன்றுக்கு ஏற்ப பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டு பாடசாலை பெற்றுக்கொடுக்கும் செயற்பாடு நடைபெறுவதால் இது தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டியதும் அவ்அமைச்சுகளின் உரிய அதிகாரிகள் மூலமேயாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

**8.0 ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

8.1 பிள்ளைகளைத் தெரிவு செய்வதற்காக பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் மூலம் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியையும் விண்ணப்பத்துடன் இணைத்த ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் பெற்றுத்தரப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைக்கேற்ப புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களினதும் மூலப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக இவ் ஆவணங்களின் நிழற் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 தம்மால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் உண்மைத் தன்மையை சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.3 கிராம அலுவலர் அலுவலகத்தில் சான்றுப்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்புக்களின் பதிவு விபரங்கள். தேர்தல் திணைக்களத்தின் மூலம் பெற்றுத் தரப்பட்டிருக்கும் வாக்காளர் இடாப்புக்கள் மூலம் நேர்முகப் பரீட்சைக்குழு உறுதிப்படுத்திக் கொள்ளப்படும். வாக்காளர் இடாப்பில் பதிவு தொடர்பில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் தேர்தல் திணைக்களத்தின் மூலம் அவை பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளப்படும்.

8.4 சமர்ப்பிக்கப்பட்ட ஏதும் ஆவணம் பிழையானதென நேர்முகப் பரீட்சைக்குழு கருதினால் அதை வழங்கிய நிறுவனத்திடம் அல்லது அதிகாரம் பெற்றவரிடம் விசாரித்து அது பற்றிய உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நேர்முகப் பரீட்சைக்குழுவின் தலைவருக்கு முழு அதிகாரம் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அது பற்றிய உரிய அதிகாரம் பெற்றவருக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அறிவிக்க முடியும். அதன் பிரகாரம் சமர்ப்பித்துள்ள ஆவணம்/ ஆவணங்கள் பிழையானவை என உறுதிப்படுத்தப்படுமாயின் அவ்வாறான ஆவணம்/ ஆவணங்கள் சமர்ப்பித்தமைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

8.5 நேர்முகப் பரீட்சையின் போது உங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், ஏனைய விபரங்களுக்கு ஏற்ப உங்கள் முன்னிலையிலேயே புள்ளியிடும் தாளில் புள்ளிகள் இடப்படும். எனினும் பிழையான தகவல்கள்/ போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டால் விண்ணப்பத்தினை நிராகரிப்பதற்கு/ புள்ளிகளை திருத்துவதற்கு நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு.

**9.0 தற்காலிக அட்டவணை**

9.1 புள்ளி முன்னுரிமைக்கேற்ப ஒவ்வொரு வகைகளுக்கும் வெவ்வேறாக தெரிவுகள் நடைபெறுவதோடு தற்காலிக அட்டவணை ஒன்றும் காத்திருக்கும் அட்டவணை ஒன்றும் தயார் செய்யப்படும்.

9.2 தற்காலிக அட்டவணையையும் காத்திருக்கும் அட்டவணையையும் காட்சிக்கு விடப்பட முன்பு பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் வகையின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பிள்ளைகளின் வதிவிடத்தினை உறுதிப்படுத்த வதிவிடத்துக்குச் சென்று பரிசீலனை செய்யப்பட்டு உறுதிசெய்து கொள்ளப்படும். வதிவிடத்துக்குச் சென்று பரீட்சிக்கையில் வதிவு உறுதி செய்யப்படாவிடில் அட்டவணையிலிருந்து பெயர் நீக்கப்படும். அவசியமேற்படின் வேறு வகைகளுக்காகவும் வசிப்பிடம் சென்று பரீட்சிக்கப்படலாம்.

9.3 ஒன்றுக்கதிகமான வகைகளுக்கு விண்ணப்பித்த பிள்ளையொன்று ஒன்றுக்குமதிகமான வகைகளுக்கு தெரிவுசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் அந்த ஒருவகையில் அல்லது தெரிவு செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பம் இருக்குமாயின் அச்சந்தர்ப்பம் இல்லாது போகுமாறு அந்தப்பிள்ளையின் பெயர் அவற்றில் அதிக வீதத்தைக் கொண்டுள்ள வகைகள் மட்டும் மீதப்படுத்தப்பட்டு ஏனைய வகைகளிலுள்ள அட்டவணைகளில் இருந்து அகற்றப்படல் வேண்டும்.

9.4 நேர்முகப் பரீட்சைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் தற்காலிக அட்டவணையும் காத்திருக்கும் அட்டவணையும் நேர்முகப் பரீட்சைக்குழு உறுப்பினர்களின் ஒப்பத்துடன் பாடசாலை அறிவித்தல் பலகையிலும் பாடசாலை இணையத்தளத்திலும் அதிபரினால் காட்சிக்கு விடப்படுவதோடு ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இது தனிப்பட்ட முறையில் அறியத்தரப்படமாட்டாது. எனவே இது பற்றி பெற்றோர்/ rl;luPjpahd பாதுகாவலர்கள் விழிப்புடன் இருத்தல் அவசியமானதாகும்.

**10.0 மேன்முறையீடு, எதிர்ப்பைத் தெரிவித்தல்**

**10.1** காட்சிக்கு விடப்பட்ட தற்காலிக அட்டவணையும், காத்திருக்கும் அட்டவணையும் பாடசாலை அறிவித்தல் பலகையிலும் இணையத்தளத்திலும் காட்சிக்கு விடப்பட்டு இரண்டு வாரங்களுக்குள், அட்டவணைகளில் ஏதாவது ஓரிடத்தில் தகைமையற்ற பிள்ளையொன்றின் பெயர் அடங்கியிருப்பின் அது பற்றிய எதிர்ப்பையும் தகைமையிருந்தும் தமது பிள்ளையின் பெயர் பொருத்தமற்ற ஓரிடத்தில் இருப்பின் அது பற்றிய மேன்முறையீட்டினையும் அல்லது இதில் ஏதாவது ஒன்றினை அறிவித்தல் பலகையிலும் இணையத்தளத்திலும் காட்சிக்கு விடப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தயார் செய்து அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். இத்தோடு முகவரியுடன் கூடிய பதிவுத் தபாலுக்கான முத்திரைகள் ஒட்டிய கடிதஉறை ஒன்றையும் அனுப்புதல் வேண்டும். இவ் இரு வாரகால எல்லையின் பின் சமர்ப்பிக்கப்படும் எவ்வித எதிர்ப்புகளும் மேன்முறையீடுகளும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**10.2** எதிர்ப்புகள் சமர்ப்பிக்கப்படுகையில் முழு அட்டவணைக்கும் எதிர்ப்பைத் தெரிவிக்காது பெயர் குறிப்பிட்டு தெளிவாக எதிர்ப்புகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இங்கு எதிர்ப்புக்குள்ளாகும் பிள்ளையின்/ பிள்ளைகளின் பெயர்கள், அழைப்பிலக்கங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பவரின் பெயர், முகவரி, பிள்ளையின் அழைப்பிலக்கம் போன்றவற்றினையும் தமது எதிர்ப்பைச் சுருக்கமாகவும் எழுதி அனுப்புதல் வேண்டும்.

**10.3** மேன்முறையீடுகள், எதிர்ப்புக்கள் பரீட்சிக்கப்படுவதற்காக மேன்முறையீடு, எதிர்ப்பினை பரீட்சிக்கும் குழு ஒன்று நிறுவப்படும். இக்குழு மூலம் எதிர்ப்பினை தெரிவித்தோர் எதிர்ப்புக்குள்ளானோர் மேன்முறையீடு செய்தோர் அனைவரும் வெவ்வேறாக ஆரம்ப நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பித்த ஆவணங்கள் ஊடாக மீண்டும் பரீட்சிக்கப்படுவர். அதேபோல் எதிர்ப்புக்களை பரீட்சிக்கையில் எதிர்ப்புக்குள்ளான பிள்ளையின் பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர் விசாரணைக்கு அழைக்கப்படுமுன் அவர்களுக்கு அதுபற்றிய விளக்கங்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படும்.

**10.4** மேன்முறையீடு, எதிர்ப்பினைப் பரீட்சிக்கும் குழு மூலம் மேன்முறையீடு எதிர்ப்புகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின் தகைமைக்கேற்ப (புள்ளி முன்னுரிமைக்கேற்ப) மேன்முறையீட்டாளர்கள், எதிர்ப்புக்குள்ளானோர், எதிர்ப்பைத் தெரிவித்தோர் என்போரை தற்காலிக பட்டியலில் உரிய இடங்களில் உட்படுத்தி திருத்தப்பட்ட தற்காலிக அட்டவணை தயார் செய்யப்படும்.

**10.5** ஒவ்வொரு வகைக்கும் உரிய திருத்தப்பட்ட தற்காலிக அட்டவணையில் பாடசாலைக்கு அனுமதிக்கக் கூடிய எண்ணிக்கைக்கு ஏற்ப மேலே உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இறுதி அட்டவணை தயார் செய்யப்படும்.

**10.6** தற்காலிக அட்டவணையிலும் இறுதி அட்டவணையிலும் ஏதாவது ஒரு வகையில் தெரிவு செய்ய வேண்டிய எண்ணிக்கையை பூரணமாகும் இறுதி நிலைக்கு உரிய புள்ளிக்குரியவரைத் தெரிவு செய்கையில் சமமாக புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகள் பலர் இருக்கும் சந்தர்ப்பத்தில் பாடசாலைக்குரிய அண்மித்த தூரத்திற்கேற்ப அவர்களை வரிசைப்படுத்தி தெரிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு வகையிலும் வேறு வேறாக புள்ளி பெற்றுக் கொடுத்து அண்மை அடிப்படையில் பாடசாலையினைப் பெற்றுக் கொடுப்பது நியாயமானது என்பதால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பாடசாலைக்கிருக்கும் அண்மைக்கமைய (தூரத்திற்கமைய) வரிசைப்படுத்த வேண்டும். (இது இறுதி ஆவணம் தயாரிக்கப்படும் போது பொருத்தமாக்கிக் கொள்ள வேண்டும்.)

**10.7** மேன்முறையீடுகள், எதிர்ப்புக்கள் பரீட்சிக்கப்பட்டதன் பின் பிள்ளைகளை தெரிவு செய்யும் இறுதி அட்டவணையும் காத்திருப்போரின் அட்டவணையும் எதிர்ப்பை பரீட்சிக்கும் குழு உறுப்பினர்களின் ஒப்பத்துடன் பாடசாலை அறிவித்தல் பலகையிலும் பாடசாலை இணையத்தளத்திலும் காட்சிக்கு விடப்படும்.

**10.8** மேன்முறையீடு, எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட ஏதாவது ஒரு தற்காலிக தேர்வு பற்றி மேன்முறையீடு, எதிர்ப்பை பரீட்சிக்கும் குழு மூலம் வழங்கப்படும் தீர்ப்பு இறுதித் தீர்ப்பாகும். எதிர்ப்புக்குள்ளாகும் பிள்ளையின் பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலருக்கு விசாரணைக்காக உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்தும் எதிர்ப்புப் பரீட்சைக்கு சமூகமளிக்காவிடின் மேன்முறையீடு மற்றும் எதிர்ப்பினை பரீட்சிக்கும் குழுவிற்கு ஒரு மனதான முடிவினை எடுக்கும் அதிகாரம் உண்டு.

**10.9** பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர் மூலம் விண்ணப்பித்த ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு பிள்ளை தெரிவு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர் மூலம் தமது விண்ணப்பப்படிவத்தில் உள்ள பாடசாலை விருப்பு முன்னுரிமைக்கேற்ப முன்னுரிமை கூடிய பாடசாலையைப் பெற்றுக்கொடுத்து தெரிவு செய்யப்பட்ட ஏனைய பாடசாலைகளின் பெயர் அட்டவணைகளிலிருந்து பெயர் நீக்கப்படும்.

**10.10** இதன் பின்பு தெரிவு செய்யப்பட்ட மற்றும் தெரிவு செய்யப்படாத பிள்ளைகளின் பெற்றோருக்கு அதிபரின் கையொப்பம் பதவி இலட்சினையுடன் கூடிய கடிதம் மூலம் இதுபற்றி அறியத் தரப்படும். தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளில் எந்தவொரு பிள்ளையும் தெரிவு செய்யப்படும் திகதி தொடக்கம் 02 வாரங்களுக்குள் பாடசாலைக்கு அனுமதிக்கப்படவில்லை எனின், அப் பிள்ளை பாடசாலைக்கு சேர்கப்படாத பிள்ளையாக கருதி அவ்வெற்றிடம் அவ்விண்ணப்பத்தின் அடுத்தாக உள்ள பிள்ளைக்கு உரித்தாகும்.

**10.11** முதலாவது தரத்திற்காக சேர்த்துக்கொள்ளப்படும் போது பிள்ளையுடன் வருவது கட்டாயமானதாகும்.

**10.12** முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்தல் கால அட்டவணை ஒன்றுக்கு ஏற்ப செயற்படுத்தப்படும். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2021 ஜனவரி மாதத்தின் பாடசாலை தொடங்கும் முதல் வாரத்திலேயே சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**11.0 தெரிவாகாத பிள்ளைகளுக்கு பாடசாலைகள் பெற்றுக் கொடுத்தல்**

பாடசாலையொன்றுக்கும் தெரிவு செய்யப்படாத ஒரு பிள்ளையின் பெற்றோர்/ பாதுகாவலர் தமது பிள்ளைக்கு மாற்றுப் பாடசாலை ஒன்று பெற்றுக் கொள்வதற்காக மாதமொனான்றிற்கு முன்னர் தாம் வசிக்கும் பிரதேச வலயக் கல்விப் பணிப்பாளருக்கு புதிய விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இதன்படி அனைத்து பிள்ளைகளுக்கும் பாடசாலைகளைப் பெற்றுக்கொடுத்தல் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் செயற்படுத்தப்படும்.

**12.0 பிள்ளைகளை அனுமதித்தலின் போது பணமும் வேறு உதவிகளும் பெற்றுக் கொடுப்பதை தடைசெய்தல்**

சகல அரசாங்கப் பாடசாலைகளுக்கும் பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பில் வசதிகள் சேவைக் கட்டணமும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர் கட்டணமும் எல்லா மாணவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்வதற்கு பாடசாலை மூலம் அனுமதி பெற்றிருக்கும் நிதியும் தவிர்ந்த வேறு கட்டணமோ உதவிப் பணங்களோ வேறு பொருட்களோ பாடசாலைக்கோ பாடசாலையுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கோ மூன்றாம் தரப்பினர்களுக்கோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெற்றுக்கொடுத்தல் முற்றாக தடை செய்யப்படுகின்றது. பிள்ளைகளை அனுமதித்ததன் பின்பும் இவ்வாறு பெற்றுக் கொடுக்காதிருத்தல் வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் அது சட்டவிரோத செயலொன்றாவதுடன் தண்டனை பெறக்கூடிய குற்றமும் ஆகும் என்பதனைக் கருத்திற் கொள்க.

இந்த செய்தித்தாள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு விடயம் தொடர்பில் இறுதி தீர்மானம் மேற்கொள்வது செயலாளர் வசமானதாகும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு.**
**2022.06.16**

# கிழக்கின் குரல்

# நியூஸிலாந்து தூதுவர் திருமலை விஜயம்

## பலதரப்புச் சந்திப்புக்களுக்கும் ஏற்பாடு

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

நியூசிலாந்தின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மைக்கேல் ஆப் லெட்டன் உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு திருகோண மலைக்குச் சென்றுள்ளார்.

தனியாருக்குசொந்தமான விமான மூலம் திருகோணமலை சீனக்குடா விமானப் படைத்தளத்தை நேற்று (16) பிற்பகல் சென்றடைந்த நியூஸிலாந் தின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மைக்கேல் ஆப்லெட்டன்,எதிர்வரும் ஓரிரு தினங்கள் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளா தார நெருக்கடி தொடர்பிலும்,குறித்த பிரதேசங்களில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி தொடர்பிலும் உயர்ஸ் தானிகர் பேச்சுவார்த்தை நடாத்த உள்ளார்.

இந்நிலையில், திருகோணமலை சீனக்குடா விமானப்படைத்தளத்துக் குச் சென்ற நியூஸிலாந்தின் உயர்ஸ்தா னிகர் மைக்கேல் ஆப்லெட்டன்,திரு



கோணமலை அலஸ் தோட்டத்தில் அமைந்துள்ள இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்த ஐந்து நியூசிலாந்து பிரஜைகளின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட "காமன் வெல்த்" கல்ல றைகளையும் பார்வையிட்டார்.

திருகோணமலை நகரசபை உறுப் பினர்கள் இடையில் சினேகபூர்வ மான சந்திப்பொன்றும் நகர சபை கேட்போர் கூடத்தில் நேற்று (16) இடம்பெற்றது

இச்சினேகபூர்வ சந்திப்பில் மாவட் டத்தின அரசியல், பொருளாதார நிலைமை தொடர்பில் கலந்துரையா டப்பட்டதுடன், திருகோணமலை மாவட்டத்தில் அடிப்படை பொருளா தாரத்தை ஈட்டக்கூடிய தொழில்களான மீன்பிடி, சுற்றுலா மற்றும் விவசாயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட் டது. மீன்பிடிக்க தேவையான எரி பொருள் தட்டுப்பாடு, இதற்கான உடனடி நடவடிக்கை, இயற்கை உரப் பாவனை, இதனால் ஏற்பட்ட பாதிப் புகள், விவசாயிகள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப் பட்டது.

மேலும் திருகோணமலை மாவட் டத்தின் சுற்றுலா துறையை மேம்ப டுத்துவதற்கான திட்டங்கள் தொடர் பிலும் கலந்துரையாடப்பட்டது டன், திருகோணமலை நகராட்சி மன்றத் தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில், திரு கோணமலை நகராட்சி மன்றத்தின் தவிசாளர் என்.ராஜநாயகம் நகராட்சி மன்றத்தின் உபதலைவர், செயலாளர் மற்றும் வேலை பகுதி அத்தியட்சகர் கள் என பலரும் இதில் கலந்துகொண் டனர்.

# ஆலய ஆடிவேல் உற்சவ விழா குறித்த முக்கிய கூட்டம் ஞாயிற்றுக்கிழமை

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவத்தையொட்டிய ஆலய அதிகாரசபை கூட்டம்

நாளை மறுதினம் (19) ஞாயிற்றுக் கிழமை ஆலய முன்றலில் ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலை மையில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் (11) கொடியேற் றத்துடன் ஆரம்பமாவதாக ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரி வித்தார் .

இவ்வுற்சவம் 18 நாட்கள் நடை பெற்று ஜூலை மாதம் இருபத்தி எட்டாம் (28)ஆம் திகதி தீர்த்த உற்ச வத்துடன் நிறைவடையவுள்ளது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலை யில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநதா தக் குருக்கள் தலைமையில் இவ்வுற் சவம் நடைபெறவுள்ளது.

கொரோனா தாக்கம் காரணமாக கடந்த வருடம் ஆடிவேல் உற்சவம் நடைபெறவில்லை.

இம்முறை, இதனை வெகுசிறப் பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய் யப்பட்டிருப்பதாக ஆலய தலைவர் சுரேஷ் மேலும் தெரிவித்தார்.

நாளை மறுதினம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில், உற்சவம் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட வுள்ளன.

பூஜை உபயகாரர்கள், ஒலி ஒளி, விளக்கு வசதி, போக்குவரத்து வசதி உள்ளிட்ட பல விடயங்கள் இக்கூட் டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவத்தில், பல்லா யிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ளதால்,இதற்கான முன் னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

ஆலயம் சார்பில் அன்னதான குழு ஒன்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள் ளது.இந்த குழுவினரே ஆலயத்தில் நடைபெறும் அனைத்து அன்ன தான நிகழ்வையும் மேற்கொள்வர். இதேவேளை இதற்கு உதவ விரும் புகின்ற பொதுமக்கள் ஆலய நிர் வாகத்தை தொடர்பு கொள்ளுமாறு ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் கேட்டுள்ளார்.

தீர்த்த தினத்தன்று பிதிர்க்கடன் செலுத்துகின்றவர்களுக்கு வசதியாக பத்து சிவாச்சாரியார்களை உள்ள டக்கி பிதிர்க்கடன் நிறைவேற்றும் வேலை முன்னெடுக்கப்படுவதாக வும் அவர் தெரிவித்தார்.

# களுவாஞ்சிகுடியில் எரிபொருளை பெற மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருப்பு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டம் களு வாஞ்சிகுடி நகரில் அமைந்துள்ள எரி பொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நீண்ட நாட்களுக்குப்பின்னர் புதன்கி ழமை (15) மாலை பெற்றோல் வந்த தையடுத்து, பெற்றோல் நிரப்புவதற் காக மக்கள் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இந்நிலையில், அரச உத்தியோ கஸ்த்தர்கள் தனியான ஒரு வரிசை யில் பெற்றோல் நிரப்புவதற்கு



சென்றவேளை ஏனையோர் வாக் குவாதத்தில் ஈடுபட்டனர். இந்நி லையில் கடமையிலிருந்த இரா ணுவத்தினரும், பொலிஸாரும் நில மையைக் கட்டுப் பாடுக்குள் கொண் டுவந்தனர்.

பின்னர் களு வாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி ரி.அபயவிக்கிரம உடன் வருகை தந்து சிறிது நேரம் பெற்றோல் வழங்குவதை இடை நிறுத்தி, நிலமையை சுமுகமாக்கியதும், வரி சைக்கிரமமாக பெற்றோல் வழங் கப்பட்டன.

களுவாஞ்சிகுடி நகரில் அமைந் துள்ள மற்றுமொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வருவதாக அறிந்த மக்கள் அங்கும் வாகனங்களுடன் மிக நீண்ட வரிசை யில் காத்திருந்தனர்.

எனினும் புதன்கிழமை இரவு வரைக்கும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வராததால், மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக் கதாகும்.

# வீதியைவிட்டு கார் விலகியதில் ஒரே குடும்பத்தில் ஆறுபேர் காயம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலைஹொரவ்பொத் தானை பிரதானவீதி சுகததகம பகு தியில் காரொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 6 பேர் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இவ்விபத்து கடந்த புதன்கிழமை (15) அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பொசன் நிகழ்விற்காக அநுராதபு ரம் சென்று மீண்டும் வீடு திரும்பிய போதே கார் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகி, இவ்வனர்த்தம் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த ஒரே குடும் பத்தைச்சேர்ந்த 6 பேரில், மூவர் திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளனர். மற்றைய கணவர் மனைவி பிள்ளை ஆகிய மூவரும் மஹதிவுல் வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பிலான விசாரணை களை மேற்கொண்டு வருவதாகவும் ஹொரவ்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.




# இடிந்து விழும் அபாயத்தில் திருவையாறு - வின்சன் வீதி பாலம்

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் பலரும் பயணம் செய்யும் திருவையாறு பிரதேசத்தையும் வின்சன் வீதியையும் இணைக்கும் பாலம் எந்தநேரமும் இடிந்து விழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரணைமடு நீர்பாசன வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள இப்பாலமானது பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் இப்பாலம் எந்தநேரமும் இடிந்து அபாயகரமான பாலமாக தோற்றம் பெற்றுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் இபாட் திட்டத்தின் கீழ் இரணைமடு குளத்தின் அபிவிருத்தி பணியின் போது அப்பகுதியில் பாலங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. இதன்போது இப்பாலம் புனரமைக்கப்பட்டது. ஆயினும் பாலத்தின் பாதுகாப்பு தொடர்பில் ஆராயப்படாது மேலெழுந்த வகையில் புனரமைப்பு செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.



இப்பாலம் ஆரம்பத்தில் சுண்ணாம்புக்கல்லினைக்கொண்டு அமைக்கப்பட்டது. நீண்ட காலத்திற்கு முன்னர் பாலம் அமைக்கப்பட்டுள்ளமையால் அது படிப்படியாக சேதமடைய ஆரம்பித்து இன்று போக்குவரத்து செய்வதற்கு அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

இப்பாலத்தின் ஊடாக ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்கின்றனர், கனரக வாகனங்கள் உள்ளிட்டவையும் பயணிப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிப்பதுடன், அபாயகரமான நிலையிலேயே உயிரை கையில் பிடித்துகொண்டு பயணங்களை மேற்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருவையாறு பிரதேசத்தையும், வின்சன் வீதியையும் இணைக்கும் குறித்த பாலமானது இரணைமடு குளத்தின் நீர்பாசன வாய்க்காலை கடக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இரணைமடு குளத்திலிருந்து இரண்டாவது முக்கிய பிரயாண பாலமாக அமைந்துள்ள குறித்த பாலத்தினை புனரமைத்து, அச்சமின்றி பயணிக்கும் சூழலை ஏற்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வலிகாமம் வடக்கு இடப்பெயர்வின் 32 ஆவது ஆண்டு நிறைவு

## துர்க்கை அம்மன் ஆலயத்தில் வழிபாடுகள்



பருத்தித்துறை விசேட நிருபர்

வலிகாமம் வடக்கு மக்களின் இடப்பெயர்வின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

வலிவடக்கு பகுதிகள் முழுவதும் விடுவிக்கக்கோரி வழிபாடுகள் இடம்பெற்றதுடன் வழிபாட்டின் நிறைவில் சிதறு தேங்காய் அடிக்கப்பட்டது. வழிபாடுகளில் வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர். 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலிகாமம் வடக்கிலிருந்து பொதுமக்கள் வெளியேற்றப்பட்டு 32 வருடங்கள் நிறைவுறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறி பாடசாலைகளில் சொற்பொழிவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும் நடைபெற்று வருகின்றன.

புத்தூர் ஈஸ்வரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி பிரபா செல்வரூபன் தலைமையில் சொற்பொழிவு இடம்பெறுகிறது.

நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து,' நாவலரின் கல்வி மரபே இன்றைய தேவை' எனுந் தொனிப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதனின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

25 ஆவது சொற்பொழிவு ஏழாலை கண்ணகை அம்பாள் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இன்று மாலை 03.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கிரிஜா பத்மராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து,' நாவலரின் வாக்கும் வாழ்வும்' எனுந் தொனிப்பொருளில் சைவப்புலவர் ச.முகுந்தனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்த சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும். சைவப்புலவர் செ.த. குமரன் 'நாயன்மார் காட்டிய நன்நெறிகள்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

(அ.கனகசூரியர்)



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த காணி உத்தியோகஸ்தர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, தாங்கள் எதிர்கொள்ளுகின்ற தொழில்சார் சவால்கள் தொடர்பாக கலந்துரையாடினர். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

# சாவகச்சேரி ஆதார மருத்துவமனை தாதிக்கு கொலைமிரட்டல்

யாழ்.விசேட நிருபர், சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் பெண் தாதி ஒருவருக்கு இரவுக் கடமையிலிருந்த போது தொலைபேசியில் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இரு வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நிர்வாக மட்ட விசாரணையை முன்னெடுத்து அறிக்கை வழங்குமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவமனை அத்தியட்சகருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், சாவகச்சேரி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சாவகச்சேரி மருத்துவமனையில் பணியாற்றும் பெண் தாதி உத்தியோகத்தர் கடந்த புதன்கிழமை (ஜூன் 8) நள்ளிரவு கடமையில் ஈடுபட்டிருந்த போது தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அது தொடர்பில் மருத்துவமனை அத்தியட்சகரிடம் முறைப்பாட்டை வழங்கிய பெண் தாதி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

சம்பவத்தையடுத்து அச்சுறுத்தியவரும் அதே மருத்துவமனையில் கடமையாற்றும் ஆண் தாதி உத்தியோகத்தர் என பொலிஸ் புலன் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து சம்பவம் தொடர்பில் அறிக்கையளிக்குமாறு சாவகச்சேரி மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகருக்கு பணித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# பெண்ணை தாக்கி சங்கிலி அபகரிப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி திருவையாறு பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த நபர் ஒருவர் வீட்டிலிருந்த பெண்ணை தாக்கி சங்கிலியை அறுத்து சென்றுள்ளார். நேற்றைய தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்றைய தினம் சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்குள் நுழைந்த நபர் வீட்டிலிருந்த பெண்ணிடம் விலாசம் ஒன்றை காண்பித்து விசாரித்துள்ளார்.

பின்னர் வீட்டிலிருந்து வெளியேறுவதுபோல் சென்றுவிட்டு பின்னர் திரும்பி ஓடிவந்து பெண் அணிந்திருந்த 2 பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியுள்ளார்.

இதன்போது பெண் சங்கிலியை அறுக்க விடாது தடுத்த போது பெண்ணை மூர்க்கத்தனமாக தாக்கிவிட்டு தப்பி ஓடியுள்ளார். இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் - கொழும்பு விசேட புகையிரத சேவை

யாழ்.விசேட நிருபர்

பொருளாதார நெருக்கடியினை கருத்திற்கொண்டு யாழ்ப்பாணம் கொழும்பு விசேட புகையிரத சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளதாக யாழ்ப்பாண புகையிரத நிலைய பிரதம புகையிரத நிலைய அதிபர் தி.பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து கல்கிசையிலிருந்து காங்கேசன்துறைக்கு ஒரு இரவு நகர் சேர் கடுகதி புகையிரதமொன்று சேவையில் ஈடுபடவுள்ளது. இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கல்கிசையில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு அங்கிருந்து வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய புகையிரத நிலையங்களில் நிறுத்தப்பட்டு அம்பலங்கோட, பொல்காவலை, குருநாகல், அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி நிலையங்களில் நிறுத்தப்பட்டு, யாழ்ப்பாணத்தை காலை 5.25 மணிக்கு வந்தடையும். பின்னர் அங்கிருந்து 5.30 மணிக்கு புறப்பட்டு கோண்டாவில், சுன்னாகம், காங்கேசந்துறையை சென்றடையும்.

மீண்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் காங்கேசன்துறையிலிருந்து இரவு 10 மணிக்கு புறப்



பட்டு சுன்னாகம், கோண்டாவில் ஊடாக இரவு 10.25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து. 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், குருநாகல், கொழும்பு, கம்பஹா, மருதானை சென்றடைந்து அங்கிருந்து பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை தெஹிவளை, கல்கிசையை சென்றடையவுள்ளது.

புகையிரதத்தின் ஒரு வழி கட்டணமாக நகர் சேர் கடுகதிக்குரிய கட்டணமாக 2,800 ரூபா அறவிடப்படவுள்ளது. இதற்கான முன்பதிவுகள் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலும் ஏனைய முன்பதிவுகளை மேற்கொள்ளக்கூடிய புகையிரத நிலையங்களிலும் நீங்கள் மேற்கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# திருடப்பட்ட கட்டடப் பொருட்கள் மீட்பு

கரவெட்டி தினகரன் நிருபர்

கோண்டாவில் பகுதியில் திருடப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருட்கள் கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் கோண்டாவில் பகுதியில் ஒப்பந்தகாரரினால் ஒருவர் வீடொன்றில் வேலை செய்யப்பட்டுக் கொண்டிருந்த போது வீட்டில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான நில மாபிள்கள், கழிவறைக்கு பயன்படுத்தும் மாபிள் உபகரணங்கள், மின் மோட்டார் மற்றும் மின் வயர்கள், இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளடங்கலாக சுமார் 20 இலட்சம் ரூபா பொருட்கள் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. துரிதமாக செயற்பட்ட கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்துள்ளதோடு திருடப்பட்ட பொருட்களையும் மீட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணம் பிரதான வீதியில் விபத்து; பெண்கள் படுகாயம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இரு பெண்களை வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாக்கி விட்டு தப்பி சென்றுள்ளது.

யாழ்.பிரதான வீதியில், மார்ட்டின் வீதி சந்திக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் பெண்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை , பின்னால் மிக வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் அவர்களை மோதி தள்ளி விட்டு, வேகமாக அங்கிருந்து தப்பியோடியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். காயமடைந்த இரு பெண்களையும் மீட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# INVITATION FOR BIDS (IFB)

## MARITIMEPATTU PRADESHIYA SABHA, MULLAITIVU DISTRICT

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER : P163305

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP) and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Reconstruction of Koddaikkerny Pillaiyar Kovil Road (Stage II) and Construction of Public Market Center in Mulliyawalai.**

02. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Maritimepattu Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Reconstruction of Koddaikkerny Pillaiyar Kovil Road (Stage II) and Construction of Public Market Center in Mulliyawalai** as described below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period | Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 01 | **LDSP/NP/MU/ MPPS/2021/01** | **Reconstruction of Koddaikkerny Pillaiyar Kovil Road (Stage II)** | 2.607 | C8 | 98 Days | Rs. 40,000.00 |
| 02 | **LDSP/NP/MU/ MPPS/2021/04** | **Construction of Public Market Center in Mulliyawalai** | 13.298 | C6 | 140 Days | Rs. 200,000.00 |

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction and Building Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

06. Interested bidders may obtain further information from **Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Maritimepattu, Mullaitivu** (T.P No: 0243243542, Fax No: 0212290001) and inspect the bidding documents at the address given below from **17th June 2022** until **14th July 2022** from **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Chairman, Maritimepattu Pradeshiya Sabha, Maritimepattu, Mullaitivu** from **17th June 2022 until 14th July 2022** from **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Four Thousand Rupees (Rs.4,000.00).** The method of payment will be by cash.

08. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Maritimepattu, Mullaitivu** at or before **14.00 Hrs on 15th July 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

09. Bids shall be valid up to **16th September 2022 & 30th September 2022 respectively.** All bids shall be accompanied by a Bid-Security for the amounts as mentioned in the above Table. Bid Security shall be valid up to **14th October 2022 & 28th October 2022 respectively.**

10. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **08th July 2022 at Maritimepattu Pradeshiya Sabha, Maritimepattu, Mullaitivu-1.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Maritimepattu Pradeshiya Sabha,**
**Maritimepattu,**
**Mullaitivu.**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை - கண்டி

## மின்சார அமைப்பு பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் — 2022/ 2023

கண்டி தேசிய வைத்தியசாலையின் 2022/2023ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை | தரம் | கேள்விப் பிணை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. மின்சார அமைப்பு பராமரிப்பு மற்றும் சேவை விடயங்கள் (கால எல்லை 2022 ஓகஸ்ட் 15 முதல் 2023 ஓகஸ்ட் 14ம் திகதி வரை) | EM-04 | ரூ. 100,000.00 | ரூ. 2,000.00 |

**கேள்விதாரர்கள் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

1. நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) EM-04 அல்லது மேற்பட்ட தரங்களுக்காக பதிவு செய்திருத்தல் மற்றும் 2022 ஆண்டிற்காக பதிவு செய்திருத்தல்.
2. இலங்கை நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் சங்கத்தில் (NCASL) அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.
3. பொது வைத்தியசாலை அல்லது அரச நிறுவனமொன்றில் கீழ்க்காணும் வேலைகளுடன் சம்பந்தப்பட்ட பராமரிப்பு மற்றும் சேவை விடயங்களை நடத்திச் செல்லல் பற்றிய 05 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் பற்றிய சான்றிதழ்.
4. வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி.
5. 05 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விப் பத்திரங்களுக்காக இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ் (PCA3)

2022.06.20ம் திகதி மு.ப. 9.00 முதல் 2022.07.11ம் திகதி பி.ப. 2.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத ரூபா 2,000.00 தொகையை கண்டி தேசிய வைத்தியசாலையின் காசாளர் அலுவலகத்திற்கு செலுத்திய பின்பு பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை தலைமையகத்திற்கு சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இரு பிரதிகளுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள், கண்டி தேசிய வைத்தியாசலையின் காசாளர் அலுவலகத்திற்கு கேள்விப் பிணைக்காக காசு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் இருந்து அல்லது காப்புறுதி நிறுவுனத்திலிருந்து பணிப்பாளர், தேசிய வைத்தியசாலை, கண்டி, பெயரில் பெற்றுக் கொண்ட ரூ. 100,000.00 பெறுமதியான 2022.10.30ம் திகதி வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணையுடன் வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகளின் இடது பக்கம் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு, இரு உறைகளையும் தனி உறையில் இட்டு 2022.07.12ம் திகதி மு.ப. 10.30 இற்கு முன்பு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது இவ் வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் '2022/23 ஆண்டிற்கான மின் பராமரிப்பு விடயங்களுக்காக கேள்வி கோரல்' என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

2022.07.12ம் திகதி மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளைக்காக கேள்விதாரரின் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்வி சம்பந்தமாக வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்களுக்கு கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரை அழையுங்கள் (081-2233337 முதல் 42 வரை)

**மருத்துவர் இரேஷா பெர்னாண்டோ**
**தலைவர், பெறுகைக் குழு**
**தேசிய வைத்தியசாலை,**
**கண்டி.**

# INVITATION FOR BIDS (IFB)

## PACHCHILLAIPALLI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER : P163305

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP) and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Construction of Market Building at Pallai Town (Stage I).**

02. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Pachchillaipalli Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Construction of Market Building at Pallai Town (Stage I)** as described below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/KN/PAPS/2022/01 | **Construction of Market Building at Pallai Town (Stage I)** | 9.83 | C7 | 84 Days |

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Building Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

06. Interested bidders may obtain further information from **Chairman, Pachchillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai,** (T.P No: 0212050037, Fax No: 0212050036) and inspect the bidding documents at the address given below from **17th June 2022** until **14th July 2022** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Chairman, Pachchillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai from 17th June 2022** until **14th July 2022** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees (Rs. 2,000.00).** The method of payment will be by cash.

08. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Pachchillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai** at or before **14.00 Hrs on 15th July 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

09. Bids shall be valid up to **30th September 2022.** All bids shall be accompanied by a Bid Security of Rs.150,000.00. Bid Security shall be valid up to **28th October 2022.**

10. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **08th July 2022** at **Pachchillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Pachchillaipalli Pradeshiya Sabha,**
**A9 Road,**
**Pallai.**




# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ DR/49/ 2022 | கொழும்பு-06, கிருலப்பனை, கிருலப்பனை வீடமைப்புத் திட்டத்திலுள்ள வடிகாலமைப்பு முறைமையின் திருத்தவேலைகள் | 5,600.00 | 104,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C6 மற்றும் C7 CIDA தரத்தைக் கொண்ட மழை நீர் அப்புறப்படுத்துதல் மற்றும் காணி வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 2 | ME/ME/ DN/44/ 2022 | கொழும்பு-15, (அளுத் மாவத்தை முதல் முத்துவெல்ல மாவத்தை வரை) சென் ஜேம்ஸ் வீதியின் உத்தேச மழை நீர் வடிகாலமைப்பு முறைமை | 5,600.00 | 464,500.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C5 மற்றும் C4 CIDA தரத்தைக் கொண்ட மழை நீர் அப்புறப்படுத்துதல் மற்றும் காணி வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 3 | ME/ME/ DN/21/ 2022 | கொழும்பு-15, பார்ம் வீதி, மட்டக்குளி, சென் ஜூட் ஒழுங்கையில் மழை நீர் வடிகாலமைப்பை நிர்மாணித்தல் | 5,600.00 | 342,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C6 மற்றும் C5 CIDA தரத்தைக் கொண்ட மழை நீர் அப்புறப்படுத்துதல் மற்றும் காணி வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
   அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
   ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
   - வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
   - வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.
   1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
   2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை 2022-07-11ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022-07-11ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.02.07ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.01.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-07-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2022-07-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# பெறுகை அறிவித்தல்

## வளிமண்டலவியல் திணைக்களம்

2022/23 ஆண்டிற்காக எமது திணைக்களத்தின் பின்வரும் பெறுகைக்காக 2022 ஜூன் 20 அன்று மு.ப. 9.00 முதல் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- **02/ 2022 - வளிமண்டலவியல் உபகரணங்களை வழங்கல்**

2022 ஜூன் 20 முதல் 2022 ஜூலை 12 வரை வெள்ளிக்கிழமை மற்றும் வார இறுதி நாட்கள் தவிர்ந்த ஏனைய வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப்பிரிவில் மீளளிக்கப்படாத ரூபா 2,000.00 இற்கான கட்டணத்தைச் செலுத்தி, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் இதற்கான பெறுகைப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2022 ஜூலை 14 அன்று பி.ப. 2.00 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு, உடனடியாக அவை திறக்கப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 011-2684045 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**வளிமண்டலவியல் திணைக்களம்,**
**பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-07.**

2022.06.17

---

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2022.03.16இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ் வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது.

1. பிரசித்த நொத்தாரிசு எஸ்.எச். ரணவக்க அத்தாட்சிப்படுத்திய 2007.05.16ஆம் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2313 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எஸ்.ஆர். டி சில்வா அத்தாட்சிப்படுத்திய 2014.06.06ஆம் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4739, 2016.09.20ஆம் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4915 ஆகியவற்றின் பேரில் இல. 25/3, குணசேகர காடன்ஸ், நாவல வீதி, ராஜகிரிய என்னும் முகவரியிலுள்ள ஹன்சா டிராவல்ஸ் அன்ட் ருவஸ் நிறுவனத்தார் பெற்றுக்கொண்ட இலங்கை வங்கி வீட்டுக் கடன் ரூ. 7,000,000.00 (ஏழு மில்லியன் ரூபாய் மட்டும்) முதலாவது நிரந்தர மேலதிகப் பற்று ரூ. 7,000,000.00 (ஏழு மில்லயன் ரூபாய் மட்டும்) இரண்டாவது நிரந்தர மேலதிகப் பற்று ரூ.7,000,000.00 (ஏழு மில்லியன் ரூபாய் மட்டும்) என்பவற்றின்மீது 2012.02.09 வரையான வட்டியும் முதலுமாக முறையே ரூ. 3,624,337.59 மூன்று மில்லியன் அறுநூற்று இருபத்து நான்காயிரத்து முந்நூற்று முபத்தேழு ரூபாய் ஐம்பத்தொன்பது சதம்) ரூ. 12,374,082.19 (பன்னிரண்டு மில்லியன் முந்நூற்று எழுபத்து நான்காயிரத்து எண்பத்திரண்டு ரூபாய் பத்தொன்பது சதம்) ரூ, 12,056,876.71 (பன்னிரண்டு மில்லியன் ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்று எழுபத்தாறு ரூபாய் ஐம்பத்தொன்பது சதம்) போன்ற தொகைகளும் அத்துடன் குறித்த இலங்கை வங்கி வீட்டுக் கடன் ரூ. 2,665,744.67, முதலாவது நிரந்தர மேலதிகப் பற்று ரூ. 7,000,000,00, இரண்டாவது நிரந்தர மேலதிகப் பற்று ரூ. 7,000,000.00 என்பவற்றின் முதல் நிலுவை மீது ஆண்டுக்கு முறையே பன்னிரண்டு (12.00%), பதினேழு (17.00%), பதினாறு (16.00%) என்ற வீதத்தில் 2022.02.10ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை திரட்டப்படவேண்டிய வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளது.
2. மேற்குறிப்பிட்ட 2313, 4739, 4915 ஆகிய இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின்பேரில் வருமதியாகவுள்ள 28,055,296.49 ரூபாயையும் (இருபத்தெட்டு மில்லியன் ஐம்பத்தைந்தாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு ரூபாய் நாற்பத்தொன்பது சதம்) அத்துடன் 2022.02.10ஆம் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கித் தலைநகரக் கிளையின் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வைப் பிரிவின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, மஹரகம கொழும்பு - மஹரகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 525 - தலப்பத்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் 263/1, தலப்பத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டு தலப்பத்பிட்டியவில் அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் என். அபேசிறி தயாரித்த 2004 நவம்பர் 08ஆம் திகதிய 2004/97 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 01 என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி **வடக்கில்** 263/2, தலப்பத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கட்டடங்களையும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் ஓ.எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.28ஆம் திகதியிட்ட 566ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1C எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) **கிழக்கில்** 15 அடி அகலங்கொண்ட பாதையையும் (குறித்த 566ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1E எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) **தெற்கில்** 15 அடி அகலங்கொண்ட பாதையையும் (குறித்த 566ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1E எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) 263/1A, தலப்பத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கட்டடங்களையும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு. டி. அபேசிங்க தயாரித்த 1994.10.25ஆம் திகதியிட்ட 2378A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு 1C எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) வடிகால் அமைப்பையும் முன்னர் என்.ஈ. பெரேராவுக்கும் இப்போது அல்விசுக்கும் சொந்தமாகவுள்ள காணியையும் **மேற்கில்** உரிமம் பெற்ற நில அளவையாளர் ஓ.எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.27ஆம் திகதியிட்ட 565ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு இருபது தசம் ஐந்து ஒன்று பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே20.51) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஒன்று ஒன்பது ஹெக்டயர் (0.0519 ஹெக்டயர்) பரப்பளவையும் கொண்டுள்ளது.

காணித்துண்டு 1 என்று அடையாளப்படுத்தப்பட்ட குறித்த காணியானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்

263/1, தலப்பத்பிட்டிய கோவில் வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டு தலப்பத்பிட்டியவில் அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் 566ஆம் இலக்க வரைபடத்தில் விபரக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 1D என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி வடக்கில் காணித்துண்டு I C ஐயும் கிழக்கில் காணித்துண்டு 1E ஐயும் (15 அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்) தெற்கில் காணித்துண்டு 1E ஐயும் ஜி.டி. நந்தவதி என்பவருக்கும் திரு. பெரேராவின் வாரிசுகளுக்கும் சொந்தமான ஆதனத்தையும் மேற்கில் அதே காணியின் காணித்துண்டு 2ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இருபது தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே20.10) பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/75 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

1. மேற்குறிப்பிட்டவாறு தலப்பத்பிட்டியவில் அமைந்துள்ள "கொடபொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் ஓ.எஸ். ரணசிங்க தயாரித்த 1982.09.28ஆம் திகதியிட்ட 566ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 1E (15 அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி **வடக்கில்** காணித்துண்டு 1A, 1D என்பவற்றையும் **கிழக்கில்** எம். அல்பிரட் பெரேரா என்பவரின் ஆதனத்தையும் **தெற்கில்** ஜி.டி சுமணபால என்பவருக்குச் சொந்தமான ஆதனத்தையும் உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.சி. விக்கிரமசிங்க தயாரித்த 1974.08.17ஆம் திகதியிட்ட 1604ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 04ஐயும் ஜி.டி. நந்தவதீ என்பவருக்கும் திரு. பெரேராவின் வாரிசுகளுக்கும் சொந்தமான ஆதனத்தையும் **மேற்கில்** காணித்துண்டுகள் 1D, 1C, 1B என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 566ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினொன்று தசம் ஐந்து ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே11.55) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/77 என்ற இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
2. மேற்குறிப்பிட்டவாறு தலப்பத்பிட்டியவில் அமைந்துள்ள "மதட்டியகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் சி.சி. விக்கிரமசிங்க தயாரித்த 1974.08.17ஆம் திகதியிட்ட 1604ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 04 (10 அடி அகலங்கொண்ட பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி **வடக்கில்** ஜி.டி ஜினரிஸ் என்பவருக்குச் சொந்தமான காணியையும் **கிழக்கில்** காணித்துண்டுகள் 1, 2, 3 என்பவற்றையும் **தெற்கில்** கிராமசபை வீதியையும் (தற்போது தலப்பத்பிட்டிய கோவில் வீதி என அழைக்கப்படுகிறது) **மேற்கில்** அதே காணியின் ஒரு பகுதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 1604ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே9.60) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் B 199/76 என்ற இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.**

**பெயர்: டபிள்யு.எம்.எச்.ஏ.எஸ்.எஸ்.பி. ஏக்கநாயக்க**
**பதவி: முதுநிலை முகாமையாளர்**
**அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை**

**இலங்கை வங்கி**
**தலைநகரக் கிளை**

---

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான வளாகங்களுக்கு பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக் கோரல் – 2022/ 2023

கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்த, இல. 09 இல் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான, கொழும்பு-07, நிதஹஸ் மாவத்த, இல. 33இல் அமைந்துள்ள, பழைய விடுதி, விளையாட்டு சங்க கட்டிடம், டொரிங்டன் மைதானம், இல. 100/10 இல் அமைந்துள்ள ஹொக்கி பார்வையாளர் அரங்கு, இல. 100/08 இல் அமைந்துள்ள ரீட் அவெனியூ விடுதி, ரீட் அவெனியூ விடுதிக்கு அருகில் வாகன நிறுத்துமிடம், பெலிஅத்த டி.ஏ. ராஜபக்ஷ விளையாட்டு கட்டிடத் தொகுதி, மாத்தறை கொட்டவில மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதி, பொலன்னறுவ மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதி, களுத்துறை மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதி, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதி, இரத்தினபுரி மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி, மாத்தளை மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதி, பிங்கிரிய மாவட்ட விளையாட்டு கட்டிட தொகுதி, காலி மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி மற்றும் துண்வன்ன விளையாட்டு கட்டிடத் தொகுதி ஆகிய இடங்களுக்கு பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்வதற்காக தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விளையாட்டு அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ. 7,500.00 தொகையை செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் 2022.06.18 முதல் 2022.07.07 வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00) அலுவலக நாட்களில் குறித்த பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. சகல கேள்விதாரர்களும் இலங்கை மத்திய வங்கியில் அனுமதித்த எந்த வர்த்தக வங்கியிலிருந்தும், பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பெயரில் பெற்றுக்கொண்ட ரூ 200,000.00 பெறுமதியான கேள்விப் பிணையொன்றை (பிணைமுறி) இணைப்பு 01 இல் குறிப்பிடப்படும் மாதிரிக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும். இக்கேள்விப் பிணை, 2022.07.08 முதல் 2022.11.05 வரை 119 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
04. குறித்த மாதிரிப் பத்திரத்தில் சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அக்கேள்விப் பத்திரங்கள் 2022.07.08 மு.ப. 11.00 வரை ஏற்கப்படுவதுடன், பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள் பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் விளையாட்டு அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் (பெறுகை) இன் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
05. "கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் பாதுகாப்பு சேவையை நடத்திச் செல்லல் 2022 இற்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவது 2022.07.08ம் திகதி மு.ப. 11.30 இற்கு ஆவதுடன், அத் தினத்திற்கு உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்படும் பிரதிநிதியொருவருக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்.**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-07.**

**தொ.பே. இல: : 011-2697934**
**பெக்ஸ் : 011-2695822**

---

# மக்கள் வங்கி

**1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம்.**

1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் ……………………திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டி.எஸ். லோரன்ஸ் அவர்களால் 31.10.2018 ம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம 12730 மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ.எஸ். லோரன்ஸ் அவர்களால் 31.10.2018 ம் திகதி எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இலக்கம் 12732 கொண்ட முறிகளின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் பலப்பிட்டிய லியனகே ஆனந்த சாந்தசிரி என்பவர் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட முறிகளின் கீழ் தற்போது ரூபாய் நாற்பத்தி ஏழு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து நூற்றி பதினொரு ரூபாய் சதம் பண்ணிரண்டு (ரூபாய் 4,722,111.12) மற்றும் ரூபாய் ஐம்பது இலட்சம் ரூபாய் 5,000,000.00) பணத்தொகைகள் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் ரூபாய் நாற்பத்தி ஏழு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து நூற்றி பதினொரு ரூபாய் சதம் பண்ணிரண்டு (ரூபாய் 4,722,111.12) பணத்தொகைக்காக 01.01.2019 ம் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 19% வட்டியுடன் மற்றும் ரூபாய் ஐந்து இலட்சத்தி தொன்னூற்றி மூவாயிரத்து எழுநூற்றி ஐம்பது (ரூபாய் 593,750.00) பணத்தொகைக்காக 01.12.2018 ம் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 20.5% வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் "29L" பிரிவின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய பணங்களும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட ரூபாய் நாற்பத்தி ஏழு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து நூற்றி பதினொரு ரூபாய் சதம் பண்ணிரண்டு (ரூபாய் 4,722,111.12) மற்றும் ரூபாய் ஐம்பது இலட்சம் (ரூபாய் 5,000,000.00) பணத்தொகைகளை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம என்பவர்களினால் குறிப்பிட்ட இலக்கம் 12730 மற்றும் 12732 கொண்ட முறிகளின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம் ,கம்பஹா மாவட்டம், சியனே கோரளை அதிகாரி பத்து பியகம பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பியகம பிரதேச சபை எல்லைக்குள் 271B மாகொல தெற்கு பஹல கிராம சேவையாளர் பிரிவில் மாகொல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹவத்த எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சமரவிக்ரம அவர்களால் 09.02.1994ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 39/1994 எனும் வரைபடத்தில் காணப்படும் பிரிவினை செய்யப்பட்ட 1A எனப்படும் காணித்துண்டின் எல்லைகளாக வடக்கில் இலக்கம் 66/1990 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் 1 கொண்ட காணித்துண்டின் மிகுதிப்பகுதியும் கிழக்கில் இலக்கம் 66/1990 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் 2 கொண்ட காணித்துண்டும் தெற்கில் இலக்கம் 178/1985 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் 1 கொண்ட காணித்துண்டும் மற்றும் இலக்கம் 66/1990 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் 3 கொண்ட காணித்துண்டும் (10 அடி அகலமான பாதை) மற்றும் மேற்கில் தற்போது என்.ஜே. பெரேராவின் காணியும் எல்லைகளாக அமைந்த பதினைந்து பேர்ச்சஸ் (00ஏ.00றூ.15பே) விசாலமான காணியும் அதற்குறப்பட்ட மரங்கள் பயிர்ச்செய்கைகள் கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் இலக்கம் N 548/2 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பிரதேச முகாமையாளர்**
**கம்பஹா**

**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமை அலுவலகம் கம்பஹா**
**இல. 131, கண்டி வீதி, பெலும்மஹர,**
**முதுன்கொடை.**

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ.எஸ். லோரன்ஸ் அவர்களால் 31.10.2018ம் திகதி எழுதி அத்தாட்சிபபடுத்தப்பட்ட இலக்கம் 12730 மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ.எஸ். லோரன்ஸ் அவர்களால் 31.10.2018ம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 12732 கொண்ட முறிகளின் பிரகாரம் ஈட்டு முறிகளின் பிரகாரம் ஆதனத்தின் விபரங்கள் சரிபார்க்கப்பட்டது.

**மக்கள் வங்கி,**
**பிரதேச தலைமை அலுவலகம் கம்பஹா,**
**இல. 131, கண்டி வீதி, பெலும்மஹர,**
**முதுன்கொடை.**

**சட்ட அலுவலர்**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

---

## பிழைத் திருத்தம்

**துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

2022 ஜூன் 13ம் திகதி தினகரன் பத்திரிகையின் 07ஆம் பக்கத்தில் மேற்படி தலைப்பின் கீழ் பிரசுரமான அறிவித்தலில் தவறுதலாக துறைமுக அதிகார சபை இலச்சினை பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த இலச்சினை அரச இலச்சினையாக அமைதல் வேண்டும் என்பதை தயவுடன் கவனிக்கவும்.

**செயலாளர்,**
**துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு- 01.**

---

எனது இல - **BD/BD/LND/3/5/11**

# காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 7வது பிரிவின் கீழான அறிவித்தல்

காணி கையகப்படுத்தல் சட்டத்தில் அரசாங்கத்திற்கு கையகப்படுத்தப்பட்டுள்ள கீழுள்ள காணிக்கு குறித்த சட்ட ஏற்பாடுகளுக்கமைய உரித்து மற்றும் இழப்பீட்டு பரிசீலனை 2022 ஆண்டு 06 மாதம் 15ஆந் திகதி பதுளை பிரதேச செயலகத்தில் என்னால் நடாத்தப்படுகின்றது என்பதை இத்தால் பொது மக்கள் அறிவிக்கின்றேன்.

குறித்த காணியோடு தொடர்புடையவர்கள் குறித்த பரிசீலனைக்காக முன் நிலையாக வேண்டும். மேலதிக தகவல்களுக்கு 2276/57 இலக்க மற்றும் 2022/04/22 திகதி வெளியிடப்பட்ட அரச அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

- ***பிரதேச செயலாளர் பிரிவு*** : பதுளை
- ***ஆரம்ப வரைபட இல.*** :
  இ.கி.வ. 170/மேலதிக 62 தாள் இல. 57
- ***துண்டுகளின் எண்ணிக்கை*** : 01
- ***முழு காணியின் விஸ்தீரணம்*** :
  0.0019 ஹெக்டேயர்
- ***காணி அமைந்துள்ள கிராமம்/ கிராமங்கள்*** : வேதிகுணே

**பிரதேச செயலாளர்**

**2022 ஆண்டு 06 மாதம் 09 ஆம் திகதி பதுளை பிரதேச செயலகத்தில்**

---

**பெயர் மாற்றம்**

சம்மாந்துறை 08, லேக் ரோட், இல. 12/1B ஐச் சேர்ந்த முகம்மது சமூன் முகம்மது இர்ஷாட் ஆகிய நான் எனது பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயரை முகம்மட் சமூன் முகம்மட் இர்ஷாட் என மாற்றம் செய்வதாகவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பயன்படுத்துவதாகவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

**முகம்மட் சமூன் முகம்மட் இர்ஷாட்**

---

**பெயர் மாற்றம்**

சம்மாந்துறை, லேக் ரோட், இல. 12/1B ஐச் சேர்ந்த முகம்மது சமூன் முகம்மது நௌஷாட் ஆகிய நான் எனது பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயரை அகமட் லெப்பை முகம்மட் சமூன் முகம்மட் நௌஷாட் என மாற்றம் செய்கிறேன் எனவும். இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பாவிப்பேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**அகமட் லெப்பை முகம்மட் சமூன் முகம்மட் நௌஷாட்**

---

**பெயர் மாற்றம்**

இல. 313/7, ஜாமியா நகர் முள்ளிப்பொத்தனை எனும் முகவரியைச் சேர்ந்த **கான் மொஹெமட் ஹாரூன் பீபி** ஆகிய நான் அறியத்தருவது எனது பிறப்பு பதிவில் மட்டும் **கான் மொஹெமட் ஹாரூன் பீபி** என்றும் எனது திருமணப்பதிவு, பிள்ளைகளின் பிறப்பு பதிவு என்பவற்றில் எனது வீட்டுப் பெயரான **ஜெஸ்மின்** என பதிவு செய்யப்பட்டுள்ளதால் எனது பெயரை **கான் மொஹெமட் ஜெஸ்மின்** என மாற்றம் செய்துள்ளேன் என்றும் இனிவரும் காலங்களில் எனது பெயராக இதனையே பாவிப்பேன் என்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களும் அறியத்தருகின்றேன்.

**K.M. ஜெஸ்மின்**

---

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தோப்பூர் கிராமத்தைப் பிறப்பிடமாகவும், செல்வநகர்-9 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நஜிமுத்தீன் முஹம்மது இப்ஸான் ஆகிய நான் எனது பெயரை நஜிமுத்தீன் முஹம்மது இர்ஸாத் என பெயர் மாற்றிக் கொண்டேன். இனிமேல் சகல தஸ்தாவேஜுகளிலும், ஆவணங்களிலும் இப்பெயரையே குறிப்பிடுவேன் என்பதை ஸ்ரீ லங்கா குடியரசுக்கும், பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**நஜிமுத்தீன் முஹம்மது இர்ஸாத்**

---

# அறிவித்தல்

## மக்கள் வங்கி

### நுகேகொட கிளை ஏல விற்பனையாளர் மாற்றம்

இல,967, மில்லகஹவத்த பமுனுவ, மஹரகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. கலாதுவாவ லேகம்கே இந்த்ராநந்த என்பவரால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் ஏல விற்பனைக்கான தீர்மானம் 2009.06.30ஆம் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பதோடு அத்தகைய தீர்மானம் 2009.08.21ஆம் திகதியுடைய வர்த்தமானியிலும் மற்றும் 2009.10.15ஆம் திகதியுடைய டெய்லி நிவ்ஸ் மற்றும் தினமின பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டது. அத்தகைய தீர்மானத்தில் உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திரு. ஏ.எஸ்.லியனகே என்பவர் ஏல விற்பனையாளராக பெயரிடப்பட்டிருந்தார். 2014.11.28 ஆம் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் திரு.ஏ.எஸ். லியனகே என்ற ஏல விற்பனையாளருக்குப் பதிலாக உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திரு.ஈ.இர்வின் பெரேரா என்பவரை நியமிப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமை அலுவலகம்**
**கொழும்பு வெளிப்பிராந்தியம்**
**இல.177, ஹய்லெவல் வீதி,**
**நுகேகொட**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

---

afc

## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.03.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 28.06.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
**722, கோட்டை வீதிஇராஜகிரிய**
**28.06.2022**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
**எலாயன்ஸ் பினான்ஸ்**
கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

---

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# யாழில் பரதக்கலையின் மரபை பேணி பாதுகாக்க அயராது பாடுபடும்

## நுண்கலை போதனாசிரியர் பவித்திரா வசந்த ரூபன்



மானிப்பாய் பவித்திரா வசந்த ரூபன் யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பிரிவில் போதனாசிரியராக கடமையாற்றி வருபவர். அரசினால் நடத்தப்படும் நடனப்போட்டிகளில் பங்கேற்று முதல் பரிசுகள் பல பெற்றவர். 2010 ஆம் ஆண்டு அகில இலங்கை மட்டத்தில் நாட்டியமயில் போட்டியில் முதல் இடத்தையும் பட்டத்தையும் பெற்று யாழ். மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். 2008 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்றுவிப்பாளர், கலாவித்தகர் பட்டம் பெற்றதோடு முதுகலைமாணி பட்டப்பின் படிப்பையும் நிறைவு செய்துள்ளார். 2021 இல் வட மாகாண இளம் வித்தகர் விருது, பாராட்டுக்களையும் சிறப்புக்களையும் ஆளுமைகளையும் பெற்ற இவர் தினகரன் பத்திரிகையுடனான கலந்துரையாடலில்...

கலந்துரையாடியவர்,...
ஜீவராஜ்

**? நீங்கள் ஒரு பரத நாட்டியக் கலை பயிற்றுவிப்பாளர், நடன ஆசிரியையாக சில கருத்துக்கள்...**

பரத நாட்டியம் தமிழ் நாட்டில் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் தோன்றிய கலையின் கடவுளாக சிவபெருமான் திகழ்கிறார். இன்றும் அரங்கேற்றம் நடக்கும் போது முதலில் வணங்குவது நடராஜ பெருமானைதான். பரதத்தில் இலங்கையிலும் கைதேர்ந்த பலர் இருக்கின்றனர்.

பரதம் என்ற சொல்லுக்கு பல பொருள்கள் உள்ளன. இதில் ப என்ற எழுத்து "பாவம்" என்ற கருத்தை குறிக்கிறது. ர என்ற எழுத்து "ராகம்" என்ற கருத்தைக் குறிக்கிறது. த என்ற எழுத்து "தாளம்" என்ற கருத்தைக் குறிக்கிறது. ஆரம்பத்தில் தமிழகத்தில் இருந்த இந்தக் கலை இந்தியாவையும் தாண்டி உலகளவில் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

நவசரங்களை முகத்தில் வெளிப்படுத்தக் கூடிய இந்தக் கலையை ஆரம்பத்தில் இறைபணி செய்த தேவதாசிப் பெண்கள் ஆடி வந்தனர். இந்த நடனத்தை ஆடுவதற்கு இசைக் கருவி அவசியம். இசைக்கருவி இன்றி இந்த நடனத்தை ஆட முடியாது. இந்த நடனத்தின் மூலம் எந்த விதமான உணர்ச்சியையும் உணர்த்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**? நடனக்கலையைக் கற்று நடனக் கலையின் மேம்பாட்டை வளர்ப்பதற்காக அரும்பணியாற்றி வரும் நீங்கள் நடனக் கலைக்குள் பிரவேசிப்பதற்கான ஆர்வம் எப்படி வந்தது?**

ஆரம்பத்தில் என்னுடைய தாய் தந்தையும், நான் சிறு வயதாக இருக்கும் போது இந்த நடனத்தின் நுட்பத்தை விளங்கிக் கொண்டு எனது ஐந்து வயதில் பரத நாட்டியக் கலையைக் கற்பிக்க ஆர்வத்தோடு செயற்பட்டுள்ளார்கள். கால்பதித்த துறையில் முன்னேறிச் செல்வதற்கான உந்துதல்களை என்னுடைய பெற்றோர்களே அவ்வப்போது வழங்கி வந்தனர் என்று குறிப்பிடலாம். அந்த வகையில் நான் நடனக் கலையை முதலில் லீலாம்பிகை செல்வராசாவிடம்தான் கற்றேன்.

அவரிடம் படித்துக் கொண்டு செல்லும் போது அவருடைய மகள் செல்வாம்பிகை வீரசிங்கத்திடம் பயிற்றுவிப்பு ஆசிரியராக வரும் வரையிலும் கற்று முடித்தேன். மானிப்பாய் மகளிர் கல்லூரியில் படிக்கின்ற கால கட்டத்தில் எனது ஆசிரியை மதிவாணி விக்கிரமராஜாவிடமும் படித்தேன்.

2006 களில் பல்கலைக்கழகம் புகுவதற்கான அனுமதி கிடைத்தது. அங்கு 4 வருடம் படித்து விட்டு 2 வருடம் உதவிப் போதனாசிரியகராக செயற்பட்டேன். இந்தியா சென்னை பல்கலைக்கழகம் சென்று பட்டப்பின் படிப்பு முதுகலைமாணி கல்வி கற்று விட்டு 2016 களில் மன்னார் தொழில் நுட்பக் கல்லூரியில் அபிவிருத்தி உத்தியோகஸ்தராக கடமையாற்றினேன்.

30.12.2021 களில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்தில் போதனாசிரியராக நியமனம் கிடைக்கப்பெற்று தற்போதுவரை கடமையாற்றி வருகின்றேன். தற்போது ஐந்து மாத காலமாக நிரந்தர விரிவுரையாளராக கடமையாற்றுகின்றேன். அம்மா அப்பாவின் கனவை நிறைவேற்றி விட்டு அத்துறையில் போதனாசிரியராக கடமையாற்றக் கிடைத்தமை



என்பது என்னுடைய இலட்சியப் பயணத்திற்கு கிடைத்த பெரு வெற்றியாகும்

**? பரத நாட்டியக்கலையை வளர்ப்பதில் தனியாக செயற்பட்டு வருகின்றீர்கள்? அதன் செயற்பாடுகள் தொடர்பில்...**

பரத நாட்டியக் கலையைப் பொறுத்த வரையில் பிள்ளைகள் ஆர்வம் காட்டுவதைவிட பெற்றோர்கள்தான்அதிகம்ஆர்வம்காட்டுகின்றார்கள் என்பதுதான் உண்மை.

நான் பிரத்தியேகமாக என்னுடைய அம்மாவின் பெயரில் லலித நர்த்தனாலாய நடனக் கல்லூரியை நடத்தி வருகின்றேன். 2009 களில் தான் இந்த நடனக் கல்லூரியை ஆரம்பித்தேன். அன்று முதல் இன்று வரையும் நடனக் கலையை நடத்திக் கொண்டுதான் வருகின்றேன். இதற்கு பெரிய பிள்ளைகள் எடுப்பதில்லை. எப்பொழுதும் சின்னப்பிள்ளைகளைத் தான் எடுக்கின்றோம். அவர்களைப் பயிற்றுவித்து பரத நாட்டியக் கலைக்கு உயிர் கொடுத்து வருகின்றோம்.

என்னிடம் படிப்பதற்கென மூன்று வயதில் இருந்தே பிள்ளைகள் வருவார்கள். நான் ஆரம்பத்தில் இதனை இலவசமாக கற்பிக்கத் தொடங்கினேன். ஆனால் பெற்றோர்களும் பிள்ளைகளும் இலவசமாக நடத்துவதை பெரியளவில் கவனத்தில் கொள்வதில்லை. அவர்கள் ஒழுங்காக வரமாட்டார்கள். இலவசமாகப் படிப்பிப்பதால் எப்போதும் சும்மா படிக்கலாம் என்ற எண்ணம் பிள்ளைகளுக்கு இருந்தது. ஆதலால் ஒரு ஒழுங்கான சீர் முறைக்கு கொண்டு வர வேண்டும் என்ற திட்டத்தோடு ஆரம்பத்தில் ரூபா 100 கட்டணமாக அறவிட்டோம். அதற்குப் பின்னர் பிள்ளைகள் ஒழுங்காக வந்தார்கள்.

> நான் பரதக்கலையின் மூலம் வருமானத்தை ஈட்ட வேண்டும் என்று படிக்கவில்லை. படித்த கலையை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று தான் படித்தேன். இதை படிப்பதனால் இவ்வளவு வருமானம் ஈட்டலாம் என்று நான் யோசிக்கவும் இல்லை. நான் அதற்காக படிப்பிக்கவும் இல்லை...

என்னை அப்பாதான் நடனம் படிக்க விட்டவர். எனினும் இதில் அம்மாவுக்குத் தான் அதிகம் ஆர்வம் இருந்தது. இருந்த போதிலும் பிரத்தியேகமான நடனம் கற்பிக்கும் போது பணம் அறவிடக் கூடாது என்று தந்தை ஒரு கட்டளையிட்டியிருந்தார்.எனினும் துரதிருஷ்டவசமாக அப்பாவின் கட்டளையை நிறைவேற்ற முடியவில்லை. ஏனென்றால் காசு வாங்காமல் இலவசமாகப் படிப்பிப்பதிலே பிள்ளைகளுக்கு அதன் அருமை தெரிவதில்லை. நாங்கள் கஷ்டப்பட்டுப் படிப்பிக்கும் போது பிள்ளைகள் ஒழுங்காக வந்து படித்தால் தானே அது ஒழுங்காய் போய் சேரும். அதனால் தான் நாங்கள் காசு வாங்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தோம்.

ஆனாலும் இதற்காக நாங்கள் கட்டாயப்படுத்துவதில்லை. எந்தப் பிள்ளையையும் கட்டாயப்படுத்தி காசு அறவிடுவதில்லை என்ற திட்டம் வைத்திருந்தோம். காசு தந்தால் வாங்குவோம் என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகிறோம்.

என்னுடைய நடனக் கல்லூரியில் ஆறு பிள்ளை மட்டில் படித்து முடித்துச் சென்றுள்ளார்கள். அவர்கள் வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்து சான்றிதழ்களைப் பெற்றுள்ளார்கள். கடைசியாக வழங்கப்படும் பயிற்றுவிப்பாளர் ஆசிரியர் தரம் ஆறுக்கான பரீட்சைக்குத் தோற்றி சான்றுகளைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் நடனக் கலை கல்வி பயிலும் மாணவிகள் உள்ளார்கள்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அதிகம் காசு செலவுசெய்ய வேண்டும். ஆறு பிள்ளைகளில் ஒரு பிள்ளை மட்டும்தான் பயிற்றுவிப்பாளர் கடைசிப் பரீட்சையான ஆறாம்தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளார். ஒவ்வொரு வருடமும் நான் 10 பிள்ளைகள் வரையில் பரீட்சைக்கு அழைத்துச் செல்லுவேன். ஏன்னுடைய நடனக் கல்லூரியில் 80 பிள்ளைகள் கற்கின்றனர். இதில் வருமானம் என்று எவற்றையும் எதிர்பார்ப்பதில்லை. என்னுடைய இலட்சியம் நடன கலையின் மேம்பாட்டை வளர்க்க வேண்டும் என்பதாகும்.இன்று என்னிடம் படித்த பிள்ளைகள் தனியாக வகுப்புக்கள் நடத்தி சாம்பாதித்து வருகின்றார்கள். பிரபல்யமான நடன ஆசிரியர்களாக இருக்கிறார்கள். இதுவே நான் அடையும் மனத்திருப்தியுமாகும்.

**? காவேரி கால மன்றத்திற்கும் உங்களுக்குமிடையே தொடர்பு எவ்வாறு ஏற்பட்டது?**

**ஒருவர் கல்வித்துறையில் முன்னேறுவதற்கு திறனும் ஆற்றலும் இருந்தால் மட்டும் போதாதது. கைகொடுத்து தூக்கி விடுவதற்கு யாராவது ஒருவர் தேவை.படித்து விட்டு ஒரு எல்லையில் முற்றுப் புள்ளி வைத்து நின்று விடாமல் தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற கல்வித் தாகம் உள்ளத்திலே கிளர்ந்து வெளிவந்த போதிலும் அதன் வினாக்களுக்கு விடையளிக்கும் ஒருவர் இருத்தல் வேண்டும். அப்படி கைகொடுத்து தூக்கி விட கூடிய ஒருவர் இல்லா விட்டால் முன்னோக்கி நகர்ந்து செல்ல முடியாது. எடுத்துக் காட்டாக என் கணவர் ஓர் சித்திரக் கலைஞர். கற்றலையும் கற்பித்தலையும் நன்கு அனுபவத்தோடு சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளக் கூடியவர். ஆனால் அவருடைய ஆற்றலையும் கைத்திறனையும் மதிநுட்பத்தோடு அறிந்து கொள்ள ஒரு பெரியார் இருந்தார். அவர்தான் பாதர் யோசுவா அவர்கள். எனது கணவருடைய பட்டப்பின் படிப்புகளுக்கு அடியெடுத்துக் கொடுத்தவர் என்பதை என் கணவர் பல இடங்களில் பேசியுள்ளமையையும் வியந்து நன்றி கூறியுள்ளமை பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் கண்ணியத்துடன் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இன்று சமூகப் பணியிலும் ஆன்மீகப் பணியிலும் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பாதர் யோசுவா என்றால் அது வேறுயாராகவும் இருக்க முடியாது. கல்விக்காக உதவி புரிய வேண்டும் என்ற சிந்தனைத் தெளிவும் நேர்மையும் சிறந்த குணமும் உடையவர். என்னுடைய கணவருடைய கல்வி மேம்பாட்டுக்கு அவர் வழங்கிய ஒத்துழைப்பையும் நல்லாதரவையும் பங்களிப்பையும் வைத்து நான் அவரைக் காணுகின்றேன்.**

என் கணவர் இந்தியா பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பினை மேற்கொள்ளவும் அதனை தொடர்ந்து கலாநிதிப்பட்டம் வரைக்கும் சென்று படிப்பதற்கு உதவி செய்தவர். காவேரி கலா மன்றத்தின் தலைவர் வண பிதா யோசுவா அவர்கள்தான். கல்வி மேல்படிப்பு பட்டம் பெறுவதற்கான முழுச் செலவையும் செய்தவர். அதன் மூலம் தான் எனக்கு அறிமுகமானார். கணவரின் பெயர் வேலுப்பிள்ளை வசந்த ரூபன்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகஸ்தராக கடமையாற்றுகிறார். அவர் சித்திரப் பாடங்கள் கற்பிப்பார். சித்திரப் பாடத் துறையில் கலாநிதி பட்டம் படித்துக் கொண்டிருக்கிறார்.



















**? நடனக் கலைத்துறையில் நீங்கள் அடைந்த பெறுமானம் பற்றிக் கூறுவீர்களா?**

ஆரசினால் நடத்தப்படும் பல நடனப்போட்டிகளில் பங்கேற்று முதல் பரிசுகள் பல பெற்று இருக்கின்றேன். 2010 ஆம் ஆண்டு அகில இலங்கை மட்டத்தில் நாட்டியமயில் போட்டி நடைபெற்றது. அதில் முதலிடம் பெற்றேன். 2008 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்றுவிப்பாளர் கலாவித்தகர் பட்டம் பெற்று இருக்கின்றேன். இரு முதுகலைமாணி பட்டப் பின் படிப்புக்கள் நிறைவு செய்துள்ளேன். 2021 இல் வட மாகாண சபையின் இளம் கலைஞர் விருதும் கிடைக்கப்பெற்றது.

**? பரதநாட்டியக் கலை குறித்து இன்றைய நிலையில் உங்கள் கருத்து என்ன?**

பரதக் கலை கற்பதில் பிள்ளைகளுக்கு விருப்பமாகத் தான் இருக்கிறது. ஆனாலும் பிள்ளைகள் வெவ்வேறு வகுப்புக்ளுக்குச் செல்வதால் சீரான முறையில் வகுப்புக்களுக்கு வருவதில்லை. இடைக்கிடையே விட்டு விட்டுத் தான் வருவார்கள். சிலர் வராமலே நின்று விடுவார்கள். புலமைப்பரிசில் பரீட்சை வந்தால் பெற்றோர்களே நிறுத்தி விடுவார்கள்.

பரீட்சை என்று வரும் போது பிள்ளைகள் வருவது குறைந்து விடும். எப்படி இருந்தும் பிள்ளைகள் ஆர்வமாகத் தான் இருக்கிறார்கள். பாடசாலைக் கல்வி, இக்கலையை தொடர்வதில் சிரமத்தை ஏற்படுத்தி விடுகின்றன. இதனால் பிள்ளைகள் நாட்டம் கொள்வது ரொம்ப குறைந்து வருகிறது.

ஒவ்வொரு ஊருக்குள்ளே பாடசாலை பிள்ளைகளுக்கான வகுப்புக்கள் நடப்பதால் பாடசாலை கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் வேறு எந்த வகுப்புகளுக்கும் செல்லக் கூடாது என்று பிள்ளைகளுக்கு அழுத்தம் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனாலும் பிள்ளைகள் பாடசாலையில் வேறு பாடங்களை எடுத்துக் கொண்டு நடனத்தை படிக்கின்ற பிள்ளைகள் இல்லாமலும் இல்லை. அநேக பிள்ளைகள் படித்துக் கொண்டும் நடனமும் கற்றுக் கொள்கிறார்கள்.

விஞ்ஞானம், கணிதப் பிரிவில் கல்வி கற்கும் மாணவிகளும் இந்தப் பரதக் கலையை கற்றுக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

இந்த கலையின் மூலம் வருமானம் ஈட்ட வேண்டும் என்ற நோக்கில் செய்யவில்லை. நான் இக்கலையின் மூலம் வருமானத்தை ஈட்ட வேண்டும் என்று படிக்கவில்லை. படித்த கலையை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று தான் படித்தேன். இதை படிப்பதனால் இவ்வளவு வருமானம் ஈட்டலாம் என்று நான் யோசிக்கவும் இல்லை. நான் அதற்காக அப்படி படிப்பிக்கவும் இல்லை.

கொழும்பிலுள்ளவர்கள் இத்துறையில் பெரியளவில் சம்பாதிக்கிறார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் அப்படி இல்லை. யாழ்ப்பாணத்தில் எல்லோரும் சேவை நோக்கம் கருதியே பரதக் கலையை பயிற்றுவித்து வருகிறார்கள்.

என்னுடைய முழு நோக்கமும் பரத நாட்டியக் கலையின் மரபு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே.

நடனத்தின் வடிவம் வளர்க்கப்பட வேண்டும் என்ற உறுதியான சிந்தனையோடு ஒரு நுண்கலை போதனாசிரியராக கடமையாற்றி வருகின்றேன்.

# மக்கள் பிரிந்து நின்றமையே பின்னடைவுகளுக்கு காரணம்

### பிரஜா சக்தி திட்டத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி





(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கு மக்கள் பிரிந்து நின்றமையே ஓர் காரணமாகும். என இ.தொ.காவின் உப தலைவரும், பிரஜா சக்தி திட்டத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

நாவலப்பிட்டி இம்புல்பிட்டிய பிரதேசத்துக்கான குடிநீர் திட்டத்தினை திறந்து வைக்கும் வைபவம் இடம்பெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளருமான பாரத் அருள்சாமியின் வேண்டுக்கோளிற்கு அமைவாக ஹல்நூர் தொண்டு நிறுவனத்தின் ஒரு கோடி ரூபா நன்கொடையின் கீழ் இத்திட்டம் நிர்மாணிக்கப் பட்டது.

குடிநீர் திட்டத்தின் மூலம் இப்பகுதியை சேர்ந்த 600 குடும்பங்களை உடைய 1500 பயனாளிகள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

30 வருட காலமாக குடிநீர் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வந்த இம்புல்பிட்டிய பிரதேச மக்களுக்கு குடிநீர் திட்டத்தை செய்துக் கொடுத்த ஹல்நூர் தொண்டு நிறுவனத்தினருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளருமான பாரத் அருள்சாமி பொன்னாடை போர்த்தி ஞாபகார்த்த சின்னங்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" நாட்டு மக்களுக்கு இன்று ஏதேனுமொரு விடயத்துக்காக வரிசைகளில் காத்துக்கிடக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை வெகுவிரைவில் மாறி, இயல்பு நிலை திரும்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எனவே, மக்கள் நலன் கருதி முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிச்சயம் ஆதரவு வழங்கும்.

இனம், மதம், மொழி, கட்சி என 'பிரித்தாளும் தந்திரம்' மூலம் தமது இருப்புகளை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசியல் வாதிகள் முற்பட்டனர். அந்த மாய வலைக்குள் மக்களும் சிக்கினர். இன்றைய பின்னடைவுக்கு மக்கள் பிரிந்து நின்றமையும் ஓர் காரணம். எனவே, நாம் இலங்கையர்களாக பயணிப்போம்.

சிறப்பான கொள்கைகளை முன்வைப்பவர்களை ஆதரிப்போம். அதனால்தான் தற்போதை சூழ்நிலையில் இ.தொ.கா. நடுநிலை நிலைப்பாட்டை வகித்துவருகின்றது." என்றார்.

இந்நிகழ்வில் ஹல்நூர் தொண்டு நிறுவனத்தின் தலைவர் மொகமட் அலியார், பணிப்பாளர் ரகு இந்திரகுமார் மற்றும் பொதுமக்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மஸ்கெலியா சென் ஜோசப் தேசிய கல்லூரி மற்றும் புளூம்பீல்ட் தேசிய கல்லூரிகளில் கல்வி பயிலும் தரம் 6 தரம் 7, தரம் 11, தரம் 12, மாணவர்கள் 600 பேருக்கு கொவிட் 2 ஆவது தடுப்பூசி, ACT தடுப்பூசிகள், HUV தடுப்பூசி வழங்கப்பட்டதாக பொது சுகாதார மேற்பார்வை அதிகாரி பி.ஏ.பாஸ்கரன் தெரிவித்தார். இந்நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச பொது சுகாதார அதிகாரிகள் நரேந்திர குமார் மற்றும் சுகாதார பிரிவினர் கலந்து கொண்டு தடுப்பூசி வழங்கினர்.

படம் மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

## வேலு யோகராஜுக்கு எதிராக இ.தொ.கா ஒழுக்காற்று விசாரணை

நுவரெலியா பிரதேச சபையின் தலைவர் வேலு யோகராஜுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை நேற்று இடம் பெற்றதுடன் இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதிர்வரும் திங்கட் கிழமை அவருக்கு உத்தியோகபூர்வ கடிதம் மூலமாக அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை, விசாரணைகளையடுத்து வேலு யோகராஜ் தமது இ.தொ.கா உபதலைவர் பதவியை இராஜனாமா செய்துள்ளார்.

வேலு யோகராஜுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஒழுக்காற்று நடவடிக்கைக்குழு அதன் தலைமையகமான சௌமிய பவனில் நேற்று கூடியது. நுவரெலியா பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட கந்தபளை நகரில் நுவரெலியா பிரதேச சபைக்கு அரசாங்கம் வழங்கிய காணி தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் நேற்று முழுமையாக ஆராயப்பட்டு, வேலு யோகராஜிடம் விசாரணை நடத்தப்பட்டது. எதிர்வரும் திங்கட் கிழமை இவ்விசாரணையின் முடிவுகள் வேலு யோகராஜுக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் அறிவிக்கப்படவுள்ளது.


OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
SINCE 1978 44th
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் **OBSERVER SLT- MOBITEL** மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ........................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ........................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ........................
வாக்களித்தவர் பெயர் : ........................
முகவரி : ........................
மொபைல் இல. : ........................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 18-06-2022 இல. 12




MOBILE
வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
OOKLA® தடையற்ற தொடர் வெற்றியை கடந்த 3 வருடங்களாக SLT-MOBITEL பதிவு செய்துள்ளது!
SLT-MOBITEL மீண்டும் ஒரு முறை இலங்கையின் முதன்மையான அதிவேக வலையமைப்பாக OOKLA® Speedtest® விருதினை வென்றுள்ளது.
இன்றே SLT-MOBITEL உடன் இணையுங்கள்!
SPEEDTEST AWARDS FASTEST 2021 2020 2019
www.sltmobitel.lk
SLTMOBITEL


# நான் விலகப்படவில்லை விலகினேன் என்பதே உண்மை

### பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பதவியிலிருந்து நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ் விலகினார் அல்லது விலக்கப்பட்டார் என்ற சர்ச்சை எழுப்பப்பட்டுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஊடகங்களுக்கு கடந்த (15) புதனன்று வழங்கியுள்ள கருத்தில் வேலு யோகராஜ் காங்கிரஸின் உப தலைவர் பதவியிலிருந்து விலகி விட்டதாக ஊடகங்களுக்கு அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் சில ஊடகங்களில் வேலு யோகராஜ் விலக்கப்பட்டார் என இரு மாறுபட்ட செய்திகள் வெளியாகியுள்ளது.

ஆகையால் இது தொடர்பில் வேலு யோகராஜிடம் வினவியப்போது தான் காங்கிரஸின் உப தலைவர் பதவியிலிருந்து விலக்கப்படவில்லை தானாகவே விலகிக்கொண்டதாக மாற்று கருத்தின்றி பதில் தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க கந்தப்பளையில் சர்ச்சைக்குள்ளான காணி விவகாரம் தொடர்பில் உரிய ஆவணங்கள் தொடர்பில் காங்கிரஸின் ஒழுக்காற்று குழு (15) அன்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் தான் காங்கிரஸ் உப தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளதாக தனது உத்தியோகபூர்வ வட்சப் ஊடாக குரல் பதிவை பகல் 2.45 மணியளவில் ஊடகங்கள் சிலவற்றுக்கு பதிவிட்டிருந்தார்.



ஆனால் இவர் பதவி விலகியுள்ளேன் என அறிவித்ததன் பின்னரே காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்திருந்தார். இதன் காரணமாக தற்போது வேலு யோகராஜ் பதவி விலகினார்,அல்லது விலக்கப்பட்டார் என்ற சர்ச்சை எழுந்துள்ளது. இருப்பினும் வேலு யோகராஜ் தனது உப தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொண்டமையே உண்மையாகும் என்பதை இவர் உட்பட காங்கிரஸில் பலரும் தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில் கந்தப்பளை காணி விவகாரம் தொடர்பில் வேலு யோகராஜியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் தீர்ப்பு அறிக்கை காங்கிரஸின் ஒழுக்காற்று குழுவினால் எதிர்வரும் திங்கட் கிழமை உத்தியோகப்பூர்வமாக வேலு யோகராஜிக்கு கடிதமூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளது என்பதை காங்கிரஸ் உயர் பீடம் அறிவித்துள்ளது.

ஆ.ரமேஸ்

## ஹற்றனில் ஆர்ப்பாட்ட பேரணி



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

சர்வதேச வீட்டு தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஹற்றனில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டது.

புரொடெக்ட் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்ட பேரணி ஹற்றன் மல்லியப்பு சந்தியில் ஆரம்பமானது. 300ற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றிருந்தனர். பின்னர் ஹற்றன் தொழில் திணைக்களத்திற்கு பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு தொழில் ஆணையாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

வீட்டுப்பணியும் ஒரு தொழில் தான். எனவே வீட்டுப் பணியாளரையும் தொழிலாளியாக கருது என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டதோடு, பதாதைகளும் ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வீட்டு உரிமையாளர்களின் தொழில் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் உள்ளிட்டவற்றை வழங்குவதற்கான விசேட சட்டம் இயற்றப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

அதேவேளை, நாட்டில் பொருட்களின் விலைகள் தொடச்சியாக அதிகரிக்கப்பட்டு வருவதால் தொழிலாளர்களுக்குரிய வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். வரிசை யுகத்திற்கு முடிவு கட்டப்பட வேண்டும் எனவும் போராட்டத்தின் போது வலியுறுத்தியமை குறிப்பிடதக்கது.

## ஹற்றனில் கடும் வாகன நெரிசல் போக்குவரத்து ஸ்தம்பிதம்



ஹற்றன் விசேட நிருபர்

ஹற்றனில் நேற்று மாலை கடும் வாகன நெரிசல் காணப்பட்டது. இதனால் பொது போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. ஹற்றன் நகரிலுள்ள எண்ணெய் நிரப்பு நிலையமொன்றில் டீசல் விநியோகம் இடம்பெற்றதை தொடர்ந்து ஹற்றன் கொழும்பு பிரதான வீதி, சுற்றுவட்ட வீதி, ஹற்றன் டிக்கோயா வீதி உள்ளிட்ட வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

வாகன நெரிசல் காரணமாக அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் நோயாளர் காவு வண்டி மற்றும் பொது போக்குவரத்து என்பன அரை மணித்தியாலத்திற்கு மேல் பாதிப்புக்குள்ளாகின.

நெரிசல் காரணமாக சுற்றுவட்ட பிரதேசத்தில் முச்சக்கர வண்டியொன்றும் லொறியொன்றும் ஒன்றோடு ஒன்று உரசி இறுகியதன் காரணமாக வாகன நெரிசல் மேலும் வலுவடைந்தன.

அதனைத்தொடர்ந்து ஹற்றன் போக்குவரத்து பொலிஸார் வாகனங்களை ஒழுங்குபடுத்தியதனை தொடர்ந்தே போக்குவரத்து வழமை நிலைமைக்கு திரும்பின.



பதுளை – ரொக்கில் அருள்மிகு ஸ்ரீ முருகப் பெருமான் தேவஸ்தான மண்டலாபிஷேக ஆரம்ப விழா நேற்று நடைபெற்றது. தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் க.ஜெயநாயகத்திற்கு பிரதம குருக்கள் கிரீடம் அணிவிப்பதையும், காளாஞ்சி பெறுவதையும், கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

படம் பதுளை தினகரன் விசேட நிருபர்

## மலைக்குருவி கூடுகளுடன் இருவர் கைது

லுணுகல நிருபர்



மலைக்குருவி கூடுகளுடன் இருவர் பதுளுபிடியை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்து இலட்சத்துக்கும் அதிக பெறுமதி கொண்ட மலைக்குருவி கூடுகள் இரண்டரைக் கிலோவுடன் இருவரை நேற்றுமுன்தினம் 15 ஆம் திகதி மாலை பதுளுபிடியை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதுளை தெய்யனே வலையில் வசிக்கும் 44 வயதுடைய ஒருவரும் சொரணதொட்ட பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்ட 47 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.